# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை:9 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 10 சனிக்கிழமை (22-04-2000) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்:47


# இயக்கச்சியை கைப்பற்றுவதில் புலிகள் தீவிரம்

# யாழ்., வன்னித் தளபதியாக ஜெனரல் ஜானக பெரேரா!



கொழும்பு,ஏப்.22

ஆனையிறவுத் தளம் மீதான புலிகளின் தாக்குதல் தீவிரம் அடைந்து வரும் நேரத்தில் வன்னி, யாழ்ப்பாண மாவட்டங்களுக்கான இராணுவ நடவடிக்கைத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

பதவியை ஏற்றுக்கொண்ட அவர் நேற்று முன்தினமே பலாலிக்கு வந்து சேர்ந்தார்.

இராணுவத்தின் துணை சிரேஷ்ட அதிகாரியான **(Deputy Chief Of Staffs)** மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா வன்னித் தளபதி என்ற பொறுப்புக்கு மேலதிகமாக யாழ். மாவட்டத்தின் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

குடாநாட்டில் புலிகளின் தாக்குதல்களை முறியடிப்பதற்கு எடுக்கப்படவேண்டிய அவசர - அவசிய - நடவடிக்கைகள் குறித்தும -

புதிதாக வகுக்கப்பட வேண்டிய வியூகங்கள் குறித்தும் அவர் பலாலியில் படை அதிகாரிகளுடன் ஆராய்ந்துவருகின்றார்.

1995-1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் குடாநாட்டை இலங்கை இராணுவத்தினர் மீளக்கைப்பற்றிய போது வலிகாமம் மற்றும் தீவகப் பகுதிகளில் நிலை கொண்டிருந்த 51ஆவது படையணியின் கட்டளைத் தளபதியாக **(General Officer Commanding)** இவர் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## முன்னணி நிலைகளை ராணுவம் மாற்றியமைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்ரல்22

**ஆனையிறவுக்கு வடக்கே புதிய தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கும் விடுதலைப்புலிகள், இயக்கச்சியை இராணுவத்திடமிருந்து கைப்பற்றுவதில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

ஆனையிறவுச் சமர் தொடர்பாக செய்தி ஏஜென்ஸிகள் வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

குடாநாட்டில் படைகளின் நிலைமை மிக மோசமாகி வருகின்றது. 20ஆயிரம் துருப்புக்கள் கனரகப் பீரங்கிகள் மற்றும் விமானப் படை, கடற்படையின் உதவியுடன் புலிகளுடன் மோதிவருகின்றனர்.

புலிகளுக்குப் பேரிழப்பை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

இயக்கச்சித் தளம் தம்வசம் வீழும் நிலையில் இருப்பதாகவும -

அந்தத் தளத்தின் ஆயுதக் களஞ்சியம் வெடித்துச் சிதறிவிட்டது என்றும் - புலிகள் கூறுகின்றனர்.

இது தொடர்பாகக் கருத்து தெரிவிக்காத பாதுகாப்பு அமைச்சு படையினர் முன்னணிப் பாதுகாப்பு நிலைகளை மாற்றி அமைத்துள்ளதாக மட்டும் கூறியுள்ளது.

இயக்கச்சியைச் சூழவுள்ள பகுதிகளில் கடும் சண்டை நடப்பதாகவும் -

அந்த முகாம் மீது புலிகள் தீவிர தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்றும் -

படையினர் பதில் தாக்குதல் நடத்துவதாகவும் -

ரோய்ட்டர் நேற்று அறிவித்தது.

படையினர் விரைந்து செயற்படாவிட்டால் 1996இல் படையிடம் இழந்த குடாநாட்டை புலிகள் மீண்டும் கைப்பற்றும் நிலை ஏற்படலாம் என்று பி.பி.ஸி தெரிவித்தது.

(உ-3-4-7)

## விநியோகப் பாதை பற்றி முரணான தகவல்கள்

கொழும்பு,ஏப்.22

ஆனையிறவு அருகே கடும் சண்டை நடைபெறுகையில்-கண்டி வீதியையும் அதற்கு அருகில் உள்ள ரயில் பாதையையும் கைப்பற்றி ஆனையிறவுக்கான விநியோகப் பாதையைத் துண்டித்து விட்டதாகப் புலிகள் அறிவித்துள்ளனர். ஆனால் பாதையை தொடர்ந்து படையினர் பாதுகாத்து வருகின்றனர் என இராணுவப் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

(உ-3)

### இயக்கச்சியை இழந்தால்

## ஆனையிறவுத் தளத்துக்கு குடிதண்ணீரே கிடையாது!

இயக்கச்சிப் பிரதேசத்தை விடுதலைப் புலிகளிடம் அரசப் படைகள் இழக்குமானால் ஆனையிறவுத் தளத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் கூடத் தடைப்பட்டு விடும்.

- இவ்வாறு பி.பி.ஸியின் சந்தேசிய சிங்கள் சேவைக்கு வழங்கிய பேட்டியில் கொழும்பு இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் தெரிவித்தார்.

இயக்கச்சிக்கருகே தொடர்ந்து சண்டை நடைபெற்றுவருவதால் இயக்கச்சி நகரப் பகுதி புலிகளிடம் வீழும் நிலை ஏற்பட்டிருக்கலாம்.

"அப்படி நடந்திருந்தால் ஆனையிறவில் உள்ள படையினர் மிகுந்த நெருக்கடியை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

ஆயுதம், உணவுப் பொருள் விநியோகம் மட்டுமன்றி குடிதண்ணீருக்கே தட்டுப்பாடான நிலையை ஆனையிறவுப் படையினர் எதிர்நோக்க வேண்டிவரும்.

ஆனையிறவில் நல்ல குடிதண்ணீர் பெறுவதற்கான வசதி ஏதும் கிடையாது. அங்குள்ள கிணறுகள் அனைத்திலும் உவர்தண்ணீர் உள்ளது. இயக்கச்சி, சோரன்பற்று, மாசார் பகுதிகளில் இருந்தே ஆனையிறவுத் தளத்துக்குக் குடிதண்ணீர் வசதி வழங்கப்பட்டு வந்தது. - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(உ)

## தொலைபேசி தொடர்ந்து "அவுட்"

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்ப்பாணத்துக்கும் வெளியிடங்களுக்குமான தொலைபேசிச் சேவை இரண்டாவது நாளாக நேற்றும் செயலிழந்திருந்தது.

ஆனையிறவுப் பகுதியில் உள்ள தொலைத்தொடர்புக் கோபுரத்தில் ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படும் தடங்கல் நிலையைச் சீராக்குவதற்காக படை அதிகாரிகளுடன் ரெலிக்கொம் நிறுவன அதிகாரிகள் நேற்று தொடர்பு கொண்டனர்.

அதற்குச்சாதகமான பதில் கிடைக்கவில்லை என்று கூறப்பட்டது.

(உ-3-15-139)

## விமானக் கடத்தல் புரளி

லண்டன்,ஏப்.22

லண்டனில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்படயிருந்த 'ஸ்ரீலங்கா ஏயர்' சேவையின் விமானம் ஒன்று, கடத்தப்படவிருப்பதாகக் கடைசி நேரத்தில் கிடைத்த தொலைபேசி தகவலை அடுத்து நான்கு மணி நேரம் தாமதித்து கடுஞ் சோதனைக்குப் பின்னர் அந்த விமானம் பயணத்துக்கு அனுமதிக்கப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் லண்டன் ஹீத்ரோ விமானநிலையத்தில் இடம் பெற்றுள்ளது.

(உ-7)

## மட்டக்களப்பில் ஷெல் தாக்குதல்

மட்டக்களப்பு,ஏப்.22

மட்டக்களப்பு -வவுணதீவு வாவியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் மீது விடுதலைப்புலிகள் நேற்றுக்காலை ஷெல்தாக்குதல் நடத்தினர் என படைத்தரப்பு அறிவித்துள்ளது.

ஆனால் கடற்படையினருக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இந்தச்சம்பவத்தை அடுத்து இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டன எனவும்-

இதனால் கன்னன்குடா கண்ணகி அம்மன் ஆலயத்தின் முன் பகுதி பலத்த சேதமடைந்ததாகவும் மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன.

(உ-7)

## வயோதிபர் காயம்

கைதடியில் நேற்றுக்காலை இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு 63 வயது வயோதிபர் ஒருவர் காயமடைந்தார்.

கைதடி சைவச் சிறுவர் இல்லப் பொறுப்பாளரான - பருத்தித்துறையைச் சேர்ந்த - க.வை.தர்மராஜதுரை என்பவரே இந்த விபத்தில் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-5)

## கூட்டுப்படைகளின் தளபதியாக ஜெனரல் தளுவத்த நியமனம்

பாதுகாப்புப் படைகளின் கூட்டு நடவடிக்கைத் தளபதியாக ஜெனரல் றொஹான் தளுவத்த ஜனாதிபதியால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவத் தளபதியாக முன்பு பணிபுரிந்து வந்த இவர் ஓய்வுபெற்ற பின்னர் கூட்டுப்படைகளின் நடவடிக்கை சபைத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

அப்போது அவருக்கு படை நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையை படை நடவடிக்கைகளில் இருந்து ஓரங்கட்டும் செயற்பாட்டின் மற்றோர் அங்கமாக தளுவத்தைக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படு

(10ஆம் பக்கம் பார்க்க)

### ஆனையிறவு நிலை குறித்து ஆராய்வு

## ரட்ணசிறி தலைமையில் பாதுகாப்புக் கவுன்ஸில்!

### உடனே முப்படைத் தளபதிகளும் பலாலிக்கு

கொழும்பு,ஏப்.22

ஆனையிறவைச் சூழவுள்ள பகுதிகளில் விடுதலைப்புலிகள் புதிதாக ஆரம்பித்துள்ள தாக்குதல்களை முறியடிப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து பாதுகாப்புக் கவுன்ஸில் நேற்று முன்தினம் கூடி விரிவாக ஆராய்ந்தது.

ஜனாதிபதியின் பொறுப்புக்களை ஏற்றுள்ள பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் முப்படைத் தளபதிகளும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டம் முடிவடைந்த கையோடு முப்படைத் தளபதிகளும் பலாலிக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தனர் என்று இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

(உ-3)

## இராணுவ தளபாட உற்பத்தி தொழிற்சாலை தெற்கில்!

கொழும்பு,ஏப்.22

இராணுவத்தினருக்குத் தேவையான சகல வகையான பொருள்களையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று அம்பாந்தோட்டையில் விரைவில் நிறுவப்படவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் விசேட பணிப்பின் பேரில் சுமார் 23கோடி 20லட்சம் ரூபா செலவில் இந்தத்தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளதாக கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி.வி. குணரட்ண தெரிவித்தார்.

சர்வதேசரீதியாக இராணுவத்தினர் அனுபவிக்கும் வசதிகள் இலங்கை இராணுவத்தினருக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே சர்வதேச தரத்தில் அமைந்த பொருள்கள் இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் எனவும் -

இந்தத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு 105ஏக்கர் பரப்பளவு கொண்ட காணி தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் -

அமைச்சர் குணரட்ண தெரிவித்தார்.

(உ-7)

## கதிர்காமர் திரும்பிய பிறகே நோர்வே பிரதிநிதி வருவார்?

கொழும்பு,ஏப் 22

வைத்திய சிகிச்சைக்காக இந்தியா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நாடு திரும்பிய பின்னரே நோர்வே நாட்டின் பிரதிநிதி இலங்கை வருவதற்கான திகதி நிர்ணயிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

அமைச்சர் கதிர்காமர் இம்மாத இறுதியில் நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இனப்பிரச்சினை விவகாரத்தில் மூன்றாம்தரப்பு பங்களிப்பை வழங்கி

(10ஆம் பக்கம் பார்க்க)

# சேவை நலன் பாராட்டல்



யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பிரதி அதிபரும்
பழைய மாணவர் சங்கத்தின் உபதலைவியுமான

## செல்வி யோகேஸ்வரி கந்தையா

B.A, Dip in Ed., M.A, S.L.T.S Class I.

யா. இ. ம. கல்லூரியில் படித்த காலம்
14.02.1950 - 25.11.1960
முதல் நியமனம்: பட்டதாரி ஆசிரியர்
கிளி/ உருத்திரபுர மகாவித்தியாலயம்
07.09.1966 - 28.02.1972

**இடமாற்றம்:-**
யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி 01.03.1972 - 14.03.1972
யா/ இந்து மகளிர் கல்லூரி 15.03.1972
பகுதித் தலைவர் நியமனம் 13.09.1984
உப அதிபர் நியமனம் 01.01.1991
பிரதி அதிபர் நியமனம் 01.02.1994

**விரிவுரையாளர்:-**
பட்டப்பின் கல்வி டிப்புளோமா (19.03.1992)
ஆசிரியர் பயிற்சி (PGDE)
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
(நிலையம் -08 யா. இ. ம. க)

கல்வி உலகில் முப்பதாண்டுகள் அரும்பணியாற்றி விசேடமாக யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இருபத்தெட்டு ஆண்டுகள், ஆசிரியர், பகுதித்தலைவர், உப அதிபர், பிரதி அதிபர் ஆகிய பதவிகளில் சிறப்புற பணியாற்றியுள்ளார். அத்துடன் இப்பகுதி வசதி குறைந்த பிள்ளைகளுக்கு பல வழிகளிலும் உதவிகள் நல்கி அவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு வழிவகுத்துள்ளார்.

கல்வி உலகில் நீண்டகாலம் அரும்பணி புரிந்து இன்று (22.04.2000) ஓய்வு பெறும் செல்வி யோகேஸ்வரி கந்தையா அவர்கள் சகல நலன்களுடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

(75655) *- நலன் விரும்பிகள்.*


## மது பாரத் வித்தியா நிலையம்

* **O/L DAY CLASS**
முழுநேர பகல் வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
அனைத்துப் பாடங்களும் காலை 8.00 தொடக்கம் 2.00 மணி வரை.
* கணிதம், ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து மீட்கப்படுகின்றன.

கணிதம் : 9.00 - 10.00 ஆரம்ப அறிவு மீட்டல்
கணிதம் : 12.00- 1.00 பாட அலகு ஆரம்ப அறிவிலிருந்து மீட்டல்
கணிதம் : மாலை 5.00 - 6.00 கேத்திரகணிதம் ஆரம்ப அறிவிலிருந்து மீட்டல்

தினமும் 3 பாடவேளை கணிதம் நடைபெறுகின்றது.
கணிதம் : ஆசிரியர் - கரன்
ஆங்கிலம் : A.S. ரகுநாதன்
93/21, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை,
கந்தர்மடம்.
(ஆத்திசூடிப் பிள்ளையார் கோயில் அருகில்) (75648)


## பாஸ்கா திருவிழிப்பு

குருநகர்,ஏப்.22

புனித சனி தினமாகிய இன்று யாழ்.புனித மரியாள் பேராலயத்தில் காலை 6-30 மணிக்கு தியான வழிபாடும், மாலை 5-30 மணிக்கு பாஸ்கா திருவிழிப்பு ஆராதனையும், திருப்பலியும் இடம்பெறும்.

நாளை உயிர்ப்பு ஞாயிறு தினமாகும். காலை 6-30 மணிக்கு முதலாம் திருப்பலியும், 8-15 மணிக்கு இரண்டாம் திருப்பலியும், 9-15 மணிக்கு மூன்றாம் திருப்பலியும் யாழ். பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும். (ஜ-51-30)


## STAR கல்வி நிலையம்

சுன்னாகம்
A/L 2002
கலை, வர்த்தக
புதிய வகுப்புக்கள்.
ஆரம்பம்:- 21-04-2K
(4.00 p.m)
பொருளியல்:- மோகன்
கணக்கீடு:- கொலின்ஸ்
வணிகக்கல்வி:- முரளி
அளவையியல்:- R.P. சர்மா
தமிழ்:- பாலா
இந்து நாகரிகம்:- சோதிலிங்கம்
நாடகமும் அரங்கியலும்:- சந்திரன்
கிறிஸ்தவ நாகரிகம்:- றெஜீனா
ஆங்கிலம்:- விஜயபாஸ்கர்
*குறிப்பு:- தனிப்பட்ட பாட அனுமதிகள் வழங்கப்படும்.*
(75647)

## ராஜா

யாழ்ப்பாணம்
அஜித், ஷாலினி
நடிப்பில்
அமர்க்களம்
காட்சிகள்
10.30, 2.00, 5.00
(C/11604)

## லிபேட்டி

அச்சுவேலி
இன்றும் நாளையும்
பிரபு, கனகா, கவுண்டர், செந்தில் நடிப்பில்
தாலாட்டு கேட்குதம்மா
காட்சிகள் 10.30, 2.30
T.P- 070-212223
- 070-212678
FAX No. 0094 - 70212223
(75258)

## நாகம்ஸ்

சுன்னாகம்
ரஜனி, சௌந்தர்யா, ரம்பா, செந்தில்
நடிப்பில்
அருணாச்சலம்
(ரீஸ்ஸ்)
காட்சிகள்
11.00, 2.30
(புதிய நேரம்)
(C/11760)


# மீன் பிடிக்கத் தடை

வடமராட்சி,ஏப்.22

வடமராட்சிக் கடல் பிரதேசத்தில், கற்கோவளம் தொடக்கம் தொண்டமனாறு வரையுள்ள கடற்பகுதியில் கடந்த 20 ஆம் திகதி முதல் மீன்பிடிக்கத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

முன்னர் இங்கு கடந்த மார்ச் 30 ஆம் திகதி முதல் மீன் பிடிக்கத் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தடை ஏப்ரல் 18 ஆம் திகதி முதல் நீக்கப்பட்டு மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் 18 மற்றும் 19 ஆம் திகதிகள் மட்டுமே மேற்படி அனுமதி அமுலில் இருந்தது. மீண்டும் கடந்த 20 ஆம் திகதி முதல் மேற்படி கடற்பகுதியில் மீன்பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-ரி-173)

# கண்ணீர் அஞ்சலி



## பிரம்மஸ்ரீ சுந்தரராஜ சர்மா பசுபதீஸ்வர சர்மா (ராஜன்)

அன்னாரின் திடீர் மறைவு கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அவரது குடும்பத்தவர்க்கு எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல நல்லூர்க் கந்தனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ முருகன் தண்ணீர்ப் பந்தல்
நல்லூர்
(75654)

# மரண அறிவித்தல்கள்

## டானியல் இராசையா பூரணசற்குணம்

(இளைப்பாறிய பரிசோதகர், மாவட்ட தொலைத்தொடர்பு)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட டானியல் இராசையா பூரணசற்குணம் ஸ்காபரோ, கனடாவில் கர்த்தருக்குள் மறுமையானார்.

அன்னார் கருணாதேவியின் அன்புக் கணவரும், டயன், ரஞ்சன், தேவா, பிரேமினி, டாக்டர் ரதினி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (22-04-2000) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பி.ஏ.தேவரஞ்சன்**
(ரஞ்சன், U.S.A - மகன்)
Tel:- 1(315) 4450121

*116, Hildenboro Square,*
*Scarborough.*
*Ontario M1W1Y3*
*CANADA.*
*Tel:- 1(416) 4941298*
(75637)

## பிரான்சிஸ் ஜேம்ஸ்

பிரான்சிஸ் ஜேம்ஸ் வியாழக்கிழமை (20-04-2000) அன்று காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற பிரான்சிஸ் - செல்லக்குட்டி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், பிரான்சீஸ்கம்மாவின் அன்புக் கணவரும், கொன்சி, றொக்கட்சன் (லண்டன்), றொக்கொமரன் (லண்டன்), றஜி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றோமான் அன்ரனி (கிராம உத்தியோகத்தர், குருநகர்), சிபி (லண்டன்), மக்சி, டண்ரன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், விதுசன், ஜானு, நிரு, ஜினு, கரோலின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22-04-2000) சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு நல்லடக்கத்துக்காக பரி.கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**றோமான் அன்ரனி** (இதயன்)
(மருமகன்)
(கிராம உத்தியோகத்தர், குருநகர்)

*417/10, கடற்கரை வீதி,*
*குருநகர்.*
(75650)

## தியாகராசா ஜெயக்குமார்

பாலாவோடை, உடுவில் தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த தியாகராசா ஜெயக்குமார் வியாழக்கிழமை (20-04-2000) காலமாகிவிட்டார்.

அன்னார் தியாகராசா - பவளராணி ஆகியோரின் அன்பு மகனும், ஜெயதேவி (பிரான்ஸ்), சத்தியதேவி (பிரான்ஸ்), செந்தில்குமார் (பிரான்ஸ்), ஜாமளாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விமலநாதன் (பிரான்ஸ்), தனபாலச்சந்திரன் (பிரான்ஸ்), மோகனராஜகுமார் (வலி.வடக்குப் பிரதேச சபை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-04-2000) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**க.மோகனராஜகுமார்**
(மைத்துனர்)

*பாலாவோடை,*
*உடுவில் தெற்கு,*
*மானிப்பாய்.*
(75649)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## ஓராண்டு நிறைவுப் பூர்த்தியைக் காணும்!



# பிறேம் நகைமாடம்

மென்மைக்கு மெருகேற்றும் இளமைக்கு எழிலூட்டும்
தங்க நகையுலகில் மங்காப் புகழ் கொண்டு விளங்கிடும் ஒரே ஸ்தாபனம்
ஓடர் நகைகளைக் குறித்த காலத்தில் செய்து கொடுத்து அனைவரிடத்தும்
தன்னம்பிக்கை பெற்று விளங்குகின்றது.

*இன்று (22-04-2000) சனிக்கிழமை எனது ஒருவருடப் பூர்த்தியை முன்னிட்டு எனது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்தைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.*

கடை முகவரி:-
யாழ். வீதி,
சந்தையடி,
மானிப்பாய்.

R. பிறேம்குமார்,
தேவாலய ஒழுங்கை,
சுழிபுரவடி,
ஆனைக்கோட்டை.
(75651)

யாழ்.குடாநாட்டில்


*கலர்ப்பட பிரிண்டிங்கில்*

*முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டு*

*நீண்டகாலம் சேவையாற்றி வரும்*

# KONICA COLOUR LAB

புதிய இடத்தில்!



இதுவரை காலமும் நாவலர் வீதி, யாழ். றோட்டில்
இயங்கி வந்த எமது ஆய்வுகூடம்


*தற்போது*

நாவலர் வீதியில் உள்ள ஸ்ரீ வெங்கடேசன் வீதியில்
புதிய கட்டடத்தில் இயங்குகின்றது
என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

- *குறுகிய நேரத்தில் (உடனுக்குடன்)*
- *குறைந்த கட்டணத்தில்*
- *மிகுந்த தரத்துடன்*
- *உயர் தொழில்நுட்பத் திறமையுடைய நிபுணர்களால் கலர் படம் பிடிக்கவும்*

*உங்கள் கலர் றோல்களை கழுவுவதற்கும்*

யாழ்ப்பாணத்தில் நாடவேண்டிய
ஒரேயொரு ஸ்தாபனம்




# கொனிக்கா கலர் லாப்

# KONICA COLOUR LAB

*14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி (நாவலர் வீதியிலிருந்து),*
*பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.*

கிளை: 100A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம்

## கேள்விப் பத்திரம்

### பொடிவேலை, எஞ்சின்வேலை

இசுசு 05 தொன் லொறிக்கு பழைய உடற் கோப்பு நீக்கி புதிய உடற்கோப்பு அடிப்பதற்கும், பூரண எஞ்சின் வேலைக்கும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. திருப்பி வழங்கப்படாத கட்டுப்பணம் ரூபா 100, திருப்பி வழங்கப்படும் கட்டுப்பணம் ரூபா 250 சங்கக் காசாளரிடம் செலுத்தி 28-04-2000 பிற்பகல் 4.00 மணிவரை தலைமை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்கள் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் 05.05.2000 பிற்பகல் 4.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**பொது முகாமையாளர்,**
**பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,**
**பண்டத்தரிப்பு.** (C/11919)


சாவகச்சேரி நகரசபையில்

# 10 லட்சம் ரூபாவுக்கு அபிவிருத்தி வேலைகள்

யாழ்ப்பாணம்,ஏப்.22

பிரமாண அடிப்படையிலான மூலதன நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட 10 இலட்சம் ரூபா நிதியில் இருந்து சாவகச்சேரி நகர சபையினால் பல வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த நிதியிலிருந்து நகர சபை எல்லைக்குள் வசிக்கும் விவசாயிகளுக்கு நிலக்கடலை, கௌபி செய்கையை ஊக்குவிப்பதற்கு உதவி செய்தல், நூல் நிலைய புத்தகக் கொள்வனவு, பிலான் ஒழுங்கை மதகு திருத்தல், மகிழங்கேணி உதய சூரியன் கிராமத்திலுள்ள பள்ளக் காணியை மண் போட்டு நிரப்புதல், ஈச்சம்தாழ் வயல் ஒழுங்கை திருத்தம், தேவாலயவீதி திருத்தம், நிலத்தின் கீழான கழிவகற்றும் திட்டம், பனை, தென்னை வள விற்பனை நிலைய கட்டட விஸ்தரிப்பு போன்ற திட்டங்களுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

இந்த வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது

(ஐ-5)

## வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும் இந்திரா பார்த்தசாரதியின் 'கண் சிவந்தால் மண் சிவக்கும்' எனும் திரைப்படக் காட்சி இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புவியியல்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆர்வமுடையோர் எவரும் இப் படக்காட்சிக்கு வருகைதர முடியுமென இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

## வெப்ப நோய்கள்

கொழும்புத்துறை,ஏப்.22

யாழ். மாவட்டத்தில் வெப்பம் காரணமாக சின்னமுத்து, பொக்குளிப்பான் போன்ற நோய்கள் பரவி வருகின்றன. (இ-30)




UNOPS

இதழ் :15

April 2000

# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடான ஐக்கிய நாடுகள் திட்ட சேவைகள் அலுவலகம்

## ஐ.நா. செயற்றிட்டங்களிற்கு வெளிநாட்டுத் தூதுக்குழுவினரின் விஜயம்

பிரிட்டிஸ் உயர்ஸ்தானிகர் குழு(British Mission), அவுஸ்திரேலிய பதில் உயர்ஸ்தானிகர் குழு(Australian Mission), நெதர்லாந்து தூதுக்குழு(Netherlands Mission), அமெரிக்க நிதியுதவித்திட்ட முகாமையாளர் (US-AID Mission), உலக உணவு திட்டக் குழு(World Food Programme Mission), ஐக்கிய நாடுகள் வதிவிடப் பரதிநிதக்கான மனித உரிமைகள் ஆலோசகர் (Humanitarian Advisor to the United Nations Resident Coordinator), ஆகியோர் அடங்கிய தூதுக்குழு மார்ச் மாதம் 21 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தது.

இவர்கள் தங்களால் வழங்கப்பட்ட நிதியின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை பார்வையிட்டதுடன், அரசாங்க அதிகாரிகளுடனும் யாழ்ப்பாணத்தின் நிலைமையைப் பற்றி ஆராயந்தனர்.

அத்துடன் இவ்விஜயத்தின் போது றோயல் நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் UNOPS/JRRP இனால் யாழ் போதனா வைத்தியசாலையில் புனரமைக்கப்பட்ட இரண்டு மாடிக்கட்டடத்தின் மேல்த்தளத்தை நெதர்லாந்து குழுவின் முதற்செயலாளர் Mrs. Jeanine van Krimpen உத்தியோக பூர்வமாக திறந்து வைத்து அக்கட்டடத்தை பார்வையிட்டார். இதன் முடிவில் யாழ் போதனாவைத்தியசாலையில் நடந்த வழிப்படுத்தல் குழு கூட்டத்திலும் கலந்து வைத்தியசாலைகளின் வசதிகள் பற்றியும் ஆராய்ந்தார்.
மேலும் பிரிட்டிஸ், அவுஸ்திரேலிய, நெதர்லாந்து, அமெரிக்கத் தூதுக்குழுவினர் UNOPS/JRRP இன் கண்ணிவெடியகற்றல், கண்ணிவெடி விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் பார்வையிட்டனர்.



நெதர்லாந்து குழவின் Mrs. Jeanine van Krimpen யாழ் போதனா வைத்தியசாலையின் மேல்தளத்தை திறந்து வைக்கின்றார்.




யாழ் பழைய பூங்காப்பகுதியில் நடைபெற்று வரும் UNOPS/JRRP இன் மிதிவெடியகற்றல் செயற்பாட்டைப் பிரிட்டிஸ் தூதுக் குழுவினர் பார்வையிடுகின்றனர்.



UNOPS/JRRP இன் சமூக மிதிவெடி அளவையாளர்களின் வேலைகளைப் பிரிட்டிஸ் தூதுக்குழவினர் யாழ் கச்சேரியில் பார்வையிடும் போது. . .

## கோழித்தீன் உற்பத்தி செய்யும் இயந்திரம் வழங்கல்




கோழித்தீன் உற்பத்தி செய்வதற்கான இயந்திரம் (Pelletiser)

யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கத்திற்கு ஒவ்வொன்றும் 692,250 ருபா பெறுமதியுடைய இரண்டு கோழித்தீன் உற்பதி செய்யும் இயந்திரங்களை UNOPS/JRRP கடந்த மார்ச் மாதம் வழங்கியுள்ளது.

அச்சுவேலியில் UNOPS/JRRP இன் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட கோழிப்பண்ணையில் தற்போது கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு யாழ் மாவட்டத்திலுள்ள கால்நடை வைத்திய காரியாலயங்கள் ஊடாக பண்ணை யாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுவருகிறது. இங்கு கடந்த டிசம்பர் மாதம் முதல் இவ்வாண்டு மார்ச் மாதம் வரை ஏறத்தாழ 13,000 இறைச்சிக் கோழிக்குஞ்சுகளும், 19,000 முட்டையிடும் கோழிக்குஞ்சுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இப்பண்ணையில் உற்பதி செய்யப்படும் கோழிகளின் உணவுத்தேவையினைப் பூர்த்திசெய்வதற்காகவே யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் கோழித்தீன் உற்பத்தியை மேற்கொள்ளத்திட்டமிட்டுள்ளது.



அச்சுவேலியில் விநியோகிக்கப்பட்டுவரும் ஒருநாள் குஞ்சுகள்

கடந்த வருடம் UNOPS/JRRP இன் சுழற்சிமுறைக் கடன் மூலம் சாவச்சேரிப்பகுதி விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட சோளமும் இக்கோழித்தீன் உற்பத்திக்கு பயன்படுத்தப்படவுள்ளது. தொடரும் காலங்களில் இக்கோழித்தீன் உற்பத்திக்காக புத்தூர், உரும்பிராய், உடுவில் ஆகிய பகுதிகளிலும் சோளம் உற்பத்தியை மேற்கொள்வதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக மூன்று லட்சம் ருபாவை UNOPS/JRRP யாழ் மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்திற்கு வழங்கியுள்ளது.

## சுகாதாரப் பிரிவுகளுக்கான உதவிகள்



பொருட்கள் கையளிப்பின் போது. . . . .

UNOPS/JRRP மானிப்பாய், தெல்லிப்பளை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளைச் சேர்ந்த பொது சுகாதார பரிசோதகர்கள் பயன்படுத்துவதற்காக கடந்த மார்ச் மாதம் நான்கு Hero Honda வகை மோட்டார் சைக்கிள்களை வழங்கியது. இவற்றுடன் குளிர்சாதனப்பெட்டி ஒன்றும், இரண்டு ஜெனரேட்டர்களும் வழங்கப்பட்டது. இவற்றை பதில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் Dr. உமா சிவபாதசுந்தரம் உத்தியோக பூர்வமாகப் பெற்றுக் கொண்டார். இவற்றிற்காக 687,000 ருபா செலவிடப்பட்டுள்ளது. அடுத்த சில மாதங்களில் பெண் உத்தியோகத்தர்களும் பாவிக்கக்கூடிய வகையில் மேலும் மோட்டார்சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளது.
தற்போது UNOPS/JRRP இனால் அளவெட்டியில் அமைக்கப்பட்டுவரும் பிரசவவிடுதிக்கு இவற்றில் ஒரு ஜெனரேட்டர் பயன்படுத்தப்படும்.

## வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றும் குழுவினரின் செயற்பாடுகள்



அழிப்பதற்கு தயாராகவுள்ள வெடிபொருட்களும் அவை வெடிக்கும் காட்சியும்

UNOPS/JRRP இன் கண்ணிவெடி அகற்றும் திட்டத்தின் கீழ் வெடிக்கத்தக்க பொருட்களை இனங்கண்டு அகற்றும் (Explosive Ordinance Disposal) குழு தற்போது செயற்பட்டு வருகிறது. இவர்கள் வெடிக்கத்தக்க பொருட்கள் உள்ள இடங்களில் அப்பொருட்கள் சம்பந்தமான தகவல்களைத் திரட்டி, பின்னர் இவற்றை அகற்றி பாவனையற்ற இடங்களில் வெடிக்கவைத்து அழிக்கின்றனர்.

இவ்வாறு வெடிக்கத்தக்க பொருட்கள் பற்றிய தகவல்கள் அறியப்பட்டால் யாழ் கச்சேரியில் இயங்கும் கண்ணிவெடி செயற்றிட்ட மையத்திற்கு பொது மக்கள் தெரிவிக்கலாம்.

இவ்விதழ் தொடர்பான உங்கள் சந்தேகங்கள், கேள்விகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

*Programme Manager*
*Public Information.Team,*
*UNOPSJRRP*
*125, Temple Road*
*Jaffna.*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழிகள்

இறைச்சிக்கோழி புறொயிலர் விறாத்துக் குஞ்சுகள் குறைந்த விலையில் கிடைக்கும். சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1Kg 170/- மட்டும் தொடர்புகளுக்கு: 1, லக்கி மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (75564)

இறைச்சிக்கோழி (Broiler), கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடை அருகில்) (75501)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். இல. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (75538)

Broilers, Cullbirds, Cockerels, இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். நியாயமான விலை, நுட்பமான நிறுவை, சுறுசுறுப்பான சேவை 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (75533)

நியாயவிலையில் சகல நிறைகளிலும் புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. 54/2, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை கொழும்புத்துறை, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம் அல்லது 217/A, ஆஸ்பத்திரி வீதி (முலவைச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம். (75579)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழி (Broiler) மற்றும் கல்பேட்ஸ், சேவல், விறாத்துக் குஞ்சு என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்புகளுக்கு:- இல. 68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (75560)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 29 வயது நிரம்பிய கேட்டை நட்சத்திர (22 பாவம்) 7 இல் செவ்வாய்க் குற்றமுள்ள அரசாங்க திணைக்களம் ஒன்றில் பிரதான பதவியொன்றில் கடமை புரியும் மணமகனுக்கு நற்பண்பு நிறைந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஆசிரியை வங்கி, டாக்டர் மற்றும் அரசாங்க நிறுவனங்களில் தொழில் புரிவோர் விரும்பத்தக்கது. சகல விடயங்களும் உள்ளடங்கலாய் உடன் தொடர்புகளுக்கு விளம்பர இல. 1044, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (75550)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1962 இல் பிறந்த உத்தராட நட்சத்திர 25 கிரகபாவமுடைய லண்டன் அரசாங்கத்தில் பொறியியலாளராகக் கடமை புரியும் மணமகனுக்கு ஏற்ற மணமகள் தேவை. பட்டதாரிகள் விரும்பத்தக்கது. விளம்பர இல.1042 மே/பா உதயன். (75473)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1962 இல் பிறந்த லக்கினத்தில் செவ்வாய்க் குற்றமுடைய பட்டதாரி ஆசிரிய ஆலோசகராக கிளிநொச்சியில் கடமை புரியும் மணமகனுக்கு கிளிநொச்சியில் சென்று வசிக்கக்கூடிய, தகுந்த உத்தியோகமுடைய மணமகளை எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு விளம்பர இல. 1045, மே/பா, உதயன் யாழ்ப்பாணம் (75574)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல், இணைந்த கணிதம் பலவருட அனுபவம் பெற்ற ஆசிரியரினால் மிகச் சிறப்பாக கற்பிக்கப்படும். ஏராளமான பயிற்சிகளுடன் 20 வருட வினாத்தாள்கள் செய்து முடிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பித்தல் நடைபெறுகின்றது. முழுப்பாடத் திட்டமும் மிகக் குறுகிய காலத்தில் முடித்துக் கொடுக்கப்படும். சிறந்த பெறுபேறுகளைப் பெற தொடர்பு:3 மணிக்குப் பின் தினசரி திரு. R. பாலசுப்பிரமணியம் B.Sc(cey) Dip.in Ed., 17/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (75602)

## விற்பனைக்கு

64-2566 டீசல் கஜேஸ் Toyata Corilla, LH 20, டீசல் கஜேஸ் 40 சிறீ வான் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி ச. செந்தூரன் இல. 4, மேதர் லேன், மானிப்பாய். T.P No. 021 - 3470 (75559)

சிக்மா வாட்டர் பம்ப் (எலக்ரிக்) சிசில் குளிர்சாதனப் பெட்டி ஒன்றும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு 639, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (75575)

நல்ல நிலையிலுள்ள பாவித்துக் கொண்டிருக்கும் ஒரு கதவுடன் கூடிய சிங்கர் குளிர்சாதனப் பெட்டி ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: சி.கனகசபை, 42/7, ஈச்சமோட்டை கடற்கரைவீதி, யாழ்ப்பாணம். (75505)

15 K.W (3PHASE) டைனமோவுடன் கூடிய LISTER என்ஜினும் கிறேசருக்குப் பாவிக்கக் கூடிய BLACK STONE என்ஜினும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஜி. ஜெயதீஸ், காளிகோயிலடி, திருநெல்வேலி கிழக்கு. (75502)

அல்ஷேசன் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- S.முரளி, ஸ்ரீவிக்னேஸ்வரா வீதி, அச்சுவேலி. (75590)

## வாடகைக்கு

பல்கலைக்கழக உயர்கல்வி மாணவர்கள் ஐந்து(5) பேர் தங்கக்கூடிய அமைதியான சூழலிலுள்ள சிறிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: சனி-ஞாயிறு 9.00-12.00 பவளம் இல்லம், விநாயகர் வீதி, கல்வியங்காடு. (சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலிலிருந்து 200 யார்) (75592)

## O/L கணிதம்

அடிப்படையிலிருந்து விஷேட திறமைப் பெறுபேறுகளை நீங்கள் பெற்றிடத் தனிப்பட்ட முறையிலோ, சிறு குழுக்களாகவோ கணிதம் 1, II இலகுவான முறையில் கற்பிக்கப்படும். திறமைச் சித்திக்கு உத்தரவாதம் அளிக்கப்படும். பெற்றோருடன் வந்து தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு Kana Pararajasekaran, 8 A, பிளேச்சர் ஒழுங்கை, (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில்) சுண்டுக்குளி. (75310)

## வியாழ மாற்றம்

V. A. சிவராசா வெளியிட்ட 2-6-2000 இல் நிகழும் விண்ணில் வியாழமாற்றம். மண்ணில் உங்கள் "யோகபலன்கள்" மற்றும் 2000 புது வருஷ பலாபலன்கள் என்று கேட்டு வாங்குங்கள், எங்கும் விற்பனையாகின்றன. 152B, அரசடி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். (74734)

## திருமண சேவை

சிறு இடைவெளிக்குப் பின் மீண்டும் விநாயகர் திருமண சேவை ஆரம்பமாகியுள்ளது. திருமணங்களுக்கு நேரில் அல்லது கடித மூலம் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். முகவரி விநாயகர் திருமண சேவை, 63, கஸ்தூரியார் வீதி, நீராவியடி. (75503)

## MATHS, ENGLISH

O/L Distinction, Credit G.A.Q, A/L ஆங்கிலம் 2001-02, ஆண்டு 6-10 உட்பட கற்பிக்கப்படும். B.Sc (cey) 85. சிவன் கோவிலடி, சிவன் கோவில் பின்புறம் திருநெல்வேலி. (75587)

## வேலையாள் தேவை

பூக்கன்றுகளைப் பராமரித்து சமையல் செய்யக்கூடிய பெண் தேவை. சாப்பாடும் நல்ல சம்பளமும் தரப்படும். தங்கி இருக்க வசதி உண்டு. தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (75534)

## இலகு திருமண சேவை

1963 சித்திரை மணப்பெண்ணுக்கும் 1964 கேட்டை விவாகரத்துப் பெற்றவருக்கும் மணமகன்களும் 1952 Australia, 1954 புள்ளிவிவர சைவ உத்தியோகத்தருக்கும் மணப்பெண்கள் தேவை. தொடர்பு ஞாயிறுகளில் துரைவிமலா K.K.S வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (75565)

---

கனிந்த நன்றிகள் — இனிய நல்வாழ்த்துக்கள்

# THARRMSONS WORLD WIDE COMMUNICATION LINK

ARIYALAI, JAFFNA.

விநாயகப் பெருமானினதும் அம்பாளினதும் திருவருளினாலும்
நண்பர்கள், வாடிக்கையாளர்களினது ஒத்துழைப்பினாலும்

*மிலேனியத்தில்*

நாளை ஏப்ரல் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதலாவது ஸ்தாபன
அகவையை நிறைவெய்துவதை முன்னிட்டு அனைவருக்கும்

**எமது உள்ளம் கனிந்த நன்றிகள், புதுவருட இனிய நல்வாழ்த்துக்கள்**

*நாளை சகல தொடர்புகளுக்கும் விசேட சலுகை, உள்வரும் அழைப்புக்கள் யாவும் இலவசம்*

தொலைபேசி இல: உள்நாடு :- 021 - 2790
சர்வதேசம் :- 0094 - 021- 2790 தொலைநகல் (FAX) :- 0094 - 021- 2790
மற்றும் போட்டோஸ்ரற் சேவை

- YOUR SERVICE IS OUR AIM

கனகரத்தினம் றோட் சந்தி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

**THARRMSONS** (75609)

---

# மூன்றாம் ஆண்டு நினைவாக




**ஐயாத்துரை சண்முகநாதன்**
(ஓய்வுபெற்ற P.W.D. ஓவசியர்)

தோற்றம் 22-11-1927 — மறைவு 30-04-1997

திதி:- 26-04-2000

எம்மை விட்டுப் பிரிந்து சென்று
ஆண்டுகள் 3 ஆனாலும் உங்கள்
நினைவால் அல்லலுறும் தங்கள்
அன்பு நெஞ்சங்கள்.

தகவல்
**அரியம்**
தில்லகட்டி,
சுன்னாகம்.



**அப்பாப்பிள்ளை சோமசுந்தரம்**
(ஓய்வுபெற்ற P.W.D. ஓவசியர்)

தோற்றம் 14-07-1907 — மறைவு 26-04-1997

திதி:- 22-04-2000

ஆண்டுகள் 3 ஆனாலும் எம்
நெஞ்சம் விட்டு நீங்காத
அன்புத் தந்தையே!
*உம் பிரிவால் வாடும்*

**- குடும்பத்தினர்.**


'சக்தி மருந்தகம்',
சுன்னாகம்.

தில்லகட்டி, சுன்னாகம். (C/11912)

---

# நினைவலைகள்

## ஆறாம் மாதம்



மலர்வு 27-09-1940 — உதிர்வு 28-10-1999


திருமதி
**புவனேஸ்வரி ஞானப்பிரகாசம்**
(இளைப்பாறிய ஆசிரியை)

ஆறுமாதங்கள் அம்மா ஆறவில்லை எமது துயர்
சேர்ந்து வாழ்வோம் என்றிருக்க தவிக்கவிட்டுச் சென்றதெங்கே?
ஆயிரம் துன்பங்கள் ஆறாக ஓடத் துடியாகத் துடிக்கின்றோம்
அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிரிவால் துடிக்கும்,
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

வாகையடி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

## ஐந்தாம் ஆண்டு



மலர்வு 29-03-1934 — உதிர்வு 19-04-1995

அமரர்
**சின்னையா ஆறுமுகம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

**திதி: சித்திரைச் சதுர்த்தி 22-04-2000**

எம்மை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தெய்வமே!
எம்மை விட்டுப் பிரிந்து ஐந்தாண்டு சென்றாலும்
எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும்
உங்கள் நினைவுகள் என்றென்றும் மறையாது.

**...ன்பு - மனைவி, மகன்மார், மருமக்கள், பேரன்.**

வாகையடி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (75466)

## JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
### VADDUKODDAI

1. *Windows Business Application & Systems*

(Morning / Evening) Fees: 1000 each

* MS Word
* MS Excel
* MS Access
* Power Point
* Visual Basic

Duration: 3 Months

2. *Australian Computer Socity*

(Fundamentals of Information TechnologyI&II

Duration: 4 Months

Fees: 2000

Collect Application Forms:

**JCIT, Vaddukoddai.**

Courses Commence:- **8 th May 2000**

**Director,**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai.** (C/11873)



## வெளிவாரிப்பட்டப் படிப்புக்கள் பகுதி
## யாழ்ப்பாணக் கல்லூரி

**(யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக)**

பின்வரும் கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

1. G.A.Q. **யாழ். பல்கலைக்கழகம்**
2. G.A.Q. **பேராதனைப் பல்கலைக்கழகம்**
3. B.A. PART - I **யாழ். பல்கலைக்கழகம்**
4. B.A. PART - II **யாழ். பல்கலைக்கழகம்**
5. B.A. FINAL **பேராதனைப் பல்கலைக்கழகம்**

குறிப்பு:-

1. ஆங்கில இலக்கியம், லிங்குஸ்ரிக், பாடங்கள் உட்பட எல்லாப் பாடங்களும் போதிக்கப்படும்.
2. விரிவுரை வகுப்புகளுக்கு மேலதிகமாக (TUTO RIAL CLASS) கட்டுரை வகுப்புக்களும் பிரபல விரிவுரையாளர்களினால் மேற்கொள்ளப்படும்.
3. வார இறுதி வகுப்புக்கள், முழுப்பகல் நேரவகுப்புக்கள் என இருபிரிவாக விரிவுரைகள் நடத்தப்படும்.
4. பல்கலைக்கழக தரமொத்த நூல்நிலைய வசதிகள் சகல மாணவர்களுக்கும் வழங்கப்படும்.

**ஆரம்பம்: 05-05-2000**

விபரங்களுக்கு:

பதிவாளர்
*யாழ்ப்பாணக் கல்லூரி,*
(போதனா வைத்தியசாலைக்கு முன்பாக வர்த்தக வங்கிக்கு அண்மையில்) C/11917



## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 12 - 10 - 1912



விண்ணில் 04 - 05 - 1999

**ஸ்ரீமதி அன்னப்பிள்ளை கதிரித்தம்பி**

திதி:- 22-04-2000

ஆண்டொன்று சென்றதம்மா ஆறவில்லை எம் துயரம்
எம்பெருமான் கழலடியில் எந்தையோ டிணைந்தீரோ - இல்லை
மக்களெம்மை எண்ணி மனங்கலங்கி நின்றிருந்தால்
மறுபடியும் பிறந்து வந்து எம் மனக்கவலை தீருமம்மா!

தகவல்:-
புனிதவதி சிவஞானம் (மகள்)
ரஜனி தொலைத் தொடர்பகம்,
ஐயா கடையடி,
சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்**

(75568)




ஆரம்பக் கல்வி ஆசிரியர் நியமனத்துக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாத விண்ணப்பதாரிகள் அதற்கு ஆட்சேபம் தெரிவித்து கடந்த திங்களன்று யாழ்.வலயக் கல்விப் பணிமனை வாயிலில் மறியற் போராட்டம் நடத்தியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

*படங்கள்: பொ.இராஜேஸ்வரன்*

# இரசாயனப் பொருள்களை இங்கு எடுத்துவர அனுமதி வழங்க மறுப்பு

## சீநோர் தொழிற்சாலை இயங்குவது தாமதம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலைக்கு இரசாயனப் பொருள்களை எடுத்துவர பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்காமையினால் இத்தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதில் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இத்தொழிற்சாலையை மீள இயக்குவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் இரசாயனப் பொருள்கள் இல்லாமையினால் உற்பத்தியை ஆரம்பிக்கமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுக்கு பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்ட போதும் இதற்கான அனுமதி இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரியவந்தது.

கடந்தவாரம் இத்தொழிற்சாலையின் உயர் அதிகாரி ஒருவர் பலாலி படைத்தளத்துக்கு நேரில் அழைக்கப்பட்டு தொழிற்சாலைக்குத் தேவையான இரசாயனப் பொருள்கள் தொடர்பாக அவருடன் உரையாடப்பட்டது. அவற்றைப் பெற்றுத் தருவதற்கு ஏற்பாடு செய்வதாகவும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - யாழ். மாவட்டத்தில் உள்ள 25 மீனவர்களுக்கு கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட மானிய வலைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 28 பேருக்கு மானிய வலைகள் வழங்கப்படவுள்ளதாகவும் குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலை அதிகாரி ஒருவர் கூறினார். (ஜ-5)

### குறைந்த வருமானமுடையோருக்கு

# தற்காலிக வதிவிடம் அமைக்க 7 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

வலி. கிழக்கு,ஏப்.22

தற்போதைய போர் அனர்த்தங்களால் பச்சிலைப்பள்ளி, தென்மராட்சிப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களில் ஆயிரத்து 500 ரூபாவுக்குக் குறைந்த வருமானம் பெறுவோருக்குத் தற்காலிக வதிவிடம் அமைக்கவென 7 ஆயிரம் ரூபாவை வழங்க வடமாகாண புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இக்கொடுப்பனவில் முதற் கட்டமாக ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று கோப்பாய் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அரசாங்க அதிபர் சகல பிரதேச செயலகங்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இதேவேளை -

ஆயிரத்து 500 ரூபாவுக்குக் கீழும் அதற்கு மேலும் வருமானம் பெறுவோருக்கு உடனடித் தேவைகளைப் பூர்த்திசெய்ய 2 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. இக்கொடுப்பனவு இருகட்டங்களாக ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-180)

## ஊரெழுவில் நடமாடும் சேவை

வலி.கிழக்கு,ஏப்.22

வலி. கிழக்கு கோப்பாய்ப் பிரதேச செயலகத்தின் நடமாடும் சேவை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


காலை 9-30 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை நடைபெறவுள்ள இந்தச் சேவையில் ஊரெழு, உரும்பிராய், அச்செழு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிப்பவர்கள் உணவு முத்திரை, மீள்குடியமர்வு, பங்கீட்டு அட்டை, அடையாள அட்டை, ஓய்வூதியம், விவசாயம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெறமுடியும் என்று பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஜ-180)

## நாளை

**சித்திரை 11**
**ஞாயிற்றுக்கிழமை**

**திதி:** பஞ்சமி முழுவதும்
**நட்சத்திரம்:** கேட்டை முற்பகல் 9.34 வரை.
**சுபநேரம்:** 9.00-10.30
**ராகுகாலம்:** 4.30-6.00

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)



நாவாந்துறை சென். நீக்கலஸ் சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் பாசையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தை பெனால்டி மூலம் வென்று பொன் விழா கிண்ணத்தை தட்டிச் சென்றது.

படத்தில் நாவாந்துறை பங்குத் தந்தை அருட்திரு பீற்றர் துரைரத்தினத்துடன் பாடுமீன், சென் அன்ரனீஸ் கழக வீரர்களும், சென்.நிக்கலஸ் அணி வீரர்களும் காணப்படுகின்றனர்.


## தபால் மூலம் ஆங்கிலம்

**தொழில்புரிவோர், மாணவர்கள் அனைவருக்கும் விரைவாகவும், விளக்கமாகவும் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது.**

**சுயவிலாசமிட்ட நீள உறையுடன் எழுதவும்.**

**English Div,**
**79, Shoe Road,**
**Colombo - 13**

(75514)



## கல்யாணமா? கவலைவேண்டாம்!

**அன்புள்ளங்களே! அறிவுள்ளங்களே!!**

* டாக்டர் முதல் * என்ஜினியர் * ஆசிரியர்
* அட்ரண்டன் * படித்தவர் * பட்டதாரிகள்
* முதலாளி * தொழிலாளி * உள்நாடு * வெளிநாடு
* ஆரணங்குகள் * அழகுராணிகள்
* 18 வயதினர் * 50 வயதினர்
* சிற்பாகாரிகள் * நகைத் தொழிலாளர்கள்.
* மணவாழ்வு * மனமுள்ள மறுதாரம்
* கிறிஸ்தவர்கள் * இந்துக்கள்
* அசைவ, சைவ உணவாளர் * சகல சமய சாகியத்தவர்களினதும் ஆண், பெண், பெற்றோர், உற்றோர் கவலை தீர்க்கப்படும்.
* ஆற்றல், அனுபவம் கொண்ட முகவரால் வழிநடத்தப்படும் நம்பிக்கையான நல்லவர்கள் நற்சான்று பெற்ற இடம்! நாடுங்கள்! நம்புங்கள்!
* பதிவுக்கட்டணம் இலவசம்! காலை 8 முதல் 12 வரை. மாலை 2 முதல் 5 வரை.

நிரந்தர சேவை! கடிதமோ! நேரடியோ!

*மோகனராணி ஏஜென்ட்,*
விவாகப் பொருத்துநர்,
**1051, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி,**
**யாழ்ப்பாணம்.**

(75603)

யாழ்.பல்கலைக்கழகத்தில்

# வெளிவாரிப் பரீட்சைகள் மே 29 முதல் தொடங்கும்

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ். பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவிருந்த வெளிவாரிப் பரீட்சைகள் யாவும் மே மாதம் 29 ஆம் திகதியே ஆரம்பமாகும் என்று பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகள் அனைவரும் தமது புதிய நேரசூசிகளை மே மாதம் 15ஆம் திகதி தொடக்கம் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகள் வவுனியா வளாகத்திலும் நடைபெறவுள்ளன. அங்கு பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோர் மே மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பு 'உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள பரீட்சைகளின் விவரங்கள் வருமாறு:-

* நுண்கலைமாணி முதற் தேர்வு, (1997/98)
* நுண்கலைமாணித் தேர்வு, பகுதி I (1997/98)
* நுண்கலைமாணித் தேர்வு, பகுதி II (1997/98)
* நுண்கலைமாணித் தேர்வு, பகுதி III (1997/98)

இந்தப் பரீட்சைகளுக்கான செயல்முறைப் பரீட்சைகள் யாவும் யாழ்.பல்கலைக்கழகத்தில் மட்டுமே நடைபெறும் என்றும் பதிவாளர் தெரிவித்தார்.

(ஐ-10)

யாழ்.ப.நோ.கூ. சங்கத்தின்

# எரிபொருள் நிலையத்தில் பெற்றோல் பெற வசதி இல்லை

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்நகரின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தில் பெற்றோல் விநியோக வசதி இன்மையால் பாவனையாளர்கள் பெரும் சிரமமடைந்து வருகின்றனர்.

இந்த எரிபொருள் விற்பனை நிலையத்தில் சேதமுற்றிருக்கும் பெற்றோல் நிரப்பும் தாங்கி கடந்த 4 ஆண்டுகாலமாகியும் இதுவரை திருத்தம் செய்யப்படாமல் உள்ளது. அத்துடன் நிலையத்தின் கட்டடமும் புனரமைக்கப்படவில்லை. எதுவித வசதிகளும் இன்றித் தற்காலிக கொட்டகையிலேயே அது இயங்கி வருகிறது.

தீவுப் பகுதியில் இருந்து நகருக்கு வரும் அநேகமான வாகனங்கள் இந்த எரிபொருள் விற்பனை நிலையத்திலேயே எரிபொருள் நிரப்பிச்செல்வது வழக்கம். இங்கு பெற்றோல் வசதி ஏற்படுத்தப்படாததனால் வாகன உரிமையாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் மற்றும் சங்க நிர்வாகமும் இதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று பாவனையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ-15)

# கசிப்பு ஒழிப்பு பணியில் மருத்துவபீட மாணவர்கள்

வலி.வடக்கு, ஏப்.22

கசிப்பு உற்பத்தியைத் தடுத்தல் மற்றும் அதன் பாதிப்புப் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியில் யாழ். மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

முதற்கட்டமாக கிராம மட்டங்களில் கசிப்பு ஒழிப்புச் சம்பந்தமான கருத்தரங்குகளை அவர்கள் நடத்தி வருகின்றனர்.

திருநெல்வேலி பாரதிபுரம் பகுதியில் இக்கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கில் பிராந்தியச் சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் செல்வி உமா சிவபாதசுந்தரம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் (உள மருத்துவப் பிரிவு) க.ரவீந்திரன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து சுகாதாரம் பற்றிய படக் காட்சியும் காண்பிக்கப்பட்டது.

(ஐ-86)

## மஹோற்சவ ஏற்பாடு பற்றிய கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

நயினாதீவு நாகபூசணி அம்மன் வருடாந்த மஹோற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். செயலகத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## புனித சனி

குருநகர்,ஏப்.22

புனித சனி தினமாகிய இன்று கிறிஸ்தவ தேவாலயங்களில் மாலை வழிபாடுகள் பாஸ்கா திருவிழிப்பு ஆராதனையாக இடம்பெறும். இன்றைய வழிபாடுகள் ஒளி வழிபாடு, இறைவார்த்தை வழிபாடு, திருமுழுக்கு வழிபாடு, நற்கருணை வழிபாடு என நான்கு பகுதிகளாக இடம்பெறும்.

(ஐ-51)



இலங்கை இசை வேளாளர் சங்கம் நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் நடத்திய மாதாந்த இசைவிழாவில் ஆசிரியர் ஆறு.திருமுருகன் தலைமையுரை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும், நாதஸ்வர வித்துவான் எஸ்.பிச்சையப்பா குழுவினரின் முகவீணைக் கச்சேரி நிகழ்வினை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(ஐ-103)

*படம்: நல்லூர் செய்தியாளர்*

## பயண அனுமதி விவரம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின்(இம்மாதம் 21ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### யாழ்ப்பாணம்

(138996ஏ),(138996பி), (138996சி), (138996டி), (140557ஏ), (140828ஏ), (140828பி), (140828சி), (140878ஏ), (142733ஏ), (142837ஏ), (142839ஏ), (142839பி), (142839சி), (142839டி), (142877ஏ), (142883ஏ), (142887ஏ), (142887பி), (142894ஏ), (142894பி), (142911ஏ), (142925ஏ), (142943ஏ), (142958ஏ), (142958பி), (142989ஏ), (142989பி).

### கோப்பாய்

(136582ஏ), (136582பி),(136582சி).

### நல்லூர்

(142684ஏ), (142960ஏ),(142969ஏ), (142969பி), (142969சி).

(ஐ-ரி)



தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் அண்மையில் நடத்தப்பட்ட 'ஞானச்சுடர்' மாதாந்த மலரின் வாசகர்களுக்கான வினாவிடைப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற கொழும்புத்துறையைச் சேர்ந்த செல்வி நந்தினி கணேசதாசன் பேராசிரியர் அ. சண்முகதாஸிடம் இருந்து பரிசு பெறும்போது எடுத்த படம்.

*படம்: கொழும்புத்துறை செய்தியாளர் சி.சி.வரதராசா*

## 138 குடும்பங்கள் கோப்பாயில் தஞ்சம்

வலி.கிழக்கு,ஏப்.22

பச்சிலைப்பள்ளிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தோரில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மட்டும் 138 குடும்பங்கள் தங்கியுள்ளன.

பச்சிலைப்பள்ளிப் பகுதியான பளை, மாசார் போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களும், அல்லாரை, சாவகச்சேரிப் பகுதிகளைச் சேர்ந்தவர்களுமாக மொத்தம் 138 குடும்பங்களைச் சேர்ந்த 300 பேரே உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான ஒருவார இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் மாதாந்த நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-180)





யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. கிருஷ்ணசாமி, சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் எஸ். பரம்சோதி ஆகியோர் அண்மையில் நெடுந்தீவுக்கு விஜயம் செய்தனர். அவர்களை நெடுந்தீவு பிரதேசசபைத் தலைவர் ஏ.டபிள்யூ.அரியநாயகமும், உறுப்பினர்களும் வரவேற்பதை முதலாவது படத்தில் காணலாம். நிர்வாக உத்தியோகத்தர் க. நாகலிங்கம் அங்கு பொது நூலகம் முன்பாக மரக்கன்று நடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

*படம்: நெடுந்தீவு செய்தியாளர்.*



அகதிகளுக்கான ஐ. நா தூதரகத்தினால் புனரமைக்கப்பட்ட காரைநகர் ஊரி குடிதண்ணீர் விநியோகத்திட்டம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தலைவர் ந.மதனராசா நாடாவெட்டி நீர் விநியோகத்திட்டத்தை திறந்து வைப்பதை முதலாவது படத்திலும், அகதிகளுக்கான ஐ.நா. தூதரக பொறியியலாளர் ஜோன் ஒமாகி, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் ஆகியோர் மக்களுக்கு குடிதண்ணீரை வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

*படங்கள்: காரைநகர் செய்தியாளர் ந.பாரதி*


## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் சித்திரை மாதம் 11ஆம் நாள் (23-04-2000) நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 11.34 மணிமுதல் 1.29 மணிவரையுள்ள கடகலக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்

எமது புத்திரன் திருநிறை செல்வன் **சிவரூபன்** அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி **சுசிலாதேவி** அவர்களுக்கும்

சங்கரத்தை பத்திரகாளி கோவிலில் திருமாங்கல்யதாரண விவாகம் செய்ய திருவருள் கூடி பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அந்நருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இருவீட்டார் அழைப்பு)

**வரவேற்புபசாரம் : 25-04-2000 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மணமகள் இல்லத்தில் நடைபெறும்.**

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி இ. குமாரசாமி
வி. எம். றோட்,
பருத்தித்துறை.

திரு. த. ஆனந்தரத்தினம்
வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை.

(75643)

# இலங்கையில் சமாதானம் ஏற்பட இந்தியா எப்போதும் ஒத்துழைக்கும்

## ரணிலிடம் வாஜ்பாய் தெரிவிப்பு

புதுடில்லி,ஏப்.22

இலங்கையில் அமைதி, சமாதானம் ஏற்படுவதற்குரிய ஒத்துழைப்பை எச்சந்தர்ப்பத்திலும் வழங்க இந்தியா தயாராகவுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் பிரதமர் வாஜ்பாய் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் விஜயம் மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இச்சந்திப்பு சுமார் 40 நிமிட நேரம் இடம்பெற்றது.

இலங்கையில் உள்ள சகல இன மக்களும் அமைதியாகவும், சமாதானமாகவும் வாழக்கூடியதான ஒரு பின்னணியை உறுதிப்படுத்திக் கொண்டு தங்களது உள்நாட்டுப் பிரச்சினையை இலங்கையே தீர்த்துக்கொள்ள முயற்சி எடுக்க வேண்டுமெனப் பிரதமர் வாஜ்பாய் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேச்சுவார்த்தையின் மூலம் அரசியல் ரீதியிலான தீர்வை எட்டுவதற்கான முயற்சிகளையே சகல தரப்பும் முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் பிரதமர் வாஜ்பாய் வலியுறுத்தியுள்ளார்.

சுகவீனமுற்றிருக்கும் பிரதமர் வாஜ்பாய் வியாழன் மாலை ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசினார். உடல் நலக் குறைவின் மத்தியிலும் தம்முடன் பேசுவதற்கு நேரம் ஒதுக்கியதையிட்டு விக்கிரமசிங்க இந்தியப் பிரதமருக்கு நன்றி தெரிவித்தார்.

இலங்கையுடனான நட்புறவை வளர்த்துக் கொள்வதில் வாஜ்பாய் அரசு காட்டிவரும் அக்கறையையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதாகவும் அவர் பிரதமரிடம் தெரிவித்தார். அத்துடன் அரசியல்தீர்வு ஒன்றைக் காண்பதற்காக முத்தரப்பு உடன்பாட்டுக்கு வருவதற்காக அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே இடம்பெற்றுவரும் பேச்சுக்கள் தொடர்பாக இந்தியப் பிரதமருக்கு ரணில் தெளிவுபடுத்தினார்.

விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு இணங்க வைக்கும் பொறுப்பை நோர்வேயிடம் ஒப்படைத்துள்ளதாகவும் அவர் பிரதமரிடம் தெரிவித்தார்.

இறுதியாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்புத் தொடர்பாகவும் இரு தலைவர்களும் இச்சந்திப்பில் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். (ஐ-10)

# கருணாநிதியை ரணில் செவ்வாயன்று சந்திப்பார்

கொழும்பு,ஏப்.22

இந்தியாவில் விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் செவ்வாயன்று தமிழக முதல்வர் மு.கருணாநிதியைச் சந்தித்துப் பேசவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று வெள்ளிக்கிழமை ரணில் கேரள மாநில முதல்வர் ஈ.கே. நாயனாரைச் சந்தித்துப் பேச இருந்தார்.

புதுடில்லியில் தங்கியிருந்த சமயம் அரசியல் தலைவர்கள் பலரைச் சந்தித்துப் பேசிய ரணில் பிரதமர் வாஜ்பாயையும் சந்திக்க ஏற்பாடாகி இருந்தது.

எனினும் பிரதமர் வாஜ்பாய் சுகவீனமுற்றிருந்ததால் இச்சந்திப்பு நேற்று முன்தினம் மாலை வரை ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

# ஜே.வி.பி. மீண்டும் ஆயுதம் ஏந்தும்?

## புலனாய்வு வட்டாரங்கள் சந்தேகம்

ஜே.வி.பி. அமைப்பு மீண்டும் ஆயுதப் போராட்டத்தில் இறங்கக் கூடும் என்று புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஜே.வி.பி. அமைப்பு ஜனநாயக வழியைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என அந்த அமைப்பின் ஒரு தரப்பினர் கருத்து வெளியிட்டுள்ள வேளையில் அவ்வாறான முயற்சிகள் அர்த்தமற்றவை எனவும் எனவே மீண்டும் ஆயுதப் போராட்டங்களில் ஈடுபடவேண்டும் என மற்றொரு சாரார் கருதுகின்றனர் என அரசின் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1988-89 ஆண்டுகளின் போது நடத்தப்பட்ட ஆயுதப் போராட்டங்களைப் போன்று மீண்டும் போராட்டங்களை நடத்தக் கூடாது என்பதே ஜே.வி.பியின் பழைய உறுப்பினர்களின் கருத்தாகும். ஆனால் தேர்தல்களின் மூலம் தமது அமைப்பு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது என்பது அண்மைக் காலத்தில் அந்த அமைப்பில் சேர்ந்த உறுப்பினர்களின் கருத்தாக உள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது இடதுசாரி ஐக்கிய முன்னணியில் இணைந்து போட்டியிட்ட ஜே.வி.பியினருக்கு மிகச் சொற்ப வாக்குகளே கிடைத்துள்ளன.

ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலாளர் விமல்வீரவங்ஸவின் செல்வாக்கு அந்த அமைப்புக்குள் சரிந்து வருவதும், நாடாளுமன்றக் குண்டுவெடிப்புச் சந்தேக நபரான அஜித் குமாரவின் செல்வாக்கு அதிகரித்து வருவதும் தெரிந்ததே.

சமாதான முயற்சிகளுக்கு எதிராக பௌத்தபிக்குகள் அண்மையில் மேற்கொண்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் இந்த அஜித் குமாரவின் அணியினர் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர் - என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## பரீட்சைகளில் மாணவர்கள் சிறந்த பெறுபேறு பெறாவிடில் அதிபர்களுக்கு இடமாற்றம்

கொழும்பு,ஏப்.22

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் பிரதேச செயலக மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டு, ஆளணி மற்றும் உபகரண வசதிகள் அளிக்கப்பட்ட பாடசாலைகளில் பரீட்சைகளின் பெறுபேறுகள் 40 சதவீதத்திற்கு மேலாக இருக்கவேண்டும். தவறின் அந்தப் பாடசாலைகளின் அதிபர்களை வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்வது எனக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாட்டின் தென்பகுதியில் இவ்வாறாக 45 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் குறித்த பெறுபேறுகளைப் பெறாத பாடசாலைகளின் அதிபர்களுக்கு இடமாற்றங்களை வழங்கி அவர்களுக்குப் பதிலாக அதிபர்களாகப் பொறுப்பேற்கவுள்ளவர்கள் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## சுற்றிவளைப்பு

புலோலி தெற்கு கிராம சேவை அலுவலர் பிரிவிலுள்ள சாரந்தோட்டம் பகுதி நேற்று அதிகாலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு பெரும் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. வீடுகளில் இருந்தவர்கள் அனைவரும் தென்புலோலி ஸ்ரீ முதலிஅம்பாள் ஆலயப் பகுதிக்கு அழைத்து வரப்பட்டு, அங்கு நடைபெற்ற விசாரணையின் பின் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ஐ-109-15)

## தயா நகைப் பூங்கா

'உதயன்' புத்தாண்டுச் சிறப்பு மலரில் வெளியான தயாநகைப் பூங்கா (இல.213C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்) விளம்பரத்தில் உரிமையாளரின் பெயர் செ.தயானந்தன் என்றிருக்கவேண்டும் தவறுதலாக செ.ஜெயானந்தன் என வெளியாகிவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

## அதிரடி ராங்கு

"தட்டிக் கேட்க ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்" என்பார்கள். அந்த நிலைமைதான் இப்போது குடாநாட்டில்.

இளவட்டுகள் ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக சேர்ந்து கொண்டு பண்ணுகின்ற அட்டகாசங்கள் எல்லை மீறிப் போய்க் கொண்டிருக்கின்றன. இந்த இளவட்டுகள் இப்படியே வளர்ந்தால் ஒரு காட்டுமிராண்டித்தனமான சமுதாயம்தான் உருவாகும் என்று மனம் நொந்து பேசுகிறார் ஒரு மூத்த பிரமுகர்.

கோயில்கள், பொதுஇடங்களில் மாலைவேளைகளில் இந்தக் கும்பல்கள் செய்யும் 'குழப்படிகள்' கட்டுப்படுத்துபவர்கள் இல்லாததால் மிக அநாகரிக எல்லையைத் தொட்டு நிற்கின்றன.

அத்தகைய கூட்டம் ஒன்று நல்லூர் முன்றில் பகுதியில் இப்போது மாலை வேளைகளில் திரண்டு வருகின்றது. கூட்டமாகக் கூடினால் தாங்கள் செய்வது என்னவென்றே இந்தக் குழுவினருக்குத் தெரிவதில்லை. சில தினங்களுக்கு முன்னர் அப்பகுதியில் உள்ள கடைக்கார இளைஞர் ஒருவர் இக்குழுவினால் தாக்கப்பட்டார். 'சண்டித்தனம்' கட்டு மீறுகிறது.

"இந்தக் குழுவின் போக்கை இப்படியே வளரவிட்டால் விரைவில் நடக்கவிருக்கும் நல்லூர்த் திருவிழாவின்போது வீதிகளில் இரத்தஆறு ஓடுவது நிச்சயம்; இளம் பெண்கள் கோயில் பக்கம் தலை காட்டுவதே பாவம் என்றாகிவிடும்" - என்கின்றார் அப்பகுதியில் வசிக்கும் ஒரு குடும்பஸ்தர்.

சம்பந்தப்பட்ட குழுவின் வழிகாட்டிகள், உறுப்பினர்கள், அவர்களின் பின்னணிகள், விலாசங்கள் போன்றவை சில மட்டங்களினால் சேகரிக்கப்படுவதாகவும், இயக்கக் கூடியவர்கள் இயங்கத் தொடங்கியிருப்பதாகவும் உறுதிப்படுத்தப்பட்ட சில தகவல்கள் கூறுகின்றன.

நிலைமை விபரீதமாகப் போக முன்னர் சம்பந்தப்பட்ட இளவட்டுகளின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் எச்சரிக்கையாகி தங்கள் பிள்ளைகளைக் கண்டித்துப் பாதுகாப்பான முன் நடவடிக்கைகளை எடுக்கும்படியும் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

நடவடிக்கைகள் எல்லை மீறிய பின்னர் முழித்துக்கொள்வது "குதிரை ஓடியபின் லாயத்தை மூடிய" கதையாகிவிடும்.

இந்துக் கோயில்களில் மட்டுமல்லாமல் கிறிஸ்தவ நிகழ்ச்சிகளிலும் கூட இத்தகைய அநாகரிகக் குழுக்களின் தொல்லை தாங்கமுடியாமல் தான் இருக்கின்றது.

கிறிஸ்தவர்களுக்கு முக்கிய காலங்களுள் ஒன்று தபசுக் காலம். அதிலும் அக்காலங்களுக்குள்ளே மிகப் புனிதமானதாகக் கடைப்பிடிக்கப்படுவது பரிசுத்தவாரம். இக்காலத்தில் பல ஒறுத்தல்கள், தியாகங்கள், மன ஒழுக்கங்களைப் பின்பற்றுவது - அனுசரிப்பது - கிறிஸ்தவர்கள் பண்பு. இக்காலத்தை ஒட்டி - கிறிஸ்துவின் பாடுகளை வெளிக்கொணர்வதற்காக - யாழ்.திருமறைக் கலாமன்றம் ஒரு நிகழ்வை அண்மையில் நடத்தியது.

பக்திபூர்வமாக நடத்தப்பட்ட இந்நிகழ்வை மக்கள் கண்கலங்க, மெய்யுருக கண்களில் பருகி நிற்க, விசிலடிச்சான் கூட்டம் ஒன்று அங்கு திரண்டு தன் குணத்தைக் காட்டி அந்தபக்திபூர்வ சமய நிகழ்வை கவர்ச்சி சினிமாவை ரசிப்பது போல ஆர்ப்பாட்டம் பண்ணியது; நிகழ்ச்சி முடிந்து மக்கள் வெளியேறும்போது பெண்களுடன் அங்க சேஷ்டை விடவும் அக்கூட்டம் தவறவில்லையாம்.

"எல்லாம் 'அவன்' செயல்" என்பார்கள். அதை சற்று மாற்றி "எல்லாம் 'அவர்கள்' பார்த்துக் கொள்வார்கள்" என்று நம்பிக்கை வைப்பதைத் தவிர என்ன செய்யலாம் என்று கேட்கிறார் அந்த மூத்த பிரமுகர்.

* * *

யாழ்ப்பாணத்தில் உள்ள முக்கிய கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது பலாலி சேவை மூலம் அவ்வப்போது நேரடி அஞ்சல் செய்வது வழமை. தீவுப் பகுதியில் உள்ள பல ஆலயங்களின் திருவிழாக்கள் அண்மைக் காலத்தில் இப்படி நேரடி அஞ்சல் செய்யப்பட்டது.

முற்றும் முழுதாக சேவை அடிப்படையில் - தனது பணியாக - இந்தச் சேவையை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வழங்கி வருகின்றது. சில சமயங்களில் கோயில் நிர்வாகத்தினர் ஒரு சில நூறு ரூபாய்களை தொலைபேசிக் கட்டணத்துக்கு செலவிட நேர்வதுண்டு. இதுதவிர இந்தச் சேவைக்குக் கட்டணம் எதுவுமில்லை.

ஆனால் இங்குள்ள ஆசிரியர் ஒருவர் உட்பட இடை 'புரோக்கர்களான' மற்றும் சிலர் நேரடி அஞ்சல் ஒழுங்கு செய்வதற்கான கட்டணம் என்று கூறி கணிசமான ஒரு தொகையை (சில ஆயிரங்களில்) பல கோயில்களில் அறவிட்டு தங்கள் பொக்கற்றுக்குள் போட்டு நிரப்பிக் கொண்டமை பற்றிய தகவல் இப்போது அம்பலத்துக்கு வந்திருக்கின்றது.

அண்மையில் தீவகத்தில் மேற்படி நேரடி அஞ்சல் நிகழ்ச்சிகளுக்கு வந்திருந்த ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சில முக்கியஸ்தர்களின் காதுகளில் இந்தத் தகவல் விழுந்ததை அடுத்து அவர்கள் கொதித்துப் போய்விட்டார்களாம். சம்பந்தப்பட்டவர்களை நேரில் அழைத்து 'செம டோஸ்' கொடுத்ததாகவும் தெரிகின்றது.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சாட்டி பல கோயில்களிலும் கணையாக அறவிட்ட ஆயிரங்களை உடனடியாக அந்தந்தக் கோயில் நிர்வாகங்களிடம் திருப்பி ஒப்படைக்காவிட்டால் விசாரணை, நடவடிக்கை என்று விவகாரம் மாறும் என்றும் அவர்கள் எச்சரிக்கப்பட்டதாகக் கேள்வி.

கோயில் நிர்வாகங்களுக்கு வெளியில் இருப்போர் பத்திரிகையில் உற்சவகால சிறப்பு மலர் வெளியிடுகின்றோம் என்று கூறி வெளியில் வர்த்தக நிலையங்களில் பெருந்தொகைப் பணத்தைச் சேர்த்து ஒரு கணிசமான தொகையைப் பத்திரிகைகளுக்குச் செலுத்திவிட்டு எஞ்சிய தொகையைச் சுருட்டி தமது பொக்கட்டுக்குள் போட்டுக்கொள்வதும் இங்கு அடிக்கடி நடக்கின்றது.

கோயில் உற்சவங்கள், பாடசாலை நிகழ்ச்சிகள், பொது விழாக்கள் போன்றவற்றை ஒட்டிய பத்திரிகை மலர்களுக்கு விளம்பரம் கொடுப்போர் தாம் செலுத்தும் தொகைக்குரிய ரசீதை தங்களது பெயரில் சம்பந்தப்பட்ட கோயில் அல்லது பாடசாலை அல்லது பொது நிறுவனத்திடமிருந்து அல்லது பத்திரிகையிடமிருந்து பெற்றுக்கொள்வது இத்தகைய குளறுபடிகளைத் தடுக்க வகை செய்யும்.

* * *

பளை மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உடனடியாக இரண்டாயிரம் ரூபா நிவாரணம் வழங்கப்படும் என்று உத்தியோகபூர்வமாக அறிவித்து அதற்கான பதிவுகளும் இடம்பெற்று வருகின்றன. ஆனால் மாதாந்தம் ரூபா 1500க்கும் குறைந்த வருமானம் பெறும் - அகதி முகாம்களில் தங்கியிருக்கும் - குடும்பங்களுக்கு மட்டுமே இந்த நிவாரணம் வழங்கப்படுமாம். இதுவும் வழங்கப்படும் குடும்பங்களில் எண்ணிக்கையும் மிகக்குறைவாக இருக்கும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

இதுவே தென்பகுதியாக இருந்தால் - பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பான்மையினராக இருந்தால் - விழுந்தடித்துக்கொண்டு கவனிப்புக்கள் நடந்திருக்கும்.

யுத்தம் தீவிரமடைந்து மக்கள் இடம்பெயர்வும் அவலமும் ஒருபுறம் நடக்க, மறுபுறத்தில் விழாக்கள், விருந்துகள் ஆடம்பரமாக - தடல் புடலாக - நடப்பதையும் சிலர் குறைபட்டுக்கொள்கின்றனர்.

யுத்தத்துக்கு மத்தியிலும் அன்றாட நிகழ்வுகள் நடக்கத்தான் வேண்டும். ஆனால் யுத்த சூழ்நிலையைக் கருதி 'அடக்கி' வாசிக்கலாம்தானே!

– மின்னல்


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



புற்றளை, புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும்
புலோலி மேற்கு விநாயக முதலியார் வீதியை
வசிப்பிடமாகவும் கொண்ட

**திரு.கோ.ஆ.கந்தசாமி**

அவர்கள், அகில இலங்கை சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டதையடுத்து கடந்த 19-04-2000 ஆம் திகதி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்,
மாவட்ட நீதிவான் எஸ். ஏ.ஈ.ஏகநாதன்
முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.
இவரது சமூக சேவை, இப்பதவி மூலம் மென்மேலும்
சிறப்படைய இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்!!

பருத்திநகர்
நண்பர்கள்.

(C/11932)

# அந்தியேட்டி அழைப்பு



## திருமதி
## சாவித்திரிதேவி நடேசன்

தோற்றம்
1936-05-19

மறைவு:
2000-03-23

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 23-04-2000 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் இவரின் இல்லத்தில் நடைபெறும். இவ் வைபவத்திலும் இதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சட்டத்தரணி சீ.இளையதம்பி வீதி,*
*அளவெட்டி தெற்கு,*
*அளவெட்டி.*

(75661)

இங்ஙனம்
**ஏ.நடேசன் (கணவர்)**
**இ.ரவிகுலன (சகோதரன்)**

---

## பதிவு/உதவி வைத்திய அதிகாரிகள் சங்கம் - TU361
## யாழ்ப்பாணக் கிளை

**சகல உறுப்பினர்களுக்கும் இன்று (22-04-2000) செயலாளர் இல்லத்தில் நடைபெறவிருந்த கூட்டமும் 30-04-2000இல் நடத்த உத்தேசிக்கப்பட்ட மிலேனியம் ஒன்றுகூடலும் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.**

(75656)

-- *செயலாளர்*

---

கோப்பாய் வடக்கு-மத்தி விவசாய சம்மேளனத்தின்

## வருடாந்த பொதுக்கூட்டம்

காலம்:- 23-04-2000 (ஞாயிறு)

நேரம்:- முற்பகல் 10.30 மணி

இடம்:- யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்

பல்வேறு நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடப்படுவதுடன், புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறும். அனைவரும் வருக.

*கோப்பாய்.*

பெரும்பாக உத்தியோகத்தர்

(C/11936)

---

## வெளிவருகின்றது!

**தரம் 5 புலமைப்பரிசில் வினாத்தாள்கள்**

## 'மணியம் வெளியீடு இல. 1'

**24-04-2000 அன்று வெளிவருகின்றது.**

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**மணியம் வெளியீடு**
மே/பா சதாபெர்ன்ஸ்,
அல்வாய்.

(C/11934)

---

## மங்களகரமான திறப்புவிழா

**திங்கட்கிழமை (24-04-2000) அன்று**
**காலை 10.00 மணிக்கு (புதிய நேரம்)**
**புதிதாக அமைக்கப்பட்ட**

## "சிவசக்தி பாலர் பாடசாலை"

**சிவன் வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில்**
**மங்களகரமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.**

ஆசிரியர்: செல்வி சகுந்தலாதேவி சண்முகநாதன்

(75662)

- *நிர்வாகசபை உறுப்பினர்கள்.*

---

## இறுதியாட்டம்

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகமும் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன.

பிரதம விருந்தினராக வர்த்தக வங்கி முகாமையாளர் ஆர்.ரஜீவனும், சிறப்புவிருந்தினராக கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் பொ.கமலநாதனும் கலந்து கொள்வர். (உ-3)

## கூட்டுப்படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

குடாநாட்டில் அண்மைக்காலத்தில் படையினருக்கு ஏற்பட்டுவரும் பின்னடைவுகளும் -

யாழ்.குடாநாட்டில் படைகளின் செயற்பாடு தொடர்பான படை அதிகாரிகளின் வழிகாட்டல்கள் குறித்து அரச உயர்பீடத்துக்கு ஏற்பட்ட அதிருப்தியுமே -

குடாநாட்டு இராணுவத் தலைமையில் மாற்றம் கொண்டுவரப்பட்டதற்குக் காரணம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (உ-3)

## கதிர்காமர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் நோர்வே சமாதான முயற்சி தொடர்பாகத் தனது பிரதிநிதி ஒருவரை நியமித்திருப்பது தெரிந்ததே.

இதேவேளை -

கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் முன்பாகக் கடந்த 6 ஆம் திகதி அந்நாட்டின் தேசிய கொடி எரிக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும், மனவருத்தம் தெரிவித்தும் பல பொது நிறுவனங்கள் தூதரகத்துக்கு கடிதங்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## யாழ்., வன்னி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதே சமயம் வடபகுதிப் படைகளில் கட்டளைத் தளபதியாகப் பணிபுரிந்த மேஜர் ஜெனரல் சூல செனிவரத்தின இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவரது இடத்துக்கு மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளார். (உ-3-7)

## வரைந்தவர்

இவ்வார சஞ்சீவி சஞ்சிகையின் XIVஆம் பக்கத்தில் *"உயிர்த்த ஞாயிறு சிறப்பம்சம்"* பகுதியில் *"நமது துன்பங்களுக்கு எல்லாம் நிச்சயம் உயிர்த்தெழுதல் உண்டு"* என்ற தலைப்பிலான கட்டுரையை வரைந்தவர் **திராட்சை யூரான்.** தவறுதலாக அவரது பெயர் கட்டுரையில் விடுபட்டுப் போய்விட்டது. (ஆர்)

## படிவம்

**ஆண்/பெண் தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் விற்பனையாகின்றது. அளவு A-4, பக்கம்-4, வர்த்தமானி பார்வைக்கு உண்டு.**

முடிவு திகதி: 30-06-2000

**பாரதி பதிப்பகம்**
430,காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
*தொலைபேசி: 021-3081*

***அருண் ஸ்போட்ஸ் ஸ்பொட்***
347,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
*தொலைபேசி: 021-2030*

(C/11929)

---

We Serve

# இதய அஞ்சலி

எமது நல்லூர் லயன்ஸ் கழக முன்னாள் தலைவரும் மாவட்ட லியோ கழக தலைவரும் வலயத்தலைவருமான

**லயன் திரு. பா.தவபாலன்** அவர்களின்

அன்புத் தந்தையார்

## தில்லையம்பலம் பாலசுப்பிரமணியம்

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C/11939)

***நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர்கள்.***

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா நாகம்மா

சரசாலை வடக்கைச் சேர்ந்த திருமதி கந்தையா நாகம்மா அவர்கள் நேற்று (21-04-2000) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் கதிரவேலு கந்தையா(ஓய்வுபெற்ற ஆசிரியர், சரசாலை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகி, யோகேஸ்வரன் மற்றும் யோகேஸ்வரி (கல்வயல்), செல்வராணி (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக்கல்லூரி), இந்திராணி,ஜெகதீஸ்வரி (ஆசிரியை, சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம்), ஜெயகாந்தமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இரத்தினம், சிவராஜா, செல்வராஜா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (22-04-2000) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சரசாலை வடக்கு தும்பிக்குளம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(C/11935)

தகவல்.
**க.கந்தையா**
(கணவர்)

## திருமதி தில்லையம்பலம் சிதம்பரம்

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லையம்பலம் சிதம்பரம் நேற்று (21-04-2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் கனகநாயகி (பவளம்)ஆகியோரின் அன்புத்தாயாரும் இராமச்சந்திரனின் அன்பு மாமியும், கனகரூபி, ரவிச்சந்திரன், கஜேந்திரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-04-2000) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

சந்தை முன் ஒழுங்கை,
மானிப்பாய்.

(75660)

தகவல்
**பவளம்**
(மகள்)

## திருமதி செல்லையா கனகம்மா

உசனைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா கனகம்மா நேற்று (21-04-2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாமுவேல் செல்லையாவின் (இளைப்பாறிய பாடசாலை அதிபர்) அன்பு மனைவியும்,காலஞ்சென்ற செல்வச்சந்திரன் மற்றும் செல்வரதி(கனடா),பாலச்சந்திரன் (கணக்காளர், நுவரெலியா), செல்வநிதி, செல்வமதி (ஆசிரியை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), இராமச்சந்திரன் (நதியா நகைமாடம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயராசா(பொறியியலாளர் அபுதாபி),பத்மினி (கொழும்பு), தவேந்திரன்(இளைப்பாறிய பொலீஸ் வானொலி இயக்குநர் W.T.O), பேர்சி-ஜெயக்குமார் (கணக்காளர்,G.T.Z), சியாமளா (ஆசிரியை,புனித ஜோன் பொஸ்கோ, வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் றொஷாந்தி (கனடா), ஜெயந்தன் (கனடா), நிரஞ்சி (கனடா), தர்சினி (டென்மார்க்), தனுஷன் (கொழும்பு), தனஞ்சுன் (கனடா), தனிசன் (கொழும்பு) ததீசன் (கொழும்பு), தர்மிளா, ஜெயலக்ஷ்மன், றொஷ்னி, நிராந்தினி, இராகுலன்,ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (22-04-2000) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு(S.L.T)அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுண்டிக்குளி பரியோவான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

21/02 ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

(75664)

தகவல்
திருமதி செல்வநிதி(தவேந்திரன்)
(மகள்)

## தில்லையம்பலம் பாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற அதிகாரி, சிறைச்சாலை -(ஜெயிலர்),
முன்னாள் கணக்காளர்,ஸ்ரீலங்கா புத்தகசாலை)

தில்லையம்பலம் பாலசுப்பிரமணியம் அவர்கள் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தில்லையம்பலம் ருக்குமணியின் அன்பு மகனும் மனோன்மணியின் அன்புக்கணவரும் லயன் பா.தவபாலன் (சட்டத்தரணி-சட்ட விரிவுரையாளர், உயர் தொழில் நுட்ப நிறுவனம்), நவறாஜி, விஜயபாலன், டாக்டர் இதயராஜி (யாழ்.மாநகரசபை), ஜெயபாலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜித்தா, புஸ்பநாதன், மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும்,ரஜீவ், காண்டீபன், சாயிசஞ்சீவ் (பரியோவான் கல்லூரி மாணவர்கள்), தவலக்ஷ்மி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) விஷ்ணுகாந், ஆர்த்திஜன்(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை) வீஸ்மன், கௌதமி, அஜிந், கீர்த்தனா ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (23-04-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு இல. 185/4 கில்னர்லேன், கஸ்தூரியார் வீதி இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

185/4, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.

(C/11938)

தகவல்
**லயன் பா.தவபாலன்**(சட்டத்தரணி)
(மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22-04-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

கண்களில் ஒளியில்லையா?
கவலையை விடுங்கள்! உங்கள் விழிகளைச் சரியாகப் பரிசோதித்து கண்ணுக்கு அழகு சேர்க்கும் கண்ணாடிகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்



றெனி ஒளிக்குக் கண்ணாடி அகம்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
பிரதேச செயலகம் முன்பாக, கண்டி வீதி, சாவகச்சேரி. (C/11316)



## கருத்துக் கலசம் — மயூரா

**மனிதனாக்கும் மகாசக்தி**

**மக்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு, அவர்கள் தங்களுடைய மனதை ஒருமுகப் படுத்தும் ஆற்றலின் வேற்றுமையில் தான் அடங்கியிருக்கிறது.**

*– சுவாமி விவேகானந்தர் –*

மனிதன் ஆறறிவு படைத்தவன். விலங்குகள் ஐந்தறிவு படைத்தன. ஆறாவது அறிவு சிந்தனா சக்தி. ஐம்புலன்களின் சக்திகளுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியே சிந்தனா சக்தியாகும். சிந்தனா சக்தியின் விஷேட தன்மை பகுத்தறிவு.

இது நல்லது. அது தீயது என்று வேறுபடுத்திப் பார்க்கவல்லது பகுத்தறிவு; இதனை இவ்வாறு செய்தால் நல்ல பயன் கிடைக்குமா அல்லது இன்னொரு விதமாகச் செய்யின் அதிக பயன் தருமாஎன்று ஆராய்ந்து முடிவு செய்யும் வல்லமையும் பகுத்தறிவே.

ஆனால் சுவாமி விவேகானந்தரோ, மனிதனுக்கும் மிருகங்களுக்கும் உள்ள வித்தியாசத்தை வேறு விதமாகப் பார்க்கிறார். மனிதனையும் மிருகங்களையும் வகுத்துப் பார்க்க உதவுவது மனம் என்ற கருத்தை முன்வைக்கிறார்.

மனிதனுக்கு மனம் உண்டு மிருகங்களுக்கு அது இல்லை. மனம் நினைக்கிறது. அதன் பிரகாரம் அல்லது அதன் வழி நடத்தலின் பிரகாரம் மனிதன் செயற்படுகின்றான் மிருகங்களோ ஐம்புல உணர்வுகளின் தூண்டுதலின் அல்லது உந்துதலின் படி செயற்படுகின்றன. இந்த வகையில் நோக்கும் போது மனமே மனிதனுக்கு உள்ள மேலதிக அறிவு என்றாகிறதல்லவா?

மனிதனை ஆள்வது மனம். ஆனால் அந்தமனம் விரும்பியவாறு மனிதன் நடப்பானேயாயின் அவன் பல கஷ்டங்களையும் நஷ்டங்களையும் ஆபத்துக்களையும் எதிர்நோக்க நேரிடும். ஆகையால் மனதைக் கட்டுப்படுத்தக் கூடிய வல்லமை அவனுக்குத் தேவை. அந்த வல்லமையை உரிய பயிற்சியின் மூலமே பெறமுடியும்.

மனக்கட்டுப்பாடு நாளாந்த வாழ்க்கையில் மனிதனுக்கு நன்மையையும் பெருமையையும் தேடித் தரும். மனக்கட்டுப்பாடு உள்ளவனிடம் மட்டுமே நல்ல குணாம்சங்கள் அமையும். நல்ல குணவியல்புகள் எப்போதும் நன்மையையே செய்யும்; அவை ஏனையோருக்கு உதாரணமாக அமைந்து பெருமையையும் கொண்டு வரும்.

தான் விரும்பியவாறு மனதை அலையவிடாமல், நேரத்துக்கு நேரம், வெவ்வேறு இடங்களுக்குத் தாவ விடாமல் கட்டுப்படுத்தக் கூடியவனால் மட்டுமே அதனை ஒருமுகப் படுத்தவும் முடியும். மனதை ஒருமுகப்படுத்துபவனால் மட்டுமே ஏனையோரை வெல்ல முடியும். மனதை ஓரிடத்தில் ஒரே நினைவாகச் செலுத்தும்போது அது செறிவடைந்து பலமடைகிறது. அந்தப் பலம் அபார சக்தி உடையது. அந்தப் பலத்தினால் கடவுளையும் காண முடியும்.

எமது ஞானிகளும் அனுபூதிமான்களும் தியானத்தின் ஊடாக மனதை ஒருமுகப்படுத்தி இறைவனைக் கண்டார்கள்; அவனது அருளைப் பெற்றார்கள். அந்த ஆற்றலே மகாசக்தி. அத்தகைய மகாசக்தியைப் பெறும்போதும் மனிதன் மிருகத்தைவிட வேறுபடுகின்றான். மனிதன் மிருகமாகாமல் இருப்பதற்கு அந்த மகாசக்தி தேவை. எனவே மனதை ஒருமுகப்படுத்தி எங்கள் செயல்களை நல்வழிப்படுத்துவோம்.

# சிறுவர் துஷ்பிரயோகம் சமூகத்துக்கு சாபக்கேடு



இன்றைய சிறுவர்களே நாளைய சமூகத்தின் கலங்கரை விளக்குகள். சிறுவர்களை ஒரு ரோஜாச்செடியில் நிறைந்து நிற்கும் மொட்டுக்களுக்கு ஒப்பிடலாம். அந்தளவுக்கு அவர்களின் உணர்வுகள் மிருதுவானவை; அழகானவை; கூடவே அற்புதமானவை. சிறுவர்களின் விருப்பு வெறுப்புக்கள், அவர்களின் சிந்தனைகள், கற்பனைகள் என்று எல்லாமே மிகவும் நுணுக்கத்துடன் அணுகப்பட வேண்டியவை. ஒரு பண்பாடான சமூகத்தில் கண்ணென மிகவும் கவனத்துடன் மதிக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டியவர்கள்சிறுவர்கள். அவர்களின் ஆரோக்கியமான - நிறைவான - உடல், உள வளர்ச்சியில் பலவிதமான காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. பெற்றோர், உறவினர், ஆசிரியர், வைத்தியர் எனச் சமூகத்தின் சகல தரப்பினரும் அச்சமூகத்துச் சிறுவர்களின் நிறைவான உடல், உள வளர்ச்சியில் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ பங்கெடுத்துக்கொள்கின்றனர். இதன் மூலம் சமூகக் கட்டமைப்பில் உள்ள அனைவருமே சிறுவர்களின் முன்னேற்றத்தில் பொறுப்புமிக்கவர்களாக இருக்க வேண்டிய நியாயப்பாடு எழுகின்றது. ஆனால் சிறுவர்களின் உணர்வுகள் எந்தளவுக்கு இன்றைய சமூகத்தினால் மதிக்கப்படுகின்றன என்பதற்கு இந்த உண்மைச் சம்பவம் விடை பகருகின்றது:-

"நூக்" பதின்னான்கு வயது நிரம்பிய அப்பாவிச் சிறுமி. நூக்கின் பெற்றோர் விவசாயத் தொழிலினை மேற்கொண்டிருந்தனர். அவளுக்கு ஐந்து சகோதரர்களும், சகோதரிகளும் உண்டு. நூக் தனது குடும்பத்தவர்களுடன் தாய்லாந்திலுள்ள சிறிய கிராமம் ஒன்றில் வாழ்ந்த வந்தாள். அவள் தனது ஆறாம் ஆண்டுக் கல்வியைப் பூர்த்தி செய்திருந்தாள். அவளது பெற்றோர் அவளை பாங்கொக்கில் உள்ள உணவுவிடுதியொன்றில் வேலை செய்ய முகவர் ஒருவனுடன் அனுப்பியிருந்தனர். நூக் உணவு விடுதியில் வேலை செய்யாமல் பாங்கொக்கில் உள்ள விபச்சார விடுதியொன்றில் விபச்சாரியாக அவளைக் கூட்டிச்சென்ற முகவரினால் அமர்த்தப்பட்டாள். அவள் இரவு பகலாக கட்டாயத்தின்பேரில் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டாள். சம்பளமாக மிகவும் குறைவான பணம் வழங்கப்பட்டது. அவ்விதம் கிடைத்த பணத்தினையே கிராமத்தில் இருக்கும் தனது குடும்கத்தினருக்கு அனுப்பிக்கொண்டிருந்தாள். ஆனால் கிராமத்தில் இருக்கும் அவளது வறிய பெற்றோர் தமது மகள் உணவு விடுதியிலேயே வேலை செய்வதாக எண்ணியிருந்தனர். ஏறக்குறைய மூன்று வருடங்களின் பின்னர் நூக் இருந்த விபச்சார விடுதி பொலிஸாரினால் கண்டு பிடிக்கப்பட்டு மூடப்பட்டு நூக் வீட்டுக்கு அனுப்பப்பட்டாள்.

இவ்விதமாக சிறுவர்களின் உணர்வுகள் மதிக்கப்படாமல், அவர்களின் ஆதார அடிப்படை உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுகின்றன. சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். நாளைய பூக்களாக மலரவேண்டிய மொட்டுக்கள் கசக்கப்பட்டு சீரழிக்கப்படுகின்ற நிகழ்வுகள் உலகமெங்கும் நிகழ்கின்றன. ஆயினும் வறிய, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே சிறுவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு, மறைக்கப்பட்டு, சிறுவர் துஷ்பிரயோகங்கள் பலமடங்கு மேலோங்கி நிற்கின்றன. சிறுவர் துஷ்பிரயோகங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றால் முதலில் சிறுவர்களுக்குரிய உரிமைகள் (Rights of the child) பற்றிய தெளிவான விளக்கம் சமூகத்தின் எல்லாத் தரப்பினரிடையேயும் ஏற்படுத்தப்படவேண்டும். மனிதனின் அடிப்படை உரிமைகள் சிறுவர்களின் உரிமைகளிலிருந்து பர்ணமிக்கின்றன.

## சிறுவர்களின் உரிமைகள் (Rights of the Child)

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஒப்பந்தத்தில் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான 54 உடன்படிக்கை முடிவுகள் காணப்படுகின்றன. இதன்படி பதினெட்டு வயதிற்கு குறைந்த ஒவ்வொரு நபரும் சிறுவனாக அல்லது சிறுமியாக கட்டாயம் கணிக்கப்படவேண்டும். இந்த ஒப்பந்தத்தில் உள்ள உரிமைகள் உலகில் உள்ள அனைத்துச் சிறுவர்களுக்கும் உண்டு. ஒரு நாடானது தனது நாட்டில் உள்ள சிறுவர்களை குடும்பத்தின் நிலை,குடும்ப நடவடிக்கைகள்,குடும்ப நம்பிக்கைகள் என்பன சார்ந்த எந்த விதமான பாகுபாடு அல்லது தண்டனைகளிலிருந்தும் காப்பாற்றக் கடப்பாடு உடையது. ஒவ்வொரு சிறுவனுக்கும் வாழ்வதற்கான வாழ்வியல் உரிமையுண்டு. அதனை ஒரு நாடானது உறுதிப்படுத்தி சிறுவர்களின் வாழ்வியலுக்கும் அவர்களின் ஆரோக்கியமான - நிறைவான - அதிகூடிய வளர்ச்சியினையும் உறுதிப்படுத்தக் கடப்பாடு உடையது.

ஆனால் இன்று அபிவிருத்தியடைந்து வரும் மூன்றாம் உலக நாடுகளில் வாழும் சிறுவர்களின் வாழ்வியல் உரிமை கேள்விக்குரியதாகிக் கொண்டிருக்கின்றது. உள்நாட்டுப் போரினால் பெரும்பாலான ஆசிய - ஆபிரிக்க நாடுகளில் உள்ள சிறுவர்களின் வாழ்வியல் உரிமை மறுக்கப்பட்டு வருகின்றது. அண்மையில் கிழக்குத் திமோரில் ஏற்பட்ட கலவரத்தின் போது ஏராளமான சிறுவர்கள் அகதிகளாக்கப்பட்டனர். அவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டன.

## கல்வி கற்பதற்கான உரிமை

கல்வி கற்பதற்கான உரிமை சகல சிறுவர்களுக்கும் உண்டு. ஒவ்வொரு நாடும் இலவசமாகவும், கட்டாயமானதுமான ஆரம்பக் கல்வியை தனது சிறுவர்களுக்கு வழங்கவேண்டும். மேலும் சிறுவர்களின் மனித கௌரவத்தினை வெளிப்படுத்தக்கூடியதாக பாடசாலை ஒழுக்கம் இருப்பதனையும் உறுதிப்படுத்த வேண்டும். மேலும் சிறுவர்களின் மனித கௌரவத்தினை வெளிப்படுத்தக் கூடியதாக உறுதிப்படுத்த வேண்டும். இவ்விதம் கல்வி தொடர்பாக சிறுவர்களுக்குரிய உரிமைகள் தெளிவாக வரையறுக்கப்பட்டும் இன்றும் பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் கல்வி வாசனையின்றி இருக்கின்றனர். எமது சமூகத்திலும் பல சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் இருக்கின்றனர். குடும்பத்தில் நிலவும் வறுமை, பெற்றோரின் கல்வியறிவின்மை, நிகழ்ந்து கொண்டிருக்கும் போரினால் தாய், தந்தையரை இழந்து அநாதைகளாகிவிட்ட நிலைமை போன்ற காரணங்களினால் எமது சமூகத்தைச் சேர்ந்த பல சிறுவர்கள் தமது ஆரம்பக் கல்வியைக்கூடத் தொடரமுடியாதவர்களாக இருக்கின்றனர்.

> இலங்கையைப் பொறுத்தமட்டில் சிறுவர்களை வீட்டுவேலைக்கு அமர்த்துவதன் மூலம் (Domestic servant) இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோக நிகழ்வுகள் இங்கு அதிகம். தெற்கில் 700 நகரக் குடும்பங்களில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி பன்னிரண்டு வீட்டுக்கு ஒரு வீட்டில் சிறுவர் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இதைவிட மலையகப்பகுதிகளில் வாழும் பெருந்தோட்ட தொழிலாளர்களில் 44 வீதமானவர்கள் சிறுவர்களாகக் காணப்படுகின்றனர். சிறுவர்களை வீட்டு வேலைக்கு அமர்த்தி பாரிய சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டு வருபவர்களில் சமுதாயத்தில் உயரிய இடத்தில் இருக்கும் வைத்தியர்கள், வியாபாரிகள், ஆசிரியர்கள் என்போர் முக்கிய பெரும்பான்மையான இடம் வகிக்கின்றனர். தமக்கு சமுதாயத்தில் கிடைக்கும் நன்மதிப்பைப் பயன்படுத்தி சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடும் மேற்குறிப்பிட்டோருக்கு பின்வரும் காரணிகளும் உதவுகின்றன.
>
> 1) சிறுவர்கள் தமக்குரிய அடிப்படை மனித உரிமைகள் குறித்து அறியாதவர்களாக இருப்பதனால் அவர்களை இலகுவில் ஏமாற்றலாம்.
>
> 2) சிறுவர்களுக்கு மிகவும் குறைவான சம்பளம் கொடுக்கலாம் அல்லது கொடுக்காமலே விடலாம் என்ற சமுதாய நிலை.

> ஏறக்குறைய பள்ளி செல்லும் வயதை எட்டிய 13கோடி சிறுவர்கள் பள்ளிக்கூடத்திற்கு செல்லாமல் இருக்கிறார்கள். அவர்களில் மூன்றில் இரு பகுதியினர் சிறுமிகள் ஆவர்.
>
> இந்தப் புத்தாயிரமாம் ஆண்டின் தொடக்கத்தில் 85கோடி50லட்சம் மக்கள் படிப்பறிவற்றவர்களாக இருப்பார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது உலக முழுசனத் தொகையின் ஆறில் ஒரு பங்காகும். இக்கணக்கீடு கல்வி கற்பதில் நாம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினையை எடுத்துக்காட்டுகின்றது.

• எமது சமூகத்தைச் சேர்ந்த சிறுவர்கள் அனைவருக்கும் கட்டாயமான ஆரம்ப இலவசக் கல்வியை வழங்குவதற்கு நாம் ஒவ்வொருவரும் முன் வரவேண்டும். பாடசாலை செல்லாமல் வீட்டு வேலைக்காரர்களாக அமர்த்தப்பட்டிருக்கும் எம்மினச் சிறுவர்களை அடையாளம் கண்டு, அச்



சிறுவர்களை அந்நிலையிலிருந்து மீட்டெடுத்து, அவர்களின் உரிமையான ஆரம்பக் கல்வியைத் தொடர நாம் ஒவ்வொருவரும் உதவ வேண்டும். அவ்விதம் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களின் கல்விகற்கும் உரிமையை மறுப்பவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும்.

## சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்

பொருளாதார ரீதியிலான சுரண்டல்களிலிருந்தும், உடல் நலத்திற்குக் கேடுவிளைவிக்கும், கல்விக்குப்பங்கம் விளைவிக்கும் வேலைகளில் ஈடுபடுவதிலிருந்தும் சிறுவர்கள் ஒவ்வொருவரும் பாதுகாக்கப்படவேண்டும். அத்துடன் ஒரு நாடானது வேலையில் அமர்த்துவதற்குரிய குறைந்தபட்ச வயதினையும் வரையறுக்க வேண்டும். இலங்கையைப் பொறுத்தமட்டில் பதினான்கு வயதுக்குக் குறைந்த சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது சட்டப்படி குற்றமாகும். ஆனால் பதினான்கு வயதிற்குக் குறைந்த பல சிறுவர்கள் இன்றும் எமது சமூகத்தில் வேலையில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள்.

அண்மையில் எமது சமூகத்தில் இடம்பெற்ற வேதனைக்குரிய நிகழ்வு, பல சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டு சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாவதை கோடிட்டுக் காட்டி நிற்கின்றது. வேலைக்காரச் சிறுமியொருத்தி முன்னணி மகளிர் கல்லூரி ஆசிரியையொருவரினால் அடித்துத் துன்புறுத்திச் சித்திரவதை செய்யப்பட்ட

(11ஆம் பக்கம் பார்க்க)

# சிறுவர் துஷ்பிரயோகம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளார். வேலைக்கு அமர்த்தப்பட்ட சிறுமியின் கல்வி கற்பதற்குரிய உரிமையை மறுத்து ஆசிரியை அச்சிறுமியை பலதடவை அடித்து கால், கை போன்ற அங்கங்களில் முறிவை ஏற்படுத்தியும், உரிய வைத்திய சிகிச்சை கொடுக்கத்தவறியும் பாரிய சிறுவர் உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தார். ஈற்றில் அயலவர்களின் உதவியினால் அச்சிறுமி காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்



கப்பட்டதும் அந்த ஆசிரியையின் கொடூரம் எமது சமூகத்திற்குத் தெரியவந்தது. மாணவர்களுக்கு வழிகாட்டியாக விளங்க வேண்டிய ஆசிரியையின் இவ்வாறான சிறுவர் உரிமை மீறல்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் முழு ஆசிரிய உலகத்திற்குமே அவப்பெயரைத் தேடித்தந்துள்ளன.


**மு. கோபாலகிருஷ்ணன்**

**க. சிவதசுதன**

(மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)


இவ்வாறான சிறுவர் துஷ்பிரயோக நிகழ்வுகள் இனிவரும் காலங்களில் எமது சமூகத்தில் இடம்பெறாமல் தடுப்பதற்கு நாம் அனைவரும் முன்னின்று உழைக்கவேண்டும். சமூகமானது சிறுவர்களுக்கு வேண்டிய சமூகப்பாதுகாப்பினை (Social Security) வழங்கி அவர்களுக்குரிய உளவியல் அரவணைப்பினை வளம்படுத்திக் கொள்ள வேண்டும். சிறுவர்கள் வேலைக்கு அமர்த்துதல் தொடர்பாக செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணிகளாக விளங்கும் வறுமை, போரியல் சூழ்நிலை, வேலைவாய்ப்பின்மை, கட்டாய ஆரம்ப இலவசக்கல்வி கிடையாமை ஆகியனவற்றை நிவர்த்தி செய்ய ஒவ்வொரு நாடும் முயலவேண்டும். சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதனை உடனடியாக முற்றாக அகற்றமுடியாதுள்ள போதிலும் பின்வரும் நடைமுறைகளை இறுக்கமாக கைக்கொள்வதன் மூலம் இதனைக் குறைக்கலாம்.

(1) சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதனை சட்டத்தின் மூலம் தடுத்தல்.

(2) தொழிற்சாலை சங்கங்களின் மூலம் சிறுவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தல்.

(3) எல்லாச்சிறுவர்களுக்கும் கல்வி கற்பதற்கும் பொருளாதார ரீதியிலான சுரண்டல்களிலிருந்து (Exploitation) பாதுகாக்கப்படுவதற்கும் உரிய உரிமை ஒவ்வொரு நபரினாலும் உணரப்படவேண்டும்.

(4) போரினால் அகதிகளாக்கப்பட்ட சிறுவர்களுக்கும், யுத்தத்தினால் தாய், தந்தையரை இழந்து தவிக்கும் அநாதைச் சிறுவர்களுக்கும் வேண்டிய பாதுகாப்பு உணவு, உடை, உறையுள், கல்வி மற்றும் பிறசேவைகளையும் ஒரு நாடானது வழங்க வேண்டும். அத்துடன் இச்சேவைகளை வழங்கும் தொண்டு நிறுவனங்களுக்கு பூரண ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும்.

## சிறுவர் துஷ்பிரயோகம்

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஒப்பந்தத்தின் 19 ஆம் இலக்க உடன்படிக்கையின் முடிவில் பின்வரும் வலியுறுத்தல் காணப்படுகின்றது.

"எல்லாவிதமான உடலியல், உளவியல் ரீதியிலான காயங்களிலிருந்தும் சிறுவர்கள் பாதுகாக்கப்படவேண்டும். அத்துடன் துஷ்பிரயோகம், புறக்கணிப்பு, பொருளாதார ரீதியிலான சுரண்டல் போன்றவற்றிலிருந்தும் கண்டிப்பாக சிறுவர்களைப் பாதுகாக்க ஒரு நாடு கடப்பாடு உடையது."

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான இவ்வலியுறுத்தல் எந்தவொரு நாட்டினாலும் முற்று முழுதாக கைக்கொள்ளப்படுகின்றது என்று கூறமுடியாது. ஆனாலும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் சிறுவர் துஷ்பிரயோக நிகழ்வுகள் கடுமையான சட்ட நடவடிக்கைகளினால் மிகக் கணிசமான அளவு குறைந்துள்ளது. இந்நிலைமை வளர்முக நாடுகளில் மிகவும் மோசமான நிலையினை எட்டி நிற்கின்றது. வளர்முக நாடுகளில் வாழும் சிறுவர்களில் 85வீத மானவர்கள் வெவ்வேறுவிதமான சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

"சிறுவர் துஷ்பிரயோகம்" என்பதன் வரைவிலக்கணம் இடத்துக்கிடம் வேறுபடுகின்றது. ஆனால் ஒரு சமூகத்தின் வழக்கத்தில் உள்ள நடைமுறைகளுக்கு மாறாக அச்சமூகத்து சிறுவர்கள் நடத்தப்படுவதனை நாம் "சிறுவர் துஷ்பிரயோகம்" (Child Abuse) என வரையறுத்துக்கொள்ளலாம். பொதுவாக ஒவ்வொரு நாட்டிலும் நிலவுகின்ற கலாசார, பொருளாதாரச் சூழல், சமூகச்சூழல் வேறுபட்டதாக இருப்பதனால் சிறுவர்கள் தமது பெற்றோரினாலும், உறவினரினாலும் மற்றும் பிறரினாலும் நடத்தப்படுகின்ற முறைகள் வேறுபடுகின்றன. ஆனாலும் எந்த நடைமுறையும் சிறுவர்களின் அடிப்படை உரிமைகளை மீறக்கூடாது.

> சிறுவர் துஷ்பிரயோகங்களாகப் பின்வருவனவற்றையும் கருதலாம்.
>
> - சிறுவர்களை அவசியமின்றி அதட்டுதல்; கோபமூட்டுதல்.
> - பாலியல் நடவடிக்கைகளுக்குத் தூண்டுதல்.
> - கெட்ட எண்ணங்களுடன் சிறுவர்களை வருடுதல்.
> - தாங்களைத் தடம்பட சிறுவர்களை வற்புறுத்தல்.
> - உங்கள் ஆத்திரங்களைத் தீர்த்துக் கொள்ள சிறுவர்களை வதைத்தல்.
> - குற்றம் செய்ய அல்லது விபத்தில் சிக்க வழிசெய்தல்.
> - உணவு, உடை, சுத்தம் ஆகியனவற்றில் அக்கறை காட்டாமை.
> - பிள்ளையை நம்பிக்கை இழக்கச் செய்தல்.
> - பிள்ளையை வீட்டுவேலைக்கு அமர்த்துதல்.
> - பிள்ளைகளின் கருத்துக்கு மதிப்பளியாமை.
> - பிள்ளை எதிர்பார்க்கும் அன்பையும் ஆதரவையும் வழங்காமை.
> - பிள்ளையை சொந்த வீட்டிலேயே வேலைக்காரி/வேலைக்காரன் போல நடத்துதல்.

பின்வரும் செயற்பாடுகள் சிறுவர் துஷ்பிரயோக செயற்பாடுகளாகக் கருதப்படும்.

(1) சிறுவர்களின் உடலுக்கு தீங்கிழைக்கும் உடல் ரீதியான காயங்களை ஏற்படுத்துதல்.

(2) சிறுவர்களின் உளவியல் வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கும் உளவியல் காயங்களை/வடுக்களை ஏற்படுத்துதல்.

(3) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சிறுவர்களின் சுகநலத்திற்குகேடு விளைவித்தல். அல்லது கணிசமான, பொருத்தமான கவனிப்பை(Care)க் கொடுக்கத் தவறுதல் அல்லது வைத்திய உதவியினை கொடுக்கத் தவறுதல்/தடுத்தல்.

(4) சிறுவர்களின் உடல் நலத்திற்கு ஆபத்தாக அமையும் அளவுக்கு கடினமான வேலைகளில் ஈடுபடுத்துதல்.

மேலும் ஒவ்வொரு பெற்றோரும்/சிறுவர்களுக்கு பொறுப்பான பாதுகாவலரும் தமது சிறுவர்களுக்கு உணவு, உடை, உறையுள், பாதுகாப்பு என்பனவற்றுடன் போதுமான மருத்துவக் கவனிப்பையும் கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்விதம் அவர்களினால் மேற்கூறிய தேவைகளை தமது சிறுவர்களுக்கு வழங்க முடியாத நிலை ஏற்படும் பட்சத்தில் அவர்கள் அரசாங்கத்தினால் நடத்தப்படும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் சிறுவர்களை சேர்க்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.

## சிறுவர் துஷ்பிரயோகத்தின் வகைகள்

இலங்கையில் இடம் பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களில் அதிகளவில் இடம்பெறுவது உடலியல் ரீதியிலான துஷ்பிரயோகமாகும் (Physical Abuse). பின்வரும் செயற்பாடுகள் உடலியல் ரீதியிலான சிறுவர் துஷ்பிரயோகங்களாகக் கருதப்படும்.

(1) சிறுவர்களை அடித்துத்துன்புறுத்தல்.

(2) காயங்களை ஏற்படுத்துதல்.

(3) உணவு வழங்காமை.

(4) உறையுள் வழங்காமை.

(5) மருத்துவக் கவனிப்பு வழங்காமை.

(6) வீட்டு வேலைக்கு வேலைக்காரப் பையனாக அல்லது வேலைக்காரச் சிறுமியாக அமர்த்துதல்.

(7) சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களில்(Child Sexual Abuse) ஈடுபடுத்துதல்.

(8) 15 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்துதல்.

பெருமளவான சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் வெளி உலகிற்கு தெரியாமல் மறைக்கப்படுகின்றன. பயம், கொலைப்பயமுறுத்தல் என்பன காரணமாக சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளான சிறுவர்கள் தமக்கு நேர்ந்த அநீதிகளை, கொடுமைகளை உரியதரப்பிற்கு - அதாவது சட்டம், நீதி சார்ந்த துறைக்கு - தெரியப்படுத்துவதில்லை. இதனால் சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் சட்டத்தின் பிடியில் சிக்காமல் தப்பி மேலும் பல சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு உட்பட வழியேற்படுகின்றது. இந்நிலைமை முற்றாக மாற்றப்பட சமூகத்தின் சகல தரப்பினரும் முழு ஒத்துழைப்பினையும் நல்கி சட்டத்தின் மூலம் சிறுவர் உரிமைகளைப் பலப்படுத்த வேண்டும்.

## சிறுவர் துஷ்பிரயோகத்தின் விளைவுகள்

சிறுவர் துஷ்பிரயோகமானது பாரிய அளவிலான உளவியல், உடலியல் ரீதியிலான பாதிப்புக்களை சிறுவர்களுக்கு ஏற்படுத்தி நிற்கின்றது. ஆழமான மனவடுக்களையும், மனத்தாக்கங்களையும் ஏற்படுத்தி துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்களின் வளமான எதிர்காலத்தை சீரழித்துவிடுகின்றது. துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்கள் தவறான வழிமுறைகளில் தமது வாழ்க்கை முறையினை இட்டுச்செல்ல நேரிடுகின்றது. பல்வேறு



பட்ட துஷ்பிரயோகங்களுக்கு உள்ளான சிறுவர்கள் எதிர்காலத்தில் மதுவுக்கும், போதைவஸ்துக்கும் அடிமையாக நேரிடுகின்றது. பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளான சிறுமிகள் மனரீதியான பாதிப்புக்களை தமது வாழ்க்கைக் காலத்தில் எதிர்நோக்க நேரிடுகின்றது. அத்துடன் எதிர்காலத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபட வழிசமைக்கின்றது. இலங்கையில் கூடுதலான எண்ணிக்கையிலான சிறுவர்கள் பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

பெரும்பாலான சிறுவர்கள் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் பாலியல் இச்சைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். குடும்ப வறுமை காரணமாகவே இச்சிறுவர்கள் "சிறுவர் விபச்சாரத்தில்"(Child Prostitution) ஈடுபட நிர்பந்திக்கப்படுகிறார்கள். இதனால் இச்சிறுவர்கள் HIV/AIDS தொற்றுக்கு உள்ளாகும் வாய்ப்புக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

அத்துடன் மது, புகைத்தல், போதைவஸ்து போன்றனவற்றிற்கும் அடிமையாகும் நிலையும் உயர்ந்து காணப்படுகின்றது.

> 'சிறுவர் துஷ்பிரயோகம்' என்ற பதப்பிரயோகம் அண்மைக்காலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டதாயினும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் வரலாற்றின் தொடக்க காலங்களிலேயே இடம் பெற்றதற்கான சான்றுகள் உண்டு. புத்தமதக் கதையொன்றில் இவ்வாறான சம்பவம் ஒன்று கூறப்பட்டுள்ளது. சம்பவம் இதுதான்:-
>
> 'சோபகா' என்ற சிறுவன் அவனது மாற்றாந் தகப்பனால் அடித்துத் துன்புறுத்தப்பட்டுப் பின்னர் இறந்தபிணமொன்றுடன் கட்டப்பட்டு சவக்காலையில் நரிகளால் உண்ணப்படுவதற்காக இரையாகப் போடப்பட்டான். அவ்வழியே வந்த புத்த பெருமானால் அச்சிறுவன் மீட்கப்பட்டு, ஆசியுரை வழங்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டான். கூடவே புத்தபெருமானால் அச்சிறுவனுக்கு உளவியல் ரீதியான அரவணைப்பும் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இச்சம்பவம் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இன்று, நேற்றல்ல மனிதனின் ஆரம்பகாலங்களிலேயே அரம்பித்துவிட்டன என்பதற்குச் சான்றுபகர்கின்றது.
>
> இலங்கையில் 1949 ஆம் ஆண்டில் எல். எல். ஜெயவர்த்தனா என்ற தையல் தொழிலாளிக்கு சிறுவர் துஷ்பிரயோகம், மற்றும் கொலை என்பவற்றுக்காக தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. 14 வயது நிரம்பிய பாடசாலைச் சிறுவனை தனது காம இச்சைகளுக்கு உள்ளாக்கி விட்டுப் பின்னர் கொலை செய்தமைக்காகவே அவனுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. இதுவே இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான பிரச்சினையின் எண்ணக் கருவை முதலில் ஏற்படுத்தியதாகும்.

## உடலியல் ரீதியான சிறுவர் துஷ்பிரயோகம்

கடுமையான காயங்கள் இதன் போது ஏற்படலாம். உதாரணமாக என்புகளில் முறிவு, அடிகாயங்கள், வெட்டுக்கள், எரிகாயங்கள் என்பன.



இவ்விதமான துஷ்பிரயோகம் கூடுதலான மனஉளைச்சலுக்கு உள்ளாகி நிற்கும் பெற்றோரினால அல்லது பாதுகாவலர்களினால் குழந்தைகளுக்கு அல்லது சிறுவர்களுக்கு ஏற்படுத்தப்படும். கூடுதலாக வீட்டுவேலையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் சிறுவர்கள் (Domestic Servants) இவ்விதமான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் வாய்ப்புக்கள் அதிகம். உடலியல் ரீதியிலான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளான சிறுவர்களை உரிய வைத்திய சோதனைகளுக்கு உள்ளாக்குவதன் மூலம் அவர்களுக்கு ஏற்பட்ட காயங்களை, முறிவுகளை இலகுவில் கண்டறியலாம். அத்துடன் அயலவர்களின் வாக்குமூலத்தைக் கேட்பதன் மூலமும் பாதிக்கப்பட்ட சிறுவன்/சிறுமிக்கு என்ன நிகழ்ந்தது என்பதையும் அறியலாம்.

## பாலியல்ரீதியான சிறுவர் துஷ்பிரயோகம்

சிறுவர்களைத் தமது காம இச்சைகளுக்கு உள்ளாக்குவதும், சிறுவர்களைக் கற்பழிப்பதும் பாலியல் ரீதியான துஷ்பிரயோகமாகக் கருதப்படும். இது சிறுவர் எவருக்கும் ஏற்படலாம். இவ்வாறான துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர் குடும்ப அங்கத்தவராகவோ, ஆசிரியராகவோ, குடும்ப நண்பராகவோ அல்லது அறிமுகமாகாத ஒருவராகவோ இருக்கலாம். வீட்டு வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் சிறுவர்கள், வறுமையில் சிக்கித் தவிக்கும் ஏழைச்சிறுவர்கள் என்போர் இவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் வாய்ப்புக்கள் அதிகம்.

பெற்றோரின் அன்பு கிடையாமை அல்லது நீண்ட காலத்திற்குப் பெற்றோர் பிரிந்து இருத்தல், விவாகரத்து போன்றனவற்றினால் மனக்கிளர்ச்சி, மனஉணர்வு ரீதியிலான துஷ்பிரயோகத்திற்கு சிறுவர்கள் உள்ளாக நேரிடுகின்றனர். சிறுவர்களைத் தகாத வார்த்தைகளினால் ஏசுதல், சிறுவர்களைக் கேலி செய்தல், சிறுவர்களின் உணர்வுகளை மதியாமை என்பன மன உணர்வு ரீதியான துஷ்பிரயோகங்களை உண்டாக்குகின்றன. குழந்தைப் பருவத்தினரை உரியமுறையில் கவனிக்காது புறக்கணிப்பு செய்யப்படும் நிலையில் அவர்களது வளர்ச்சி பாதிப்படைகின்றது. பாடசாலை செல்லும் சிறுவர்களுக்கு உரிய அன்பும், கவனிப்பும் பெற்றோரினால் வழங்கப்படாத பட்சத்தில் அச்சிறுவர்கள் படிப்பில் பிரச்சினைகளை எதிர்நோக்குவர். அத்துடன் தவறான வழியிலும், துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களிலும் இச்சிறுவர்கள் அகப்படுவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. ஆரம்ப பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் மன உணர்வு ரீதியான துஷ்பிரயோகங்களுக்கு உட்படும்போது பின்வரும் இயல்புகளை அவர்களிடத்தில் அவதானிக்கலாம்.

- வளர்ச்சி குன்றிய நிலை.
- தனிநபர் சுத்தம் குறைந்தநிலை.
- தன்னம்பிக்கை குறைந்தநிலை.
- மற்றையசிறுவர்களுடன் பழகும் தன்மை குறைந்த நிலை.
- பழக்கவழக்கப் பிரச்சினை.
- கல்வி கற்றலில் நாட்டமின்மை.

இது தவிர மன உணர்வு ரீதியாக துஷ்பிரயோகங்களுக்கு உள்ளான குழந்தைகளில் பின்வரும் இயல்புகளை அவதானிக்கலாம்.

- குறைவான வளர்ச்சி வீதம், நிறை, உயரம் குறைவு.
- உளவியல் வளர்ச்சிக் குறைவு.
- தன்னம்பிக்கை குறைவு.
- இதனால் வெளி உலகுக்கு தம்மை இனம் காட்ட அச்சம்.
- சில சந்தர்ப்பங்களில் பேசுந்திறன் குறைந்தவர்களாகவும் காணப்படுவர்.

# இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான
# நலன்புரி நிலையங்களில் திருப்திகரமாக இல்லை

யாழ்ப்பாணக் குடாநாட்டை போர் மேலும் இறுக்கமாகச் சூழ்ந்து வருகிறது. கடந்த வருடம் டிசம்பர்-ஜனவரி மாதக் காலப்பகுதியில் தனங்களப்பு, மறவன்புலோ, அரியாலை, கொழும்புத் துறைப் பகுதிகளில் கருக்கட்டிய மோதல்கள் சில நாட்களின் பின்னர் சற்றுத் தணிந்திருந்தன. எனினும் இரு தரப்புக்களும் அவ்வப்போது தட்டி முட்டிக் கொண்டிருக்கத் தவறவில்லை. மோதல்களின் சூடு தணிந்ததே அன்றி ஆறியதாகச் சொல்வதற்கில்லை.

அவ்வாறு தணிந்திருந்த போர்ச்சூடு கடந்த மார்ச் மாதம் 26ஆம் திகதி திடீரெனப் பற்றிக் கொண்டது மட்டுமன்றி மிக வேகமாக சுவாலை விட்டு எரியவும் தொடங்கிவிட்டது. வடமராட்சி கிழக்கிலும், பளைப்பகுதியிலும் திறக்கப்பட்ட போர்க்களங்களில் இன்னும் சமர் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நாளாந்தம் போரின் அக்கினி மூச்சு வேகம் அடைகிறதே அன்றித் தணியும் அறிகுறி எதுவும் தென்படவில்லை. "நாம் இவர்களுக்குச் சளைத்தவர்களா? ஒரு பாடம் படிப்பித்துக் காட்டுகிறோம் பார்..." என்ற ஆமுரையுடன் இரண்டு தரப்பினரும் மோதி வருகின்றனர்.

அதனால் குடாநாட்டில் போரினால் பாதிக்கப்படும் - இடம்பெயர்ந்து நிர்க்கதிக்கு ஆளாகும் - குடிமக்களின் எண்ணிக்கை வரும் நாள்களில் அதிகரிக்குமோ என்ற அச்சம் மக்களிடம் விரைவாகப் பரவிவருகிறது.

டிசெம்பர் - ஜனவரியில் தென்மராட்சி மேற்குப் பிரிவுகளான, மறவன்புலோ, தனங்களப்பு, கைதடி, நாவற்குழிப் பகுதிகளில் இருந்தும் கொழும்புத்துறை, அரியாலை, பாஷையூர், குருநகர்ப் பகுதிகளில் இருந்தும் இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கையைவிட மார்ச் ஏப்ரல் காலப்பகுதியில் இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை குறைவு. ஆயினும் பின்னயவர்களின் - இப்போது - இடம்பெயர்ந்தோரின் கஷ்டங்களும், அவலங்களும் ஒப்பீட்டளவில் சற்றுக் கூடுதல் எனலாம்.

மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவிலும், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிலும் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் பரவலாகத் தஞ்சம் அடைந்துள்ளனர். இவ்வாறு தஞ்சம் அடைந்தவர்களில் - இடம்பெயர்ந்தவர்களில் - வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் உருவாக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களில் - அதுதான் அகதி முகாம்களில் - மட்டும் 1067 குடும்பங்கள் வரை தங்கியுள்ளன. அனேகமாக அதே எண்ணிக்கையான குடும்பங்கள், உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளன.

போர்ப் பிரதேசத்தில் சிக்குண்ட பொதுமக்கள் தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மோதல்கள் நடைபெறாத பகுதிகளுக்குத் தப்பியோடி, தஞ்சமடைந்து உயிர்வாழ விரும்புவது இயல்பே. ஆனால் பச்சிலைப்பள்ளிப் பிரதேச மக்களில் - அங்கு பாதிக்கப்பட்ட மக்களில் - பலருக்கு அவ்வாறு செய்ய முடியவில்லை.

வெளியில் உள்ள மக்கள் அமைப்புகளும், மாணவர்களும் நடத்திய சாத்வீகப் போராட்டத்தினால் அந்தத் துர்ப்பாக்கிய நிலை நீக்கப்பட்டது. எனினும் போராட்டங்கள் நடைபெற்றிருக்காவிடில்கூட, போர்க்களப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் வெளியேற அனுமதிக்கப்பட்டிருப்பார்கள். நடத்தப்பட்ட போராட்டங்கள் ஒரு சிலரின் "நோக்கங்களை" அடைவதற்காக நடத்தப்பட்டவை என்று கூட சில தரப்புக்களில் அர்த்தம் கற்பிக்கப்படுகிறது. அதற்கான காரணங்கள் சிலவும் கூறப்பட்டன. அத்தோடு பிரமுகர்கள் சிலரின் கடந்த கால செயற்போக்குகள் குறித்தும் விமர்சனங்கள் கூட வரத்தொடங்கின. நல்ல காரியம் ஒன்று நடைபெற்றால் அதில் பிழைபிடிப்பவர்களும், பாதகமாக விமர்சனம் செய்பவர்களுமே அனேகர் என்பதால் அவை குறித்து அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை என்கிறார் அனுபவசாலி ஒருவர்.

போர்க்களப் பகுதியில் சிக்குண்ட பின்னர் வெளியே வந்தவர்கள் உட்பட இடம்பெயர்ந்தவர்களின் நிலை திருப்தியானதாக இல்லை என்று சுட்டிக் காட்டப்படுகிறது. நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு மூன்று நாள்களுக்குச் சமைத்த உணவு வழங்கப்பட்டதோடு உடுபுடைவைகள் மற்றும் பிற உதவிகளும் கொடுக்கப்பட்டன. ஆனால் நலன்புரிநிலையங்களில் தங்காதவர்களுக்கு அந்த உதவிகள் தானும் வழங்கப்படவில்லை.

மோதல்களை அடுத்து அவசர அவசரமாகத் தமது இல்லிடங்களை விட்டு பாதுகாப்பான இடம் தேடி ஓடியவர்களில் மிகப் பலர், உடுத்த உடையுடனும், கையில் ஒரு சில பொருள்களுடனுமே வந்தனர். பலரிடம் மாற்று உடுப்புத்தானும் இல்லை. உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் மக்களுக்கு உடுபுடைவைகள் - மாற்று உடைகள் - கிடைத்திருக்கும் என்பதில் என்ன உத்தரவாதம்?

நலன்புரி நிலையங்களுக்கு வெளியே தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒரு வார காலத்துக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்ட போதிலும், இன்னமும் அது நடைமுறைப்படுத்தப்பட்டதாக இல்லை. அவர்களும் இடம்பெயர்ந்து அவலப்படுகிறார்கள் என்பதனைக் கணக்கில் எடுத்து வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும்.

மருதங்கேணி, பச்சிலைப்பள்ளிப் பிரதேங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு இரண்டாயிரம்ரூபா நிவாரணப் பணம் வழங்கப்படவிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. அந்த உதவியும் தாமதம் காட்டப்படாமல் வழங்கப்படுவது அவசியம்.

1996 இல் மீளக் குடியமர்ந்தவர்களுக்கான கொடுப்பனவு சில பகுதிகளில் இப்போதே வழங்கப்படுவதாக செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அத்தகைய ஆமை வேகத்தில் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் வழங்கப்படக் கூடாது. உடனுக்குடன் கொடுக்கப்பட வேண்டும் இரண்டாயிரம் ரூபா நிவாரணம் இவர்களுக்குப் போதுமானதல்ல. உயிரொன்றைத் தவிர வேறு எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதிக்கு ஆளாகியிருக்கும் இவர்களுக்குத் தாராளமாக உதவ வேண்டும்; உடனடியாக உதவவேண்டும்.

இது விடயத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களும் போதிய கவனம் செலுத்த வேண்டும். காலத்தால் செய்த உதவியே மற்றெல்லா உதவிகளையும்விடப் பெரியது. சர்வதேச தொண்டர் நிறுவனங்களும் தமக்கு உதவுமென்று இடம்பெயர்ந்த மக்கள் எதிர்பார்கிறார்கள். மேலே குறிப்பிட்ட இரண்டு பிரதேச செயலகப் பிரிவுகளையும் சேர்ந்த மக்கள் இடம்பெயரத் தொடங்கி இன்றுடன் 26 நாள்கள் ஆகின்றன. நலன்புரி நிலையங்கள் பலவற்றில் மலசலகூட மற்றும் அடிப்படை வசதிகள் இன்றியே இம் மக்கள் வாழ்வதற்கு நேரிட்டுள்ளது.

* * *

## நல்ல ஆரம்பமும் அவநம்பிக்கையும்

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில், பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணுமாறு ஆணை கொடுத்தே சந்திரிகா குமாரதுங்கவை மக்கள் இரண்டாவது முறையாகவும் ஜனாதிபதிப் பதவியில் அமர்த்தினார்கள்.

தமக்கு அளிக்கப்பட்ட ஆணையை கண்ணில் ஒற்றிக் கொண்டு, மக்களின் விருப்பத்தை நிறைவேற்றப்போவதாக சந்திரிகா பகிரங்கமாக அறிவித்தார்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையற்றது என்று அறவே நிராகரித்திருந்த அவர் மூன்றாம் தரப்பு அனுசரணையாளர் உதவியுடன் விடுதலைப் புலிகளுடன் பேசவும் விருப்பம் கொண்டார். நோர்வேயை அந்தப் பணியைச் செய்யுமாறு அழைப்பு விடுத்தார். தாராளமாக உதவுகின்றோம் என்று கூறிய நோர்வே அரசு அது சம்பந்தமாக மிகுந்த அக்கறையுடன் ஈடுபடக் காத்திருந்தது; கருமம் ஆற்றவும் தொடங்கியது.

நோர்வேயின் முந்திய அரசின் வெளிநாட்டு அமைச்சர் நட்வொல்பேக் இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் செய்து ஜனாதிபதி சந்திரிகாவுடனும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேச்சுக்கள் நடத்தினார்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு காலம் செல்லும், எனினும் தமது நாடு சளைக்காது உழைக்கும் - என்று துடிப்புடன் கூறிச் சென்றார்.

இது நல்ல ஆரம்பம்; இலங்கையில் சமாதானம் பிறக்கும் என்று மக்கள் நம்பினார்கள்; அதனையே விரும்பினார்கள். நோர்வே அமைச்சரின் விஜயத்தினை அண்டி அரசமைப்புச் சீர்திருத்தம் குறித்து ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாட சந்திரிகா அட்டவணை வகுத்தார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள்

## சமாதானப் பேச்சுக்கான சாத்தியம் தூரத்திலா?

அரசமைப்புச் சீர்திருத்தத்தைப் பகுதியாக வகுத்து ஏற்றுக்கொண்டன. தமிழ்க்கட்சிகளுடன் அடுத்துப்பேச்சு. ஒரு சில அம்சங்கள் தவிர ஏனையவை குறித்துக் கருத்திணக்கம் காணப்படவில்லை. பிரதான எதிர்க்கட்சியுடன் பேசிய பின்னர் மீண்டும் தமிழ்க் கட்சிகளுடன் பேசுவதற்கு ஏற்பாடு உள்ளது.

அரசு - ஐதேக பேச்சுக்கள் ஐந்து தடவைகள் நடைபெற்ற போதிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குரிய - அதிகாரப் பரவல் குறித்த - மிக முக்கிய விடயங்களில் இரு தரப்புகளுக்கும் இடையில் கருத்திணக்கம் இல்லை. இத்தகைய ஒரு பின்னணியில் அரசு - ஐதேக பேச்சு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாட்டுக்குச் சென்ற ஜனாதிபதி சந்திரிகாவும், இந்தியா சென்ற ரணிலும் திரும்பிய பின்னர் பேச்சுக்கள் தொடரும் என்பது தகவல்.

இவற்றுக்கிடையில் பௌத்த மதகுருமாரும், பேரினவாதிகளும் அணிசேர்ந்து நோர்வேயை சமாதான முயற்சியில் ஈடுபட வேண்டாம் என்று கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள், அந்த நாட்டின் கொடியையும் எரித்தார்கள். எனினும் நோர்வே தனது முயற்சியில் பின்வாங்கப் போவதில்லை என்று அறிவித்தது.

நோர்வேயின் முந்திய அரசாங்கம் கவிழ்ந்து புதிய அரசு பதவியேற்ற போதும் சமாதான முயற்சி அக்கறையுடன் முன்னெடுக்கப்படுமா என்ற சந்தேகம் கிளப்பப்பட்டது. அப்போதும், முந்திய அரசும் இப்போதைய தொழிற் கட்சி அரசும் சமாதானப் பணிகளுக்காக கரிசனைபோடு செயற்படுமென உத்தரவாதம் அளிக்கப்பட்டது. நோர்வேயின் புதிய வெளிநாட்டமைச்சர் தோர் ஜோர்ன் ஜக்லாண்ட் சமாதானப் பேச்சுக்களில் ஆர்வம் உள்ளவரா என்ற சந்தேகமும் பலருக்கு இருந்தது. குறைந்த பலத்துடன் பதவிக்கு வந்துள்ள புதிய நோர்வே அரசு, தேர்தல் நடைபெறவுள்ள இரண்டு வருடத்துக்கு முன்னரே கவிழ்ந்து போகலாம் என்ற சந்தேகம் கூட அவதானிகள் மத்தியில் நிலவுகிறது.

தமிழ்க் கட்சிகளுடனும் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் அரசு நடத்திய பேச்சுக்களின் முடிவுகள் திருப்தி அளிக்காத வகையிலும் -

**உள்ளும் புறமும்**

**குறுமுனி**

பௌத்த மகாநாயக்கர்கள் பேச்சுவார்த்தைக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போரைத் தொடரவேண்டும் என்று கூறிய வகையிலும் - நோர்வே அரசின் சமாதான முயற்சிகளுக்கு பௌத்த குருமாரும் பேரினவாதிகளும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள வகையிலும் -

விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக பெருந்தாக்குதல்களை நடத்துவதோடு மட்டுமன்றி, மார்ச் மாதம் 10 ஆம் திகதி ராஜகிரியாவில் தாக்குதலை நடத்திய வகையிலும் -

சமாதானப் பேச்சுக்கள் கிட்டடியிலும் இல்லை என்ற அவ நம்பிக்கை வடக்கிலும் தெற்கிலும் தோன்றியுள்ளது.

இந்த அவநம்பிக்கையை மேலும் ஒரு நடவடிக்கை வலுப்படுத்துவதாக அவதானிகள் பேசிக்கொள்கிறார்கள். இராணுவத்துக்கு நவீன ஆயுதங்களை வாங்குவதற்கு, இராணுவத் தளபதிக்கு ஜனாதிபதி தாம் வெளிநாடு செல்வதற்கு முன்னர், அங்கீகாரம் வழங்கினார் என்று சொல்லப்படுகிறது.

இவற்றை விடவும், சமாதானப் பேச்சுக் கிட்டடியில் நடைபெறும் சாத்தியம் இல்லை என்ற அவநம்பிக்கையைத் தோற்றுவிக்கும் பல தரப்புக்களினதும் பலவித நடவடிக்கைகளும் அமைந்து வருகின்றன.

* * *

## ஜனாதிபதி அரசியல் விஞ்ஞான பட்டதாரியே

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாரிஸ் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானப் பட்டம் பெறவில்லை என்று "த சண்டே லீடர்" பத்திரிகை வெளியிட்டது தவறு என்று கொழும்பில் உள்ள பிரெஞ்சுத் தூதரக வட்டாரங்கள் தெளிவுபடுத்தி உள்ளன.

பிரெஞ்சுக் கல்வி முறையின் பிரகாரம் "டிப்ளோமா" அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் முதுமாணி (எம்.ஏ) பட்டத்துக்குச் சமனானது என்றும் இதனை விளங்கிக் கொள்ளாமலே "த சண்டே லீடர்" அந்தச் செய்தியை வெளியிட்டிருக்க வேண்டும் என்றும் -

இப்போது கொழும்பில் பிரெஞ்சுத் தூதுவராகக் கடமைபுரியும் எலிசேபத் தஹான்னும் ஜனாதிபதி சந்திரிகா பெற்ற பட்டத்தையே பெற்றிருக்கிறார் என்றும் - பிரெஞ்சு தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது. சந்திரிகா குமாரதுங்க 1968 ஆம் ஆண்டில் அரசியல் விஞ்ஞானம் பயில பாரிஸ் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்றார். அங்கு "டிப்ளோமா" பெற்ற பின்னர் 1977ஆம் ஆண்டில் நிலசீர்திருத்த ஆணைக் குழுவில் பணியாற்றிய போது ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்து கலாநிதிப்பட்டம் பெற்றார் - என்று பிரெஞ்சுத் தூதுவர் எலிசெபத் தஹான் விளங்கியுள்ளார்.

இதனால் சந்தேகம் கலங்கித் தெளிந்துள்ளது அல்லவா?

* * *



அண்மையில் இடம்பெயர்ந்த மக்களில் இவர்களும் அடங்குவர். இடம்பெயர்ந்து செல்லும் வழியில் மரநிழலில் களையாறும் வேளை, உறவினர் வீடு செல்வோமா, நலன்புரி நிலையத்தை நாடுவோமா என்று சிந்திக்கிறார்களோ!

## அரசுக்குள் அதிருப்தி

மருத்துவ சிகிச்சைகளுக்காக வெளிநாடு சென்றுள்ள ஜனாதிபதி தனது பொறுப்புக்களை தோட்டத் தொழிற்துறை அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்கவிடம் ஒப்படைத்தமை பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்த பாதுகாப்பு அமைச்சு மற்றும் முப்படைகளின் தலைமைப் பதவி ஆகியவற்றுக்கும் தற்போது அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவே பொறுப்பாக நியமிக்கப்பட்டு உள்ளார்.

பாதுகாப்புப் பிரதி அமைச்சரான ஜெனரல் அனுருத்த ரத்வத்த நாட்டில் இருந்த போதும் பதில் பாதுகாப்பு அமைச்சர் பதவி அவருக்கு வழங்கப்படாது அமைச்சர் ரட்ணசிறிக்கு வழங்கப்பட்டுள்ளது, இது வடக்கு - கிழக்கில் யுத்த நடவடிக்கைகளில் இருந்து ரத்வத்த ஓரங்கட்டப்படுவதையே எடுத்துக்காட்டுகின்றது என்றும் -

ஜனாதிபதியின் பொறுப்புகள் மற்றும் பணிகள் அனைத்தும் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது தம்மை அவமானப்படுத்தும் செயல் என்று சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் கருதுவதாகவும் -

ஜனாதிபதியின் இச்செய்கை குறித்து அமைச்சர்கள் மட்டத்தில் கடும் அதிருப்தி நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் கடந்த புதனன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையிலேயே நடைபெற்றது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக ஜனாதிபதி வெளிநாட்டில் தங்கி இருக்கும் காலம் மற்றும் ஜனாதிபதி நாடு திரும்பும் திகதி என்பன வெளியிடப்படவில்லை. எனவே அவர் நாடு திரும்பும் வரை அமைச்சரவைக் கூட்டங்கள் ஒழுங்காகவும் அமைதியாகவும் நடைபெறுமா என்பது கேள்விக்குறியே?

*

# ...ரும் புயல் கிளப்பி வரும் சிம்பாப்வேயின் காணிச் சீர்திருத்தச்சட்டம்!

ஆபிரிக்க நாடான சிம்பாப்வேயில் தற்பொழுது நிகழ்ந்து வரும் சம்பவங்கள் சர்வதேச கவனத்தைப் பெரும் அளவில் ஈர்த்து வருகின்றன.

கறுப்பின தீவிரவாதிகள் வெள்ளையர்களின் பண்ணைகளையும் காணிகளையும் ஆக்கிரமித்து வருகின்றனர். இதுவரை ஆயிரம் பண்ணைகள் வரை கறுப்பு இனத் தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகி இருக்கின்றன அல்லது ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி முகாபே இத்தகைய அடாவடித்தனமான செயல்களை பகிரங்கமாக ஆதரித்து வருகிறார். வெள்ளையர்களின் காணிகளை அபகரிக்கும் நிலச்சீர்திருத்தத் திட்டம் ஒன்றை கொண்டுவரும் முயற்சி இதுவரை வெற்றி அளிக்கவில்லை. இதன் எதிரொலியே தற்போதைய சம்பவங்கள்.

தீவிரவாதிகள் அரச வாகனங்களில் சென்றே இந்த நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். வந்தேறு குடிகளான வெள்ளையர்களினால் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் அபகரிக்கப்பட்ட காணிகளை திரும்பவும் பெறும் ஒரு நடவடிக்கையே இது என்று காரணம் கூறப்படுகிறது.

### முகாபேயின் வாக்குறுதி

1980 ஆம் ஆண்டு றொபேர்ட் முகாபே சிம்பாப்வேயின் பிரதமராக பதவி ஏற்ற நாளில் இருந்தே இந்தப் பிரச்சினை இருந்து வருகிறது.

1980 தேர்தல் பிரசாரத்தின் போது தாம் வெற்றிபெற்றால் கறுப்பு இன மக்கள் அனைவருக்கும் ஒரு துண்டுக் காணியும் ஒரு மாடும் தருவதாக முகாபே பிரசாரம் செய்தார். 20 வருடம் கழிந்த நிலையிலும் இந்த வாக்குறுதி நிறை வேறவில்லை. நாட்டின் பெரும்பாலான காணிகள் வெள்ளையரின் கையிலேயே இன்னும் இருந்து வருகின்றன. பொறுமை இழந்த நிலையிலேயே தற்பொழுது இந்த சட்ட விரோத காணி அபகரிப்பு நடவடிக்கைகள் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முன்னர் ரொடீசியா என்று

## வெள்ளையர்களின் பண்ணைகள் கறுப்பு இனத்தவரால் அபகரிப்பு!

அழைக்கப்பட்டு வந்த சிம்பாப்வே 1923 ஆம் ஆண்டு பிரிட்டனின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. அதற்கு முன்னர் பிரிட்டிஷ் கம்பனி ஒன்றே ரொடீசியாவை நிர்வகித்து வந்தது. அந்தக் காலங்களிலும் அதற்கு முன்னர் சிம்பாப்வே போர்த்துக்கலின் ஆட்சியின் கீழ் இருந்த காலத்திலும் குடியேறியவர்கள் தான் இந்த வெள்ளையர்கள். சிம்பாப்வேயில் உள்ள காணிகளில் பெரும் பகுதியை வெள்ளையர்கள் வைத்துள்ளனர். அன்றிலிருந்து இன்றுவரை இந்த ஆதிக்கத்தை ஒழிக்க முடியவில்லை. இந்த ஆதிக்கத்தை முறியடிக்கவே காணிச்சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர முகாபே முயன்றார்.

தற்பொழுது சிம்பாப்வேயில் உள்ள சிறந்த பண்ணைகளில் மூன்றில் ஒரு பங்கு சுமார் 5 ஆயிரம் வெள்ளையர்களின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. இவற்றை நஷ்டஈடு இன்றி பறிமுதல் செய்யப்போவதாகவும் வெள்ளையருக்கான நஷ்டஈட்டை பிரிட்டனே வழங்க வேண்டும் என்றும் முகாபே கூறுகிறார்.

### சர்வஜனவாக்கெடுப்பு தோல்வி

கடந்த பெப்வரியில் சிம்பாப்வேயில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டது.

வெள்ளையர்களின் காணிகளை நஷ்டஈடு இன்றி பறிமுதல் செய்து காணி அற்ற கறுப்பு இனமக்களுக்கு பிரித்துக் கொடுப்பதற்கும் முகாபேயின் பதவிக் காலத்தை 12 ஆண்டுகளாக நீடிக்கவும் அங்கீகாரம் கோரி இந்த சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஆனால் எதிர்பார்த்ததுக்கு மாறாக சர்வஜன வாக்கெடுப்பு போதிய ஆதரவு பெறத் தவறி தோல்வி அடைந்து விட்டது. கிராமப்புறங்களில் இதற்கு பெரிய அளவில் ஆதரவு கிடைக்கவில்லை. வெள்ளையர்களின் காணிகளை நஷ்டஈடு இன்றி பறிமுதல் செய்வதற்கு கறுப்பு இனத்தவர்கள் மத்தியில் பேராதரவு இருந்தது. ஆனால் முகாபேயின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு எதிர்ப்பு இருந்ததே சர்வஜன வாக்கெடுப்புத் தோல்வி அடையக் காரணம் ஆகும்.

சர்வஜன வாக்கெடுப்பு தோல்வி அடைந்ததை அடுத்தே வெள்ளையர்களின் காணிகளை பலவந்தமாக அபகரிக்கும் நடவடிக்கை கடந்த பெப்ரவரியில் ஆரம்பமானது.

அரசாங்க வாகனங்களிலேயே தீவிரவாதிகள் செல்கின்றனர். பண்ணைகளின் பிரதான வாசல்களை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று பண்ணைகளைக் கைப்பற்றுகின்றனர். அரசாங்கத்தின் ஆதரவுடன் இது இடம்பெறுவதால் பொலீஸார் பாராமுகமாக இருந்து வருகின்றனர்.

கடந்த வாரம் வெள்ளையரின் பண்ணை ஒன்றுக்குச் சென்ற தீவிரவாதிகள் அங்கிருந்த சுமார் 200 தொழிலாளர்களைப் பயமுறுத்தி விட்டு பண்ணையில் இருந்த ஆடுகள் முழுவதையும் துரத்தி விட்டனர் என்று கூறப்படுகிறது. இத்தகைய சம்பவங்களினால் சிம்பாப்வேயின் ஏற்றுமதி வருமானம் பெரும் அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. பிரதான ஏற்றுமதிப் பயிரான புகையிலைக் கம்பனிகள் இன்றும் வெள்ளையர் கைகளிலேயே இருந்து வருகின்றன.

உலக உலா

என்.பி.சீலன்

### நாடாளுமன்றம் கலைப்பு

சிம்பாப்வேயில் தற்பொழுது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டது. சிம்பாப்வேயின் அரசமைப்புப்படி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால், கலைக்கப்பட்டு நான்கு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தல் அடுத்த மாதம் நடைபெறும் என்று றொபேர்ட் முகாபே அறிவித்துள்ளார்.




முகாபேக்கு எதிராக ஹராரே பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் 150 ஆசனங்களில் முகாபேயின் ZANU-PF எனப்படும். சிம்பாப்வே ஆபிரிக்கன் மக்கள் யூனியன் - தேசபக்தர் முன்னணி 147 ஆசனங்களைக் கொண்டிருந்தது. 1986 ஆம் ஆண்டு சிம்பாப்வேயில் கொண்டுவரப்பட்ட அரசமைப்புச் சீர்திருத்தத்தின் கீழ் நாடாளுமன்றத்தில் வெள்ளையர்களுக்கு ஆசனங்கள் ஒதுக்கும் முறை நீக்கப்பட்டு விட்டது.

மே மாதம் நடைபெற உள்ள தேர்தலில் முகாபேயின் கட்சி தோல்வி அடைந்தாலும் 76 வயது நிரம்பிய முகாபேயின் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டு விடமாட்டாது. முகாபேயின் ஆறாண்டுப் பதவிக் காலம் 2002 ஆம் ஆண்டிலேயே முடிவடைகிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் கட்சி தோல்வி அடைந்து பிரதான எதிர்க் கட்சியான MDC எனப்படும் ஜனநாயக மாற்றங்களுக்கான இயக்கம் (Movement For Democratic Change) வெற்றி பெறுமானால் அடுத்த இரண்டு வருட கால ஆட்சியையும் அந்தக் கட்சியின் அனுசரணையுடனேயே நடத்த வேண்டிய நிலைமை முகாபேக்கு ஏற்படும்.

மே மாதம் நடைபெறும் தேர்தலில் பிரதான எதிர்க்கட்சியான எம்.டி. சி குறைந்தது 50 ஆசனங்களையாவது கைப்பற்றும் என்று கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.


இராணுவத்தின் ஆதரவுடன் தொடர்ந்து ஆட்சியில் இருப்பதற்கு முகாபே திட்டமிடுவதாக எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. இராணுவத்தின் உயர்பதவிகளில் முகாபேயின் ஆதரவாளர்கள் பலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### சிம்பாப்வேயின் தங்க வளம்

ஆபிரிக்க நாடுகளில் மிகவும் வளமுள்ள நாடாக சிம்பாப்வே ஒரு காலத்தில் இருந்து வந்தது. விவசாயம் மற்றும் சுரங்கத்தொழிலிலும் உற்பத்தித்துறையிலும் அந்த நாட்டில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது.

1965 ஆம் ஆண்டு ஒருதலைப்பட்சமாக வெள்ளையர்கள் சுதந்திர பிரகடனம் செய்த போது ஐக்கிய நாடுகள் சபை பொருளாதாரத் தடைகளை விதித்தது. ஆனால் அந்தப் பொருளாதாரத் தடைகளால் சிம்பாப்வே பெரிய அளவில் பாதிக்கப்படவில்லை. 1970களில் உள்நாட்டில் கைத்தொழில்களும் விவசாயமும் எதிர்பாராத விதமாக பெரும் அளவில் அபிவிருத்தி அடைந்தன. உணவுத் தேவைகளில் சிம்பாப்வே தன்நிறைவு கண்டது.

எனினும் 1970களில் பிற்பகுதியில் சிம்பாப்வேயின் பொருளாதாரம் வீழ்ச்சி அடையத் தொடங்கியது.



கறுப்பு இன தீவிரவாதிகளின் தாக்குதலை எதிர்பார்த்து தமது பண்ணை ஒன்றில் நாய்களுடன் தயார் நிலையில் உள்ள வெள்ளையர் குடும்பம் ஒன்று.

கடும் வரட்சி காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டது. கடந்த ஆறு மாத காலமாக பொருளாதாரத் துறையில் மேலும் வீழ்ச்சி ஏற்பட்டது.

1980 ஆம் ஆண்டில் முகாபே பதவி ஏற்ற சமயம் இருந்த உணவு விலையுடன் ஒப்பிடும்போது தற்போதைய விலை 500 சதவீதம் அதிகம் ஆகும். முகாபே அரசுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. ஊழலுக்கு எதிராக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

### வெள்ளையர் குடியேற்றம்

சிம்பாப்வே தங்கம் அதிகமாக உள்ள ஒரு நாடு. 1888 ஆம் ஆண்டு தங்கச் சுரங்கம் அகழ்வதற்கான அதிகாரம் சிம்பாப்வே மன்னர் ஒருவரினால் பிரிட்டிஷ் கம்பனி ஒன்றுக்கு வழங்கப்பட்டது. அப்பொழுது ஆரம்பிக்கப்பட்ட வெள்ளையர் குடியேற்றமே சிம்பாப்வேயின் தற்போதைய பிரச்சினைகளுக்கு எல்லாம் காரணம் எனலாம்.

1923 ஆம் ஆண்டு தென் ரொடீஷியாவை பிரிட்டன் தனது ஆட்சிக்கு உள்பட்ட நாடாகப் பிரகடனம் செய்தது. 1953 முதல் 1967 வரை வட ரொடீஷியா, நயாசலாந்து, தென் ரொடீஷியா ஆகியவை ஒரே சம்மேளனமாக ரொடீஷிய - நயாசலாந்து சம்மேளனம் ஒன்று அமைக்கப்பட்டது.

பின்னர் வட ரொடீஷியா ஸாம்பியா என்ற பெயரிலும் நயாசலாந்து மாலாவி என்ற பெயரிலும் சுதந்திர நாடுகளாக அறிவிக்கப்பட்டன. தென் ரொடீஷியா பிரிட்டனின் கீழ் ரொடீஷியா என்ற பெயருடன் விடப்பட்டது.

1963 இல் ரொடீஷியாவில் உள்ள சிறுபான்மையினரான வெள்ளையர்கள் தமக்கு அரசியல் அதிகாரம் வேண்டும் என்று கோரி பிரிட்டனுக்கு நெருக்குதல் கொடுக்க ஆரம்பித்தனர். 1965 நவம்பர் 11 ஆம் திகதி இயன் ஸ்மித் தலைமையில் வெள்ளையர்கள் தன்னிச்சையாக சுதந்திர பிரகடனம் செய்தனர். இதனை எதிர்த்து பிரிட்டன் உடனடியாக ரொடீஷியா மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது. ஐக்கிய நாடுகள் சபை முழு அளவிலான வர்த்தகத் தடைகளை விதித்தது. 1970 ஆம் ஆண்டில் வெள்ளையர் ரொடீஷியாவை குடியரசாகப் பிரகடனம் செய்தனர்.

இந்த சிறுபான்மை வெள்ளையர் ஆட்சிக்கு பிரிட்டன் உட்பட எந்த ஒரு நாட்டின் அங்கீகாரமும் கிடைக்கவில்லை. இந்தப் பிரச்சினையை சமாதான முறையில் தீர்த்து வைக்கவே பிரிட்டன் விரும்பியது.

1971 நவம்பர் மாதம் பிரிட்டன் சமாதானத்திட்டம் ஒன்றை முன் வைத்தது. இந்த சமாதானத் திட்டத்தை பரிசீலனை செய்த பிரிட்டிஷ் கமிஷன் ஒன்று ரொடீஷியாவில் உள்ள சகல இன மக்களுக்கும் இந்த தீர்வு ஏற்புடையது அல்ல என்று தெரிவித்து இதனை நிராகரித்து விட்டது.

அந்த நாள்களில் அங்கோலாவிலும் மொஸாம்பிக்கிலும் போர்த்துக்கல் ஆட்சி நிலவியது. ரொடீஷியாவில் சிறுபான்மை வெள்ளையர் ஆட்சிக்கு அது உதவியது. ஆனால் 1975 இல் அந்த இரு நாடுகளுக்கும் சுதந்திரம் வழங்கிவிட்டு போர்த்துக்கல் வெளியேறிவிட்டது. இதனால் ரொடீஷியாவில் வெள்ளையர்கள் ஆட்சி தனிமைப்படுத்தப்பட்டது.

வேறு வழியின்றி சிறையில் இருந்த கறுப்பினத் தலைவர்களை இயன் ஸ்மித் விடுதலை செய்து அவர்களுடன் பேச்சுக்களை ஆரம்பித்தார். பிரதான தலைவர்களான என்கோமோ, றொபேர்ட் முகாபே ஆகியோருடன் இரு வருடங்கள் நடத்திய பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தன. இரு தலைவர்களும் வெளிநாடுகளில் இருந்தவாறு இயன் ஸ்மித் அரசுக்கு எதிராக கூட்டாக கெரில்லாப் போராட்டங்களை ஆரம்பித்தனர். இயன் ஸ்மித்துடன் பேச்சுவார்த்தை நடத்தவும் அவர்கள் மறுத்து வந்தனர்.

வேறு வழியின்றி இயன் ஸ்மித் 1978 இல் பிஷப் ஆபேல் முசோரேவா தலைமையிலான கறுப்பின மிதவாத போக்குத் தலைவர்களை அழைத்து பேச்சுக்களை நடத்தினார். வெள்ளையரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்ட கறுப்பு இன பெரும்பான்மையினரின் ஆட்சிக்கு அப்பொழுது இணக்கம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் 1979 இல் நடத்தப்பட்ட தேர்தலில் பிஷப் ஆபேல் முசோரேவாவின் கட்சி மொத்தம் 100 ஆசனங்களில் 51 ஆசனங்களைக் கைப்பற்றியது. வெள்ளையருக்கு 28 ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டன. வெள்ளையருடன் இணைந்து பிஷப் ஆபேல் முசோரேவா கூட்டாட்சி நிறுவினார். சிம்பாப்வே - ரொடீசியா என்று ரொடீஷியா பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ரொடீஷியா - சிம்பாப்வேயே பின்னர் சுருக்கமாக சிம்பாப்வே என்று அழைக்கப்படலாயிற்று. பிஷப் ஆபேல் முசோரேவா தலைமையிலான கூட்டாட்சி பெரும்பான்மை கறுப்பு இன மக்களை திருப்திப்படுத்தத் தவறியது. இந்த நிலையில் 1979 பிற்பகுதியில் லண்டனில் ஒரு மாநாடு நடத்தி சிம்பாப்வேயின் முழு அதிகாரத்தையும் பிரிட்டன் எடுத்துக் கொண்டது.

பிரிட்டனின் மேற்பார்வையின் கீழ் 1980 பெப்ரவரியில் நடத்தப்பட்ட சுதந்திர தேர்தலில் றொபேர்ட் முகாபேயும் போட்டியிட்டார். அமோக வெற்றி அவருக்கு கிடைத்தது. மற்றொரு கறுப்பினத் தலைவரான என்கோமோவுடன் சேர்ந்து முகாபே கூட்டாட்சி நிறுவினார். 1982 இல் முகாபேயினால் என்கொமோ பதவி நீக்கம் செய்யப்பட்டார். சிம்பாப்வேயின் அரசமைப்பில் வெள்ளையரான நிலச்சுவாந்தர்களின் பாதுகாப்புக்கு 1992 வரை உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தது. இது காலாவதியான பின்பு அப்பொழுது நாடாளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்று கொண்டுவரப்பட்டு வெள்ளையருக்கு சொந்தமான அரச காணிகளை கறுப்பு இன மக்களுக்கு பங்கீட்டு வழங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

ஆகவே 1992 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் காணிப்பங்கீட்டு முயற்சி இன்றும் தொடர்கிறது. வெள்ளையர்களின் காணிகளை நஷ்டஈடு இன்றி பலவந்தமாக அபகரித்து கறுப்பு இனத்தவர்களுக்கு பிரித்துக் கொடுக்கும் முகாபே அரசின் காணிச் சீர்திருத்தத் திட்டம் வெற்றி பெறுமானால் தென்னாபிரிக்க வெள்ளையர்களுக்கும் இது ஓர் அபாய எச்சரிக்கை ஆகும்.

## சகோதர பாசம் குறைவது எப்போது?

**சங்குவேலி. வத்சலா.**
சொர்க்கத்தின் வாசல் எது?




☺அது அவரவரைப் பொறுத்தது. இங்கு பலருக்கு உள்ளூர் கிபிர்தான் சொர்க்கமே!

**உசன். அண்ணாமலை.**
'நினைத்ததை முடிப்பவன்' குறித்து.....?
☺நினைத்ததை முடிப்பவன் நல்லவன்; முடித்ததை நினைப்பவன் ஆபத்தானவன்.

**கொக்குவில். சேகர்.**
அன்புக்கும் காதலுக்கும் என்ன வித்தியாசம்?
☺அன்பு நெஞ்சம் வரை மட்டும்; காதல் மஞ்சம் வரைக் கூட.

**மல்லாகம். ரவி.**
மகளுக்குத் திருமணம் செய்து வைப்பது பெற்றோரின் கடமையா?
☺திருமணம் முடித்து வைக்கும் வரை கடமை; பின் கடன்.

**நெல்லியடி. சுசீலா.**
கயவர்கள் மத்தியில் காப்பாற்ற முயலாத கணவனை என்ன செய்யலாம்?
☺'காலுக்கு உதவாத செருப்பை கழற்றி எறி' என்று கூறி வைத்துள்ளனரே நம்முன்னோர்கள்!

றோருக்கும் கருத்து வேறுபாடு வருவது ஏன்?
☺பிள்ளையின் கண் கவர்ச்சியில்! பெற்றோரின் கண் காசில்!

**கட்டைவேலி. ம.சந்திரா.**
சகோதர பாசம் குறைவது எப்போது?
☺திருமணமானதும் பாதி குறையும்; பிள்ளைகள் பிறந்ததும் மீதி குறையும்.

**தாவடி. ரேணுகா.**
மனம் விட்டுப் பழகிய காதலர் கைவிட்டுப் போய் விட்டாரே?
☺விட்டதற்காகக் கவலைப்படுகின்றீரா?

**திருநெல்வேலி. ராகுலன்.**
(இனப்பிரச்சினைக்கு) தீர்வு கிட்டினால் தான் திருமணம் என்கின்றாளே என் காதலி...!
☺ஐயோ பாவம் நீர்! 'கடல் வற்றிக் கருவாடு தின்னலாம் என்று குடல் வற்றி செத்ததாம் கொக்கு' என்ற மாதிரித்தான் உமது நிலையும் முடியப் போகின்றது!

**யாழ். டிலக்ஷி.**
மனைவியின் நகையைக் கணவன் கபளீகரம் செய்யலாமா?



☺சீதன சீர்வரிசையில் கைவரிசை காட்டுவது நேர்மையற்றது!

**இணுவில். சயந்தி.**
திருமணப் 'பேச்சை' எடுத்ததும் தயங்கும் காதலனை என்ன செய்வது?
☺நீரும் பேச்சோடு நிறுத்திக் கொள்வதுதான் சாலச்சிறந்தது.

## கோபக்காரக் கணவனோடு வாழ்க்கை நடத்துவது எப்படி?

**தாளையடி. மருது.**
தொட்டால் உணர்ச்சிவசப்படுவது தப்பா...?
☺சிலர் கண்பட்டாலே உணர்ச்சிவசப் பட்டு விடுகின்றார்களே!

**நீராவியடி. ப.சங்கர்.**
பழையதை மறக்க என்ன வழி?
☺பழைய குப்பை மீது புதிய குப்பையைக் கொட்டினால் பழையது மக்கிப் போகுமே!

**ஊரெழு. சூரியா.**
எதிர் வீட்டில் ஓர் இளசு துள்ளுகிறதே! என்ன செய்யலாம்?



☺'கட்டி' அடக்குவதுதான் வழி. மூக்கணாங்கயிறைக் கட்டி சவாரிக் குதிரை ஆக்கி விடும். தானாகவே அடங்கிப் போகும்.

**நல்லூர். ரஸாக்.**
புதிது புதிதாகத் தளபதிகளை நியமிக்கின்றார்களே....?
☺'ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி'

**கட்டைப்பிராய். வேலுமணி.**
திருமண விடயத்தில் பிள்ளைக்கும் பெற்

**சாரையடி. விஜயா.**
சில பெண்கள் இப்போதும் கிணற்றுத் தவளைகளாக இருப்பதேன்?
☺வெளியில் விஷப்பாம்புகள் அதிகரித்து விட்டதால் போலும்!

**கதிர்ப்பாய். சுகிர்தா.**
கோபக்காரக் கணவனோடு வாழ்க்கை நடத்துவது எப்படி?
☺கழுதைக்கு வாழ்க்கைப்பட்டால் உதைக்கு அஞ்சலாமா?

**பாஷையூர். ஜோய்.**
சில மாணவர்கள் படிப்பில் ஆசை இல்லாமல் இருப்பதேன்?
☺'ஆசை அறுமின்' என்று ஆசிரியர் போதித்திருப்தைப் புரிந்ததால் போலும்!

**இருபாலை. அநபாயன்.**
என் காதலி எதற்கெடுத்தாலும் 'எனக்குத் தெரியாது' என்று பதில் தருகின்றாளே?
☺அதற்கென்ன? எல்லாம் உங்களுக்குத் தெரிந்திருந்தால் சரிதானே!

**வரணி. சோமசுந்தரம்.**
சீதனம் என்ற சொல்லின் அர்த்தம் என்ன?
☺கேவலமான ஒன்றைப் பார்த்து 'அடசீ!' என்று பேசுவார்கள். சீ! கேவலமான முறையில் வருகின்ற தனம் (சொத்து) என்பதால் சீதனம்!

**தாவடி. மணிபல்லவன்.**
ஈவது கஷ்டமா? இரப்பது கஷ்டமா?
☺ஈவோனுக்கு ஒரு கவளம்; இரப்பவனுக்கு ஏராளம்.

## மனைவியின் நகையை கபளீகரம் செய்யலாமா?

**கரவெட்டி. கந்தவேள்.**
சின்ன வீடு வைத்திருப்பது புத்திசாலித்தனமா?
☺"ஈருரில் உழுதவனும் கெட்டான்; இரண்டு பெண்டாட்டிக்காரனும் கெட்டான்."

**வரணி. சீலன்.**
நித்தம் போனால் முத்தம் சலிக்குமா?
☺ஆம் சலிக்கும். முற்றம்தான். முத்தம் அல்ல!

**துறையூர். டிமெல்.**
பெண்கள் ஏன் அச்சகத்தில் வேலை செய்ய ஆசைப்படுகின்றார்கள்?
☺பிரதி எடுக்கும் வேலை என்பதால்!

**அல்வாய். விவேகன்.**
அல்லி தர்பார் என்றால் என்ன?
☺திருமணமானதும் புரிந்து கொள்வீர்!

**கவுணாவத்தை. மோகன்.**
கோயிலுக்குப் போகும் பெண்கள் அதிக அலங்காரம் செய்வதேன்?
☺அங்கு தேவி தரிசனத்துக்குப் பலர் காத்திருப்பதால்!

**நல்லூர். நவநீதன்.**
மனைவியை அடக்கி ஆள்வது எப்படி?
☺அதை நான் சொன்னால் சாத்தான் வேதம் ஓதுவது போல இருக்கும்.

## நித்தம் போனால் முத்தம் சலிக்குமா?

**நீராவியடி. தங்கன்.**
இப்போது சில சினிமாப் படங்களை பார்க்க முடியாமல் இருப்பது ஏன்?
☺அவை நீலத்தில் பிரிண்ட் போடப்படுவதால்!

**கச்சாய். என்.சிங்கம்.**
வித்தா.....! வியர்வை காலத்துக்கு ஏற்ற உடை எது?
☺பிறந்த நாள் உடை!


**அளவெட்டி. காந்தி.**
காலையில் எழும்புவதேன்?
☺கடமை செய்ய!

**நெல்லியடி. குமரேசு.**
அடிக்கடி சபலப்பட்டால்......!
☺சுலபமாக சபலப்பட்டால் எஞ்சுவது அவலம்!

**நல்லூர். மயூரன்.**
ஏன் அடிக்கடி மறியல் போராட்டம்?
☺அழுத பிள்ளைக்குத்தானே சாப்பாடு கிடைக்கின்றது!

**யாழ். கிருஷ்ணன்.**
ஒரு பெண்ணுடன் தனியாகப் பேசினால் ஏன் சமூகம் தவறாக நினைக்கின்றது?
☺தவறான சங்கதிகளைத்தான் தனியாகப் பேசுவது வழமை என்பதால்.

**குருநகர். உஷா.**
மனைவி எப்படிச் சமைத்தாலும் கணவன்மார் வாயை மூடிக் கொண்டு சாப்பிட்டு விட்டுப் போய் விடுகின்றார்களே ஏன்?



☺அடுத்த வேளைச் சாப்பாடும் கிடைக்க வேண்டும் என்ற நினைப்புத்தான் காரணம்!

**அராலி. விஜயா.**
கட்டிய நான் இருக்க, ஊர்சுற்றும் என் கணவரை எப்படித் திருத்துவது?
☺அவருக்கு வெளியில் கிடைப்பதை நீர் வீட்டிலேயே கொடுத்துப்பாரும்.

**சங்கானை. வழுதி.**
ஒரு மனைவியையே சமாளிக்க முடியவில்லை. தசரதன் எப்படி அறுபதாயிரம் மனைவியரைச் சமாளித்திருப்பார்.....?
☺அவர் பட்டபாட்டைப் பார்த்துத் தானே மகன் ராமன் ஏகபத்தினி விரதனாகி விட்டான்!

# வித்துவான் பதில்கள்

**நீர்வேலி. மஞ்சன்.**
நான் குட்டை. நெட்டையான பெண்ணை மணந்து கொள்ளலாமா?
☺எட்டாப் பழத்துக்கு ஏன் கொட்டாவி விடுகின்றீர்?

**சுண்டுக்குழி. தீபன்.**
ஆழம் தெரியாமல் காலை விடலாமா?
☺அப்படியெல்லாம் பார்த்தால் திருமணம் செய்ய முடியாது!

**கொட்டடி. ரகு.**
கட்சித் தலைவரின் கோபத்தை எப்படித் தணிப்பது?



☺காலைப் பிடியும். சமயம் கிடைத்தால் வாரியும் விடலாம்!

**யாழ்ப்பாணம். பிரதீபன்.**
பெண்களிடம் கிளுகிளுப்பான கேள்விகளைக் கேட்கலாமா?
☺பின்னர் கிலு கிலுப்பையுடன் போக வேண்டி நேர்ந்தாலும் நேரும்.

**இணுவில். சேகர்.**
எனக்கு மீசை முளைக்கவில்லையே! என்ன செய்யலாம்?
☺ஆசை முளைக்காமல் இருந்தால் தான் தப்பு - விட்டுவிடுங்கள்.

### இவ்வார ஜோக்!

ஒருவன் கல்லறையில் இருந்து அழுது கொண்டிருந்தான். 'நீ செத்திருக்கக் கூடாது. செத்ததினால் நான் எவ்வளவு கொடிய துன்பங்களை அனுபவிக்கிறேன் தெரியுமா? என் வாழ்வே நரகமாகிவிட்டது. நீ சாகாமல் இருக்கக் கூடாதா?' என்று அவன் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தான்.

அங்கே வந்த ஒருவர் கேட்டார்
'உயிரிழந்தவர் உன் தந்தையா?'
'இல்லை'
'மகனா? மகளா?'
'இல்லவே இல்லை'
'உன் மனைவியா?'
'இல்லையே!'
'அப்படி என்றால் இறந்தவர் யார்?'
'என் மனைவியின் முதல் கணவர்'
- என்றான் அவன் அழுது கொண்டே!

| | | | |
|---|---|---|---|
| வெ | சூ செவ. வியா. புத. சனி | | |
| | இராசிச்சக்கரம் | | ராகு |
| கே | | | |
| | சந் | | |

*மாற்றம்:- 22.04.2000ல் அனுஷம் 4ஆம் பாதம் - விருச்சிகம் இராசியில் சந்திரன் நிற்கும்.*

*24.04.2000 இல் இடபம் இராசிக்கு செவ்வாய் மாறும்.*

*உலக நாடுகளில் புதிய அழுத்தங்கள் கொடுக்கும். அரசியல்வாதிகள் புதிய கருத்துக் கண்ணோட்டங்களை முன்னெடுப்பார்கள். மக்கள் கருத்து, மாணவர்களின் புதிய சிந்தனை, தொழிலாளர்களின் உரிமைச்சிறப்பு என்பவற்றிக்கு அரசு*

## ஜாதக சஞ்சீவி

*முகம் கொடுக்க நேரிடும். இடப்பெயர்வு, யுத்த பயத்தை நீக்க மக்கள் தெய்வப் பிரார்த்தனைகளைச் செய்து வருவார்கள். இந்தியா புதிய கருத்துக்களைச் சொல்லும். வடக்கில் எதிர்பாராத தாக்கம் பாரதத்தில் ஏற்படும். புதிய விஞ்ஞான பொருளாதார சிறப்பு நடவடிக்கைகள் மேம்படும். மேற்கு நாடுகள் உதவிகள் செய்யும். கிழக்கு நாடுகளில் சீனா சில முக்கிய நடவடிக்கைகளை தாய்வான் மீது திணிக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.*

# இந்த வார இராசி பலன்

### 22-04-2000 இலிருந்து 28-04-2000 வரை

## மேடம்

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பார்கள் ஏன்? சடு, புடு என வேகம் கொள்கிறீர்களா? மக்கள் வாழ்க்கையே ஒரு நம்பிக்கை ஓட்டத்தில்தானே ஓடுகின்றது. எனவே தொழில் ஸ்தானத்தில் வேண்டா வெறுப்பாக இருக்காமல் நம்பிக்கையுடன் செயற்படுங்கள். மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்களுக்கு பேச்சுவார்த்தைகள் நடக்கும். எவரையும் நம்பி நடக்கலாகாது. குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள் வரச்செய்யும். சிலருக்கு திடீரென இடமாற்றங்கள் கொடுக்கும். கண், வயிற்றுரோகங்கள் வரும். கைகால் உளைவு, நாரிஉளைவு கொடுக்கலாம். வீடு, காணி, வாகனம் சம்பந்தமான மாற்றங்கள் கொடுக்க இடமுண்டு. இடாம்பீகச்செலவுகள் அதிகரிக்க இடமுண்டு. வியாபாரம், கமிஷன் வேலைகள், பத்திரிகைத்துறை, போக்குவரத்துத்துறை, செய்தித்துறை போன்றவற்றில் தொடர்பானவர்கள் அதிக இலாபங்களை அடைவார்கள். தூர தேசச் செய்திகளால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, திங்கள், வெள்ளி.*

## இடபம்

மனிதர்கள் கிரகங்களின் கட்டுப்பாட்டில் சிக்குண்டு ஒரு வட்டத்துக்குள் அகப்பட்ட கூண்டுக்கிளிகள் போல சுற்றிச்சுற்றி திரும்பத்திரும்ப வட்டமிடுவது போன்று சுழன்று வருவார்கள். அதுபோன்று நீங்களும் ஒரு தொழிலையோ அல்லது ஒரு ஸ்தாபனத்திலோ வட்டமிடுவீர்கள். சுழற்சி, தேர்ச்சி என்ற அனுபவத்தை தரும்தானே. ஊக்கத்தால் உயர்வு அடைவீர்கள். குடும்பத்தில் குதூகலம், கொண்டாட்டங்கள் நடக்கும். இடமாற்றங்கள் சிலருக்கு நன்மைகளைக் கொடுக்கும். பொருள் விரயமும், திடீரென மனக்குழப்பத்தைக் கொடுக்க இடமுண்டு. மறைமுகப் பகைமைகள் கலக்கத்தை தரலாம். கோவில் அல்லது திருப்பணிச் செலவுகள் அதிகரிக்க இடமுண்டு. இடாம்பீகப் பொருளொன்று வாங்கத் திட்டமிடுவீர்கள். நரம்புச்சோர்வு, உடல் அசதி, வாய்வுக்குழப்பம், நெஞ்சுப்படபடப்பு, சலவருத்தங்கள் என்பன கொடுக்க இடமுண்டு. இரும்பு, இசைத்துறையினர், செய்தித்துறையினர், போக்குவரத்து, மருந்து, சட்டம் போன்ற துறையினர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, வெள்ளி.*

## மிதுனம்

வேகமான உலகில், நெஞ்சத்தைத் தொடும் கருத்துக்களுக்கு நிச்சயம் வரவேற்பு இருக்கச் செய்யும். உங்கள் வேகமான செயல்களுக்கும் நன்மைகள் ஏற்படாமல் இருக்காது. தொழில்ஸ்தானத்தில் நன்மைகள், மாற்றங்கள் ஏற்படும். சட்டத்தைப்பார்த்தால் எதைத்தான் ஒழுங்காகச் செய்யமுடியும் எனச் சலிப்படைந்து, மாறான செயல்களைச் செய்யத்திட்டமிடுவீர்கள். உங்கள் தனி வழிப்பாதையில் எவராவது குறுக்கிட்டால் மூர்க்கத்தனமாக எதிர்க்கத் திட்டமிடுவீர்கள். வீடு, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். தாய்வழி, மாமன் உறவுமுறையினருடன் மனக்கருத்துக்கள் ஏற்படலாம். அரச அதிகாரிகளுடன் மோதுவது நல்லதல்ல. மலச்சிக்கல், தலைவலி, வாய்வு, வாதஉளைவு, என்பன ஏற்படச்செய்யும். அடிக்கடி சலிப்படைந்து எதையாவது சொல்லிக் கொண்டு இருப்பீர்கள். கடன்படுவீர்கள். பத்திரிகைத்துறை, ரீ.வி, கலைத்துறை, ஹோட்டல்துறை, மருந்துத்துறை, ஆசிரியத்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, வெள்ளி.*

## கடகம்

இயற்கை அதிக மாற்றங்களைத் தர செயற்கை பலகட்டுப்பாடுகளை உருவாக்குகின்றது. இவையெல்லாம் அதிக தூரம் சிந்திக்க உங்களுக்கு நேரமிருக்காது. தொழில் ஸ்தானத்திலும் சரி வீட்டிலும் சரி நீங்கள் பல பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு ஓடியாடித்திரிவீர்கள். வருமானத்தில் நன்மையான மாற்றங்கள் தென்படும். புத்திரர் அல்லது சகோதரங்களின் முன்னேற்றத்திற்காக அல்லது உங்களுக்கு உதவிகள் செய்ய அவர்கள் ஓடியாடித் திரிவார்கள்., தூர இடங்களில் இருந்து உதவிகள் வர இடம் உண்டு. சளி, காய்ச்சல், நாரி உளைவு, சலவருத்தங்கள் என்பன வர இடமுண்டு. அடிக்கடி மனம் பல கற்பனைகளில் ஈடுபடுவதும் பயத்தால்

**மகாதேவா ஜோதிடம்**

யோசிப்பதுவும் இக்காலத்தில் நடக்கும். வாகனத்தில் கவனமாக இருக்கவும். பொருள் செலவுகளைக் கட்டுப்படுத்திவரவும். விவசாயத்துறை, இரும்பு, தொழில்நுட்பத்துறை, மருந்துத்துறை, அரசியல் துறை, போக்குவரத்துத்துறை எண்ணெய்த்துறையினர்கள் அதிக மாற்றங்களையும், இலாபங்களையும் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, வெள்ளி.*

## சிங்கம்

உங்களுக்கு புதிய வாழ்க்கை, புதிய உத்வேகம், புதிய தொழில், இடம் என மாற்றங்கள் வரும் அறிகுறிகள் தென்படுகின்றன. நல்லவர்கள் நல்லவர்களுடன்தான் ஒத்துப்போவார்கள். கெட்டவர்களைப் பற்றி ஏன் சிந்திக்க வேண்டும்? உண்மையானவர்கள் திறமையானவர்களுக்கு என்றும் சோதனை இருக்கத்தான் செய்யும். அதற்காகத் தயங்கக்கூடாது. சகோதரர்களின் நன்மைக்காக ஓடியாடித்திரிய வேண்டிவரும். செல்வாக்குச் சொல்லாமல் வரும். சாஸ்திரம், கோயில் விஷயங்களில் அதிக கவனம் செலுத்துவீர்கள். அரச உதவி அல்லது மேலதிகாரிகளின் ஆதரவு இருக்கும். எதிர்ப்பாளரால் சிலருக்குப் பிரச்சினைகள் வரலாம். இடமாற்றங்கள் வந்தாலும் அதை இயன்ற அளவு தடுத்து விடுவதனால் பல நன்மைகள் இருக்கச் செய்யும். உடல் அசதி, படபடப்பு, கைகால் விறைப்பு, நாரிநோ, தலைச்சுற்று பித்தக் கொதிப்பு என்பன வரலாம். மருந்துத்துறை, அரசியல் துறை, ஆசிரியத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, வெள்ளி.*

## கன்னி

விதி, அழிவைத்தரும் என இருந்தால் இந்தக் கொடிய யுத்தத்தை எவராலும் நிறுத்த முடியாது. இது ஒரு தொடர்கதைபோல தொடரச் செய்யும். இதனால் பல கள்வர்கள், சந்தர்ப்பவாதிகள் பகலில் நல்லவராகவும் இரவில் கள்ளராகவும் செயற்பட்டபடி இருப்பார்கள். இவர்கள் போன்றவர்கள் உங்கள் தொழில் ஸ்தானத்தில் உலாவிவருவதை உணர்வீர்கள். பொருள் விஷயத்தில் கவனமாக இருங்கள். சில்லறைத் தட்டுப்பாட்டைப்பாவித்துச் சிலர் மறந்தவர்கள்போல நடக்கும் காலமாகும். அவசரமான மனப்போக்கால், மறதியால் பொருள்களை இழக்க நேரிடலாம். நரம்புத்தளர்ச்சி, கைகால் விறைப்புவாதஉளைவுசளித்தொல்லை, காய்ச்சல் போன்ற வருத்தங்கள் வருத்தலாம். எந்தக் கஷ்டங்கள் வந்தாலும் உங்கள் மதிநுட்பத்தாலும், சிரித்துச்சமாளிக்கும் ஆற்றலாலும் பலவித நன்மைகளை நிச்சயம் நீங்கள் இக்காலத்தில் அடைவீர்கள். நகைத்துறை, மருந்துத்துறை, நிர்வாகத்துறை, பத்திரிகைத்துறை, வியாபாரத்துறை, பாதுகாப்புத்துறை சம்பந்தப்பட்டவர்கள் அதிக இலாபங்களை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, திங்கள், வெள்ளி*

## துலாம்

மழை, வெயில் மாதிரி எவரையும் எதிர்பார்த்து செயற்படமாட்டீர்கள். உண்மை உழைப்பாளிகளுக்கு ஊக்கம் கொடுத்தபடி இருப்பீர்கள். எதிர்பாராத சிந்தனை உங்கள் நல்மனம்போல் எத்தனை பேருக்கு வரும். தொழில் ஸ்தானத்தில் உயரதிகாரிகள்கூட உங்களில் பெருமைப்படும்படி நடந்து பெருமை தேடுவீர்கள். சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெளிநாட்டில் நாட்டின் தலைவர்கள் செய்வதுபோல் நீங்களும் பல பிரச்சினைகளுக்கு சமாதானத் தீர்வு காண முனைவீர்கள். எதிர்ப்பாளரால் பல கஷ்டங்கள் வந்தாலும் சமாளித்து நடப்பீர்கள். பாசத்தை, பணச்செலவுசெய்து காட்டமுடியாது எனச் சிந்தித்துச் செயற்படுவீர்கள். தலைவலி, தோல் சொறி, வயிற்றுவருத்தங்கள், நாரி உளைவு, வாய்வுத்தொல்லைகள் என்பன வருத்தும். குருத்துறை, கடல்துறை, விவசாயத்துறை, கமிஷன்துறை, சட்டத்துறை போன்றவற்றில் நன்மைகள் கிடைக்கும். உங்களைப் பற்றி மற்றவர்கள் குறைவாகச் சொல்வதை பெரிதாக எடுக்காமல்விடின் மனப்பாரம் குறையும்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, திங்கள், வெள்ளி.*

## விருச்சிகம்

சிலர் கோயில்களில் பரிபாலன சபைகளில் பங்கு பற்றி இருப்பது தமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதற்கன்றி தெய்வபக்தியால் அல்ல. இவர்கள் பதவிகளில் பொய்ப் பக்தி வேஷக்காரர்களாக இருப்பதனால் பல நல்லவர்கள், பக்திமான்கள், நேர்மையானவர்கள் ஒதுங்கி வாழுகின்றார்கள். இப்படிப்பட்ட பலரை உங்கள் தொழில் ஸ்தானத்தில் காணச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். உண்மை உழைப்பு, உறுதியான நடவடிக்கைகளுக்கு நன்மைகள் ஏற்படத்தானே செய்யும். பொதுச்சேவையால் புகழ் அடைவீர்கள். மேலதிகாரிகள் புதிய பொறுப்புக்களைத் தருவார்கள். நண்பர்களின் உதவிகளால் மகிழ்ச்சியும் உற்சாகமும் ஏற்படும்.

புதிய உஷ்ண உடம்பில் வரும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கைகால் பிடிப்பு, வயிறு, நெஞ்சுநோ, வாய்வுத்தொல்லைகள் என்பன கொடுக்கும். சட்டத்துறை, மருந்துத்துறை, விவசாயத்துறை வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் அதிகமாற்றங்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- திங்கள், வெள்ளி.*

## தனுசு

சிலருக்கு ஜாதகத்தில் நம்பிக்கை. சிலருக்கு கடவுளில் நம்பிக்கை. பலருக்கு பணத்தில் நம்பிக்கை. ஒரு சிலருக்குக் குணத்தில் நம்பிக்கை என வாழ்க்கையே ஒரு நம்பிக்கை சுழல் சக்கரம்தான். குடும்ப வாழ்க்கையிலும் புருஷன் மனைவியிலும், மனைவி புருஷனிலும் நம்பிக்கைதான். பிள்ளைகளுக்கு அம்மா அப்பாவில் நம்பிக்கைதான். ஆனால் உங்களுக்கு ஒரு படிமேல் தொழிலில் நம்பிக்கை ஏற்படும் காலமாகும். இதனால் பல புதிய திட்டங்களை உருவாக்குவீர்கள். மேலதிகாரிகளே அசந்து போவார்கள். இடமாற்றங்கள் நன்மை தராது. அடிக்கடி எவருடனாவது முட்டிமோதலாமா? கேள்விகள் கேட்கலாமா? என அடிக்கடி சிந்திப்பீர்கள். தாய், தாய்வழி சகோதரமுறையினருடன் வாக்குக்கலகம் ஏற்படலாம். புத்திரருக்காக ஓடியாடித்திரிவீர்கள். அலட்சியத்தால் பல இழப்புகள் ஏற்படும். வயிறு, கைகால், நாரிநோக்கள் வரும். வாய்வுத்தொல்லைகள் கொடுக்கும். விவசாயத்துறை, இயந்திரத்துறை, வியாபாரம், குருத்துறை போன்ற தொடர்புடையவர்களுக்கு பலவித மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்:- ஞாயிறு, திங்கள், வெள்ளி.*

## மகரம்

பிறந்த குழந்தைகளுக்கு அரிட்ட தோஷமென்பது உங்கள் குழந்தைகள் நோயால் - திடீர் தோஷத் தாக்கத்தால் - விபத்துக்களால் பாதிக்கப்பட்டு வருந்தலாம் அல்லது ஆயுள் குறையலாம் என்பதைத்தான் சோதிடர்கள் விளங்காத பாஷையில் அரிட்ட தோஷம் எனச்சொல்கிறார்கள். குழந்தைகளுக்கு மாத்திரமா அரிட்ட தோஷம்? பல பெரியவர்களுக்குக்கூட கண்ட தோஷமல்லவா எமது நாட்டில் பீடிக்கப்பட்டுள்ளது. கல்விக்கு, தொழிலுக்குப் போனவர்கள் திரும்பி வருவாரா என்ற ஏக்கம் பலருக்கு. உங்களுக்கு தொழில் ஸ்தானத்தில் வருவாய் அதிகரிக்குமா? என்ற சிந்தனை ஏற்படும். சக ஊழியர்கள் உதவிகள் செய்வார்கள். இடமாற்றங்கள் நன்மைகள் தரும். அதிக செலவுகள் வாகனத்தால் சிலருக்கு ஏற்படலாம். ஆனை வேகத்தில் உங்கள் செயற்பாடுகள் இருக்கும். நெஞ்சுச்சளி, நரம்புச் சோர்வு, வாய்வுக்குழப்பம், நெஞ்சு எரிவு என்பன வரலாம். புடைவை வியாபாரம், நகைத்தொழில், பிரயாணத்துறை, செய்தித்துறை, விவசாயத்துறை போன்ற துறையினர்களுக்கு அதிக இலாபங்களும், நன்மைகளும் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, ஞாயிறு, திங்கள்.*

## கும்பம்

காலம், நேரம் இடங்களால் அழிந்துபோகும் பொருளைக்காட்டி எத்தனை புரியம்? பலர் சிலரை நையாண்டி செய்வதும், அதட்டி, உருட்டி பயப்படுத்துவதனாலும் சிலருக்கு ஆத்ம திருப்தி ஏற்படுகின்றது. இதையெல்லாம் நீங்கள் பெரிதுபடுத்தமாட்டீர்கள். பெரிதுபடுத்தாமல் தொழில் ஸ்தானத்தில் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விதத்தில் செயற்படுவீர்கள். வெளிநாட்டில் இருந்து உதவிகள் சகோதரங்களிடம் இருந்தோ அல்லது பிள்ளைகளிடம் இருந்தோ ஏதாவது ஒரு வழியில் சிலருக்கு வரும் அறிகுறிகள் தென்படும். நரம்புச்சோர்வு, வயிற்றில் நோ, அடிக்கடி அடிவயிற்று நோ, உஷ்ண பீடைகள் அயலவர்களால் யோசனை, மனப்பயம் என்பன வரும். வீடு, மனை காணி பூமிச் செலவுகளைக் கட்டுப்படுத்தவும் மனச்சாந்திபெற அடிக்கடி ஆலயத்திற்கு சென்று வருவீர்கள். அரசியல்துறை, குருத்துறை, போக்குவரத்துத்துறை, வியாபாரத்துறை போன்றவர்கள் அதிக நன்மைகளை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, ஞாயிறு, திங்கள்.*

## மீனம்

கோயில்காணிகளில் குடியிருப்பதுவும் அவற்றைப் பிறர் வாங்குவதிலும், கொடுப்பதானாலும் கூடக் குற்றமில்லை. ஆனால் தர்மப்படி, நியாயப் படி அந்த அந்தக் கோவில் பூஜை, திருப்பணிகளைக் கவனிக்க வேண்டியது கடமையாகும். இதை அவர்கள் யாரை எதிர்பார்த்தும், பயந்தும் செய்யவேண்டியது இல்லை என நீங்கள் நினைப்பது உண்மையில்லாமல் இல்லை. அவசரமான நடவடிக்கைகள் தொழில் ஸ்தானத்தில் செய்தபடி இருப்பீர்கள். ஆனால் பொருள் வரவு கொடுக்கும். நிதானமாக இருக்கவும். எதிர்ப்பாளருடன் கருத்து வேற்றுமைகள் வரலாம். தெற்கு கிழக்கு திசைகளில் இருந்து நன்மைகள் வர இடமுண்டு. சகோதரங்களுடன் கருத்துக் கலகம் வரலாம். எதிர்ப்பாளருடன் ஓரளவு அனுசரித்து நடக்க முயலுங்கள். சளி, நரம்புப்பிடிப்பு, நடுக்கம், வாய்வுத் தொல்லைகள், வயிற்றுநோ என்பன கொடுக்கும். வெளிநாட்டுத்துறை, மின்சாரத்துறை, பத்திரிகைத்துறை, நகைவேலை, வியாபாரத்துறை, நிர்வாகத்துறை சம்பந்தப்பட்டவர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி, ஞாயிறு, திங்கள்.*

## கங்காவுக்கு வந்த கடிதம்

அன்புக் கங்கா அவர்கட்கு, என்றும்
இன்பாய் குணாளன் எழுதுவ தில்தே
இறைவன் அருளால் இனிதே உள்ளோன்
அறைவதற் கிங்கே அதிகம் இல்லை
உந்தன் சுகத்தை உடனே அறிய
எந்தன் உள்ளம் ஏங்கித் துடிக்குதே.
எத்தனை கடிதம் எழுதினேன் எனினும்
அத்தனைக் கும்நீ அனுமதி தரவில்லை
கண்டா வாழ்வு கசக்குதே உன்னால்
மனதால் உன்னை வரித்து நிற்கிறேன்
மானென மருளும் வனப்புடை மகளே
தேனென இனிக்கும் செம்மனச் செல்வி,
தங்கச் சிலையே தளிர்த்திடும் கொடியே
கங்கா உன்னால் கவல்கிறேன் நானே
இனியவள் நீயே எந்தன் இலட்சியம்
தனிமையை விலக்கு. சார்ந்தென்னை உயர்த்து!
ஒண்டொடி நீயே ஒருப்பட்டு வந்தால்
கண்டு களி்ப்பாய் கண்டாக் காட்சியை!
விண்ணுற உயர்ந்து மேல்மாடிகளுடன்
கண்ணுக் கினிய கட்டடத் தொகுதிகள்
எழிலுறு வீதிகள், இயந்திர விநோதங்கள்
தொழில்புரி கூடங்கள், சுரங்கம் இவற்றை
வந்துபார் கங்கா வாஎன்னுடனே
சுந்தரி வீணே துயரப் படாதே
நாட்டைப் பற்றிஎன் நாட்டம் உனக்கு?
வீட்டைப் பற்றிய விருப்பம் வேண்டாமா?
சொந்தமண் என்று துடிக்கிறாய் கங்கா
உந்தமண் என்னடி உயர்ச்சி உடையது?
தென்னையும் பனையும் செம்பாட்டு மண்ணும்
புன்னையும் கிளுவையும் பூவரசும்தான்!
தாய்மொழி, பண்பாடு தமிழ்க்கலாச் சாரம்
பாய்பறி அது இது பயிற்றங்காய் என்கிறாய்
வாழ்க்கைக் குதவா வரட்டுத் தத்துவம்.
வீழ்ச்சிப் பாதை, வேண்டாக் கொள்ளைகள்!
உவைகளை விட்டு உடனேவந்து
சுவைத்துப் பாரடி சொகுசு வாழ்க்கையை!
தாமதம் வேண்டாம் சரியெனச் சொல்லு
சேமமாய் வாழச் செய்குவேன் உன்னை!
இம்மடல் கண்டதும் இன்மடல் எழுது
சம்மதம் தனையும் தவறா தெடுத்துச்
செப்புக, அன்பு செழிக்க
இப்படிக் குந்தன் இனிய குணாளனே.

**- வ.சின்னப்பா -**

*தனங்களப்பு.*

# உறவுப் பாலம்

உடுவில் அரவிந்தன்

'அவர் கூறியது உண்மையில் நடக்குமா? என்னுடைய ஐயாவும் அம்மாவும் இனியாவது எங்களை ஏற்றுக் கொள்வார்களா. சமூக வரையறைகளை மீறி வாழத்தொடங்கிய எங்களை, என் அக்காவைப்போல அனைவரும் சேர்ப்பார்களா?'

நேற்று முன்தினம் தொடக்கம் தமயந்தியின் மனம் கண்டபடி சிந்தித்துக் கலங்கியபடியிருந்தது.

பூமிப்பந்துக்கு எதிராக மேலே சுழன்று கொண்டிருந்த மின்விசிறியானது, அறைக்குள் அசையாதிருந்த வளியை அசைத்துக் காற்றாக உருமாற்றஞ்செய்தாலும், பங்குனி வெயிலின் உக்கிரம் குறைந்ததாக இல்லை. வெளியிலுள்ள மரங்கள் வேறு மௌனம் சாதித்தன.

அக்கம்பக் கட்டில்களில் தங்கள் இரத்தங்களைப் பிரதி பலிக்கும் புதிய பிறப்புக்களை உச்சிமோந்து உவகையடையும் நரைதிரைகளை தமயந்தியின் விழிகள் ஏக்கத்துடன் பார்த்தன. அவளுடைய கரம் அருகிலே மலர்ந்து கிடக்கும் தன்பிள்ளையை அவளையறியாமலே வருடிக் கொடுத்தது.

வழிய முயற்சிக்கும் கண்ணீருக்குத் தடையிடும் உத்தேசத்துடன் அவளது இமைக்கதவுகள் ஒன்றையொன்று தழுவிக் கொண்டன.

* * *

முற்று முழுதாக முன்னேறாவிட்டாலும் நாகரிகத்தின் சுவடுகள் பெருமளவில் வெளித் தெரிகின்ற கிராமம் அது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரந்து விரிந்த வெளிகளையும், அடர்ந்து நெருங்கிய தென்னந்தோப்புக்களையும் இடையிடையே அணிந்து கொண்டதால் அழகின் வெளிப்பாடு அங்கே காணப்பட்டது.

பிரதான வீதியோடு இணைந்து ஒடுகின்ற தண்டவாளங்கள் வளைந்து திரும்புகின்ற இடத்தில் வரிச்சுமட்டைகளால் இணைக்கப்பட்ட வேலியைக் காணலாம். அந்த வேலியைத் தொட்டு நீண்டிருந்த வளவிலிருந்துதான் ஆரவாரம் கேட்கிறது.

விதானையார் சின்னத்துரை தென்னைமட்டை வெட்டும் நீண்ட கத்தியுடன் அந்தக் குடிசையின் முன் நின்றிருந்தார். அவருடன் நாலைந்து இளைஞர்கள் பொல்லுகள் தடிகளுடன் துடித்துக் கொண்டிருந்தார்கள்.

விதானையார் உட்கொண்ட சாக்கின் காரம் கண்களின் வழியே வெம்மையாக வெளிப்பட்டது. தென்னோலைகளால் மிக நெருக்கமாகவும், வெகு பக்குவமாகவும் வேயப்பட்டிருந்த கொட்டிலின் கப்பினைப் பறக் கத்தியால் படீரென அடித்தவர் பெரிய குரலெடுத்துக் கத்தினார்.

"வெளியிலைவாடி எளிய...! ஊர் உலகத்திலை என்னைத் தலைகுனிய வச்சிட்டியே தறுதலை! உன்னை..."

நேரகாலம் தெரியாமல் வந்து குரைத்த நோஞ்சான் நாயொன்று அவருடைய கத்தி வீச்சில் அகப்பட்டுச் சுருண்டு விழுந்தது. அதன் முனகல் அடங்குவதற்கிடையில், சாத்தப்பட்டிருந்த கதவு மெல்லத் திறக்க அந்த நீக்கலினூடாக இரு விழிகள் தெறித்தன. அவை இரண்டிலும் கலவரத்தின் சாயல் முழுமையாக ஒட்டியிருந்தது.

அந்த விழிகளுக்குரியவளைக் கண்டதும் விதானையார் தொங்கிக் குதித்தார்.

"வாடி இஞ்சாலை, உன்னை ரெண்டு துண்டாக்கிப் போட்டுத்தான் அடுத்த வேலை"

"ஐயா இப்ப என்னத்துக்குக் குளறுறியள்? உங்களுக்குச் சிலவுத் தானம் வையாமல் நான் வந்திட்டன்"

கதவு முற்றுமுழுதாகத் திறக்கப்படாமல் அவளுடைய குரல் மட்டும் மெலிதாகக் கேட்டது.

"வெக்கங்கெட்ட....! ஓடி வாறதுக்கும் ஒரு தகுதி வேணுமடி. எங்கட காலை நக்கித்திரியிற அந்தப் பரதேசி நாயிட்ட என்னத்தையடி கண்டனீ?"

கதவைத் திறந்து கொண்டு சரேலென வெளிப்பட்டாள் தமயந்தி. அவளுடைய விழிகளுக்கு நெருப்புத்தாவியிருந்தது. தந்தையின் முகத்தை நிதானமாக ஊடுருவியவள், ஒவ்வொரு வார்த்தையாக அவரை நோக்கி எறிந்தாள்.

"எங்கட தோட்டத்துக்கு மட்டை பொறுக்க வாற... பெண்டுகளிட்ட நீங்கள் என்னத்தைக் கண்டிங்களோ அதைத்தான்"

விருட்டென்று உள்ளே நுழைந்து கதவைப் படீரென்று அடித்துச் சாத்தினாள்.

ஆயிரம் கருங்குளவிகள் கொட்டினாற் போலத் திடுக்கிட்டுப் பின்வாங்கினார் விதானையார் சின்னத்துரை.

உச்சித் தென்னையிலிருந்து கீழ் நோக்கித் தாவிய காகமொன்று, அவரைப் பார்த்து இளக்காரமாகக் கரைந்து கொண்டு போனது.

விதானையார் ஒன்றும் பேச இயலாதவராக, எல்லாம் இழந்தவராகத் தளர்ந்து நடந்தார். இவ்வளவு நேரமும் இந்தக் கூத்தை வேடிக்கை பார்த்த ஊர்ச்சாண்டியன்களும் இணைந்து தொடர்ந்தனர்.

உள்ளே நிலத்திலே துவண்டு சரிந்து அழுத தமயந்தியை செல்வராசாவின் கரம் ஆதரவாகப் பற்றியது. சிலிர்த்துப் பரவிய கூந்தலை ஒதுக்கியவன், அவளுடைய கண்ணீரை மெல்லத் துடைத்துவிட்டான்.

உரமேறிக்கிடந்த தாடையை இன்னும் இறுக்கிய செல்வராசா தணிந்த குரலில் உறுதியாகக் கூறினான்.

"தமயந்தி. நான் ஏழைதான். எண்டாலும் நாங்கள் மனிசர் எண்டதை வாழ்ந்து நிரூபிக்க வேணும். செய்து காட்டுவம்"

அவர்கள் தங்கியிருந்த தென்னந்தோப்பு மில் முதலாளி சுப்பிரமணியத்துக்குச் சொந்தமானது. மாதத்தில் ஒரு தடவைமட்டும் வந்து தேங்காய்களையும், மட்டைகளையும் ஏற்றுவதன்மூலம் தன்னுடைய உரிமையை நிலைநாட்டி விட்டுப் போவார். ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் இருநூற்றைம்பது தென்னை மரங்கள் குலைதள்ளிச் சிலிர்த்திருந்தன. வடக்குப் பக்க வேலியோரம் ஏழெட்டுப் பனைகள் கருக்குகளுடன் காவல் காத்தன. வளவின் நடுப்பகுதியில் சற்று ஆழமாக வெட்டப்பட்ட துரவில் நீர் மௌனமாகத் தேங்கிக் கிடந்தது. கணக்குத் தவறாமல் எல்லாவற்றையும் சரியாக ஒப்படைப்பதனால் செல்வராசாவின் மீது அதீத நம்பிக்கை வைத்திருந்தார் சுப்பிரமணியம். அதனாலோ என்னவோ சம்பளத்தை விட மேலதிகமாக கறித்தேவைக்குத் தேங்காய், உடுபுடைவை என்பவற்றையும் கொடுத்துவிட்டுச் செல்வார். இந்த நடைமுறை இவர்களின் இணைவுக்குப் பின்னரும் தொடர்ந்ததால் இல்வாழ்க்கை ஒரு விதமாக மெல்ல அசைந்தது.

இருவருக்கும் இடைப்பட்ட அன்புப் பரிமாறல்களின் மொத்த விளைவாக தமயந்தி பொங்கிப் பூரித்து மலர்ந்தாள். ஒருநாள் வீதியிலே கண்ட அவளுடைய அக்கா மனோரஞ்சிதம் கடந்ததை நினைத்துக் கண்ணீர் விட்டாள். இரத்த உறவை நெகிழ்த்திக் காட்டிய அந்தக் கண்ணீர் தமயந்திக்கும் வராமலில்லை.

பூகம்பமாய்க்கிளம்பி இறுதியில் புழுதியாக அடங்கிப் போன அவளுடைய ஐயாவும் அதற்குப் பிறகு அவளைச் சந்திக்கவில்லை. தமயந்தியின் ஒடுங்கிய வயிறு இலேசாக உப்பிப் பெருத்து ஊரெல்லாம் அவரைத் தாத்தாவாகியபோதும் அவர் தன் பிடிவாதத்தை விடவில்லை.

முந்தைய காலங்களில் இரவு நேரப் பிரசவங்களில் நடந்தேறிய அவலங்களை நினைத்த செல்வராசா, இரண்டு நாள்களுக்கு முன்பே வைத்தியசாலைக்கு அழைத்து வந்து விட்டான்.

* * *

கன்னங்களில் வழிகின்ற கண்ணீரை யாரோ துடைத்து விடுவது போன்ற உணர்வில் விழித்துப் பார்த்தாள் தமயந்தி.

செல்வராசா கட்டில் விளிம்பில் அமர்ந்திருந்தான். அவனுடைய விழிகளின் ஓரங்களிலும் கண்ணீர்த் துளிகள் ஒட்டியிருந்தன.

உழைத்து ஊரமேறிய கைகளைப் பற்றியவாறு விம்மினாள் தமயந்தி.

"ஐயாவும் அம்மாவும் எங்களைச் சேர்ப்பினமோ? ஏதோ ஓர் ஓர்மத்திலை எல்லாரையும் பிரிஞ்சு நல்லா வாழுறம் தான். எண்டாலும் எல்லாரும் ஒண்டா இருக்கிறமாதிரி வருமே? இஞ்ச பாருங்கோ என்ர செல்லத்தை! உலகத்திலை நடக்கிறது ஒண்டும் தெரியாமல் கையைக் காலை ஆட்டிக்கொண்டிருக்குது!"

இன்னமும் முற்றாக பிரிக்கப்படாத விழிகளால் அவர்கள் இருவரையும் பார்த்துத் திகைத்தபடியிருந்த அந்தக் குழந்தையை ஆர்வத்துடன் வருடினான் செல்வராஜா.

"தமயந்தி. உம்மட ஐயாவும் அம்மாவும் இதுக்குப் பிறகு கூட எதிர்புக் காட்டினா என்ன செய்வீர்?

அவனுக்குப் பதில் சொல்ல வாயெடுத்த தமயந்தி வாசற்புறம் எதையோ பார்த்துக் கண்களை விரித்தாள்.

"அக்கா....!"

தமயந்தியின் கூவலால் நிமிர்ந்த செல்வராசா திரும்பினான்.

மனோரஞ்சிதம் மெல்ல முறுவலித்தவாறு உள்ளே நுழைந்தாள். கொண்டுவந்த பையை வைத்துவிடுக் குழந்தையுடன் செல்லம் பொழிந்தாள்.

"தங்கச்சி. சரியா உன்னை உரிச்சு வைச்சமாதிரிப் பிறந்திருக்குதடி!" அவளுடைய குரலில் மகிழ்ச்சி நிரம்பியிருந்தது.

"அக்கா! அம்மா வரேல்லையே?"

தயக்கத்துடன் ஒலித்த தமயந்தியின் குரலைக்கேட்டு மனம் வாடித் திரும்பிய மனோரஞ்சிதம் எதுவும் பேசாமல் ஜன்னலினூடு ஏதோ ஒன்றை வெறித்தாள்.

"தங்கச்சி! நீ பிள்ளைத்தாச்சியானது வீட்டை எப்பவோ தெரியும். அம்மாவுக்கு வலு சந்தோஷம். ஐயாதான் கொஞ்சம் ராங்கியாத் திரியிறார். பிள்ளையைக் கண்டா எல்லாம் பறந்து போகிடும் பாரன்!"

தமயந்தியின் முகம்பூவாக விரிந்தது. இமையிதழ்களைப் படபடவென அடித்தவள், தவிப்புடன் செல்வராசாவைப் பார்த்தாள். அவன் மென் முறுவலுடன் நின்றிருந்தான்.

"அது சரியக்கா. நீ இஞ்சவந்தது வீட்ட தெரியுமே?"

"என்ர அவருக்குத் தெரியும். அம்மாவுக்கும் சொன்னனான். தடுக்கேல்லை அதோட இந்தா அம்மா தந்து விட்டவ" என்றவள், தமயந்தியின் உள்ளங்கையினுள் ஆயிரம் ரூபாவைத் திணித்தாள். பிறகு, செல்வராசாவைப் பார்த்துக் கேட்டாள்.

"அப்ப எப்பதம்பி வீட்ட கொண்டு போகப்போறீர்?"

"இண்டைக்குத் துண்டு வெட்டுறதெண்டு பெரிய டாக்குத்தரம்மா சொன்னவ. மத்தியானம் போல வெளிக்கிடவேணும்" தயங்கித் தயங்கி வார்த்தைகளை நழுவ விட்டான் செல்வராசா.

"நில்லக்கா! நீயும் எங்களோட ஒண்டாப் போகலாம்".

தும்பந்திக்குத்தலையை அசைத்துக் கொண்டே தான் கொண்டுவந்த உணவுப் பொதியைப் பிரிக்கத் தொடங்கினாள் மனோரஞ்சிதம்.

பிற்பகல் இரண்டு மணியளவில் அவர்கள் வைத்தியசாலையை விட்டு வெளியேவந்த போது வாசலில் நின்ற ஓட்டோகள் வரவேற்றன. ஒழுங்கு முறைப்படி முன்னே காத்திருந்த ஓட்டோவில் ஏறினார்கள். மனோரஞ்சிதம் குழந்தையை அணைத்து வைத்துக் கொண்டாள். தலையணையை மடியில் கிடத்தியபடி நடுவே அமர்ந்தாள் தமயந்தி. மறுபுறம் செல்வராசா ஏற ஓட்டோ புறப்பட்டது.

ஓட்டோவை இயக்கிய இளைஞன் வசீகரமாகப் புன்னகைத்தான். வாகனத்தின் அதீத இரைச்சலைப் பொறுத்துக் கொள்ள மாட்டாமல் செல்வராசா காதைப் பொத்திக் கொண்டு கேட்டான்.

"ஏன் தம்பி? தணி மண்ணெண்ணையிலையோ ஓடுறீர்?"

அந்த இளைஞன் கண்ணாடியினூடு பார்த்துப் பதிலளித்தான்.

"ஓம் அண்ணை. அதோட இது நல்லா உழைச்சுத் தந்திட்டுது. ஆறு வருசமா ஓடுறன்."

"இவ்வளவு சின்ன ஆளாக் கிடக்கு. ஆறுவருசமா ஓடுறன் எண்கிறாய்!"

மனோரஞ்சிதம் ஆச்சரியமாகக் குறுக்கிட்டாள்.

"ஓம் அக்கா பதினெட்டு வயதில ஓடத்தொடங்கினனான். முதலுக்காக வைச்ச அடைவு, மீளரெண்டு வருசமாச்சுது. பிறகு காசு சேர்த்து அக்காவுக்கு ஒரு கலியாணத்தைப் பேசி முடிக்க இப்பதான் காலம் சரி வந்தது. வாற ஆறாந்திகதி கலியாணம்."

பின்னால் அசுர வேகத்தில் வந்த இராணுவ வாகனத்துக்கு வழிகொடுப்பதற்காக வேகத்தைக் குறைத்து ஓரங்கட்டிக்கொண்டே சொன்னான் அவன்.

"ஏனப்பன்! உனக்கு அண்ணைமார் இல்லையே?" மனோரஞ்சிதம் பரிதாபம் தோய்ந்த குரலில் கேட்டாள்.

"அதுக்கா... ரெண்டு அண்ணைமார் கிளாலியிலை நேவியிட்டை வெட்டுவாங்கிச் செத்தவை. அதுக்குப்பிறகு படிப்பையும் விட்டிட்டுத் தொழிலிலை இறங்கிட்டேன். ஒருமாதிரி அக்காவின்ர காரியம் ஒப்பேறப் போகுது. இனி.."

"இனி...?"

வெட்கத்துடன் புன்னகைத்தவன், ஒவ்வொரு சொல்லாகச் சொன்னான்.

"எனக்காக ஒருத்தி காத்திருக்கிறாள்!"

திடீரென்று தெற்குப்பக்கம் கேட்ட வேட்டுச்சத்தங்கள் அவனுடைய முகத்திலிருந்த மலர்ச்சியைக் கடன் வாங்கிக் கொண்டு போயின. கலவரத்துடன் திரும்பிப் பார்த்தான்.

"அது சும்மா தம்பி. உப்பிடித்தான் இடைக்கிடை அடிபடுவாங்கள். பிறகு ஓஞ்சிடுவாங்கள். சனம் தானும் தன்ரை பாடும். எங்களுக்கு உதெல்லாம் பழகிப்போச்சுது. "என்னவோ சமாதானம், பேச்சுவார்த்தை எண்டு தொண்டை கிழியக் கத்துவாங்கள். நாலைஞ்சு பிக்குமார் கூத்தாடின உடனை எல்லாத்தையும் தூக்கி எறிவாங்கள். பாரன் தம்பி உந்தப் பாதை திறக்க வெளிக்கிட்டது ஏதோ எங்களுக்காக எண்ட மாதிரிக் காட்டிறதை! பாப்பம் எத்தினை நாளைக்கெண்டு! நீர் பயப்பிடாமல் ஓடும்"

செல்வராசாவின் வார்த்தைகள் துணிவேற்ற 'அக்சிலேற்றரை' முறுக்கினான் அவன்.

அந்தப் பிரதான சந்தியைத் தாண்டி உவர் மண் செறிந்த வெளிகளினூடாக ஓட்டோ நகர்ந்து உயரமான மேட்டை நெருங்கிய போது, வீதியோரம் நின்ற ஒருசிலர் கைகாட்டி மறித்தார்கள். வாகனம் நிற்கமுன்பே அவர்களின் எச்சரிக்கை ஒலி உள்ளே நுழைந்து மோதியது.

"அண்ணை உங்காலை கடும் அடிபாடு. ஒருசனமும் நுழையேலாது. ஞாயமான சனம் உள்ளுக்கை அம்பிட்டிட்டுது. போனா மாட்டுப்படுவியள்" செல்வராசா திகைப்புடன் தமயந்தியைத் திரும்பிப்பார்த்தான். அவளுடைய விழிகள் கெஞ்சின.

"இனி எங்க திரும்பிப் போறது? போய்த் தங்கிறத்துக்கு எங்களுக்கு ஆர் இருக்கினம்? வீட்டை போனாலாவது ஐயா அம்மாவை இருக்கினம். பிள்ளை இருக்கிறபடியா எங்களை ஒண்டும் செய்யாங்கள்."

மனோரஞ்சிதம் பிரமைபிடித்துப் போய் அமர்ந்திருந்தாள். அவளது கையிலிருந்த அந்தப் பிஞ்சு எதுவும் புரியாமல் சிணுங்கியது. கண்ணீரைக் கண்டதும் செல்வராசா ஒரு முடிவுக்கு வந்து உறுதியாகக் கூறினான்.

"தம்பி. நீர் ஓட்டோவை எடும்"

"அண்ணை...!"


"நான் பேசினத்துக்கு மேலையே தாறன்"

"அண்ணை அதுக்கில்லையண்ணை. உதுக்குள்ள போய் வீணா..."என்று தயங்கியவன், குழந்தையின் அனுங்கலால் மனம் இளகி ஓட்டோவைக் கிளப்பினான். சுற்றிவர நின்றவர்கள் திகைப்புடன் வழிவிட்டார்கள்.

ஆள் நடமாற்றமற்று வெறிச்சோடிக்கிடந்த கண்டி நெடுஞ்சாலையில் வெகு வேகமாகச் சென்ற ஓட்டோ ஏற்றத்துக்கு அப்பால் இறங்கி ஒரு புள்ளியாக மறையும் வரை நின்றவர்களின் விழிகள் நிலை குத்தியிருந்தன.

வேட்டுச்சத்தங்கள் இன்னமும் கேட்டுக்கொண்டிருந்தன.

*(யாவும் கற்பனை)*



## தென்றல் வருமா?

அன்பு என்ற
கண்கள் மீது
உண்மை என்ற
கண்மை தடவி
பெண்மை என்ற
தண்மை கொண்டு
மண்ணின் மீதொரு
தென்றல் வருமா?


போர்கள் எல்லாம்
நாராய் ஓடிய
போலிப் பூமி
பொசுங்கிப் போக
பாசம் எங்கும்
பரவிப் பொங்க
பார்த்துப் பார்த்து(த்)
தென்றல் வருமா?


சத்தியம், தர்மம்
பொத்திய வாய்திறக்க
யுத்த அரக்கன்
செத்துச் சிதை ஏற
பத்தள மேளங்கள்
மத்தாப்பாய்ப் பாட
தத்தித் தவழ்ந்தொரு
தென்றல் வருமா?


ஒன்றே உலகம்!
ஒன்றே சாதி!
என்றே மக்கள்
நன்றாய் வாழ
வென்று! - அழிவை(க்)
கொன்று - உலக
முன்றில் மீதொரு
தென்றல் வருமா?

~ ச.சுஜீதா ~

# விலங்குகளும் பூச்சிகளும் நுணுக்கு


அட, என்ன பயங்கரம்! தமிழ்ப்பட வில்லனின் சிரிப்பு!


அடுக்குமாடிக் கட்டடங்களை அழிக்கும் இராட்சத மயிர் கொட்டியைக்காட்டும் 'திரில்லர்' சினிமா படமா?


பிரசவம் நடக்கின்றது; யாருக்கு, எங்கே?


ஆடவரங்கில் நாட்டிய மேதை!

தரப்பட்ட தகவலை வைத்துக்கொண்டு அது எந்தப் படத்துக்குரியது என்பதை கண்டு பிடிக்கும் 'அறிவுப் புதிர்ப் போட்டி'யை கடந்த இருவாரங்களும் பார்த்தோம். அதன் வரிசையில் இதுவும் ஒன்று.

**குகன்**

**1) உண்பதற்காகவே உயிர்வாழும் மயிர்கொட்டி:-**

ஒரு மயிர்கொட்டி தனது கூட்டை அரித்துக் கொண்டு வெளியேறிய காட்சி. கூம்பு வடிவத்தில், சித்திரவேலைப் பாடுள்ளவை, வண்ணத்துப்பூச்சியின் முட்டைகள். மயிர்கொட்டி உண்பதையே தொழிலாகக் கொண்டிருக்கும். மிக வேகமாக வளர்ச்சியடையும். பின் கூட்டுப் புழுவாக மாறி, உருமாற்றம் பெற்று, வண்ணத்துப்பூச்சியாக வெளியேறும். பொதுவாக வண்ணத்துப்பூச்சிகள் தேனை உணவாகக் கொள்ளும். சில இன வண்ணத்துப்பூச்சிகள் நிறைவுடலி நிலையில் உணவு கொள்வதில்லை. உடலில் உள்ள உணவு தீரும்வரை, இனக்கலப்பு நிகழ்த்தி பின் முட்டையிடும், உணவு தீர வண்ணத்துப்பூச்சியும் இறந்து விடும்.

**2) ஒரு ஏபிட்டுத்தாய் குட்டியைப் பிரசவிக்கின்றது:-**

குட்டியின் கண் முற்பக்கமாக (தாயை அண்டி) இலேசாகத் தெரிகின்றது. கன்னிப் பிறப்பு(PARTHENO GENESIS) முறையில் இது நிகழுகின்றது. அதனால் குட்டி தாயின் அச்சாகவிருக்கும். கருக்கட்டாமல் முட்டைகள் பொரிப்பது கன்னிப் பிறப்பு எனப்படும். மெத்தை போலிருப்பது மயிர் செறிந்த சதைப் பிடிப்பான கனி. அதனால் வெளியேறியவுடனும் குட்டிக்கு உணவு கிடைக்கும். தாயின் பிற்பகுதியில் தெரியும் முளை போன்ற அமைப்புகள்தான் தேனைச்சுரக்கும். ஏபிட்டுக்கள் இனக்கலப்பு நிகழ்த்தி கருக்கட்டிய முட்டைகளையும் இடும். தாயின் மூன்று சோடிக்கால்களும், கண்ணும், உணர்கொம்புகளும் துலக்கமாகத் தெரிகின்றன. "பிரசவத்தைப்பார்க்க தாதியர்கள் இல்லை - பாவம்"

**3) ஆஸ்திரேலிய புல்டோக் எறும்பின் (BULLDOG ANT) தலையும் கொடுக்கும்:-**

இந்த எறும்பு இரண்டு சென்ரிமீற்றர் நீளத்துக்கு வளரம். அதற்கு ஏற்ப கொடுக்கின் பருமனும் அமையும். படத்தில் கண்களும், உணர்கொம்புகளின் அடிப்பகுதியும் துலக்கமாகத் தெரிகின்றன. கொடுக்களில் உள்ள பற்கள் வாள்போன்ற தோற்றத்தைத் தருகின்றன. பயங்கரத்தோற்றத்தை உடையதாகவிருந்தாலும், நிறைவுடலி எறும்பு இனிப்பான தாவரச்சாறுகளையே உணவாகக் கொள்ளும். தாவரத்தைக் கடித்துச் சாற்றைப் பெறுவதற்கு கொடுக்கு உதவும். இந்த எறும்பும் சமுதாயமாக வாழும். கூட்டைப் பாதுகாப்பதற்காக கடிக்கப் பின்நிற்பதில்லை. இது கடித்தால் வலி பெரிதாகத்தான் இருக்கும் - கொடுக்கை படத்தில் மீண்டும் ஒரு முறைபாருங்கள்; புரிந்துகொள்வீர்கள். கூட்டில் வளரும் இளசுகளுக்கு உணவாக மற்றும் பூச்சிகளையும், சிலந்திகளையும் வேட்டையாடிப்பிடிப்தற்கும் கொடுக்கைப் பயன்படுத்தும். நிறைவுடலிகள்தான் சைவம்; இளசுகள் அசைவம் (நான் உணவைக் குறிப்பிடுகின்றேன்; காதலை அல்ல.)


**4) தானிய நீள்மூஞ்சி வண்டின் குடம்பி:- (GRAIN WEEVIL GRUB)**

நுண்ணிய தானிய நீள்மூஞ்சி வண்டுக் குடம்பி, நிறைவுடலியாக வரும்வரை, ஒரு தனிகோதுமைத் தானியத்திற்குள்ளேயே உணவு கொண்டு வளரும். ஈற்றில், இது கடித்துக் கொண்டு வெளியேறும்போது வெற்று உமிமாத்திரம் எஞ்சியிருக்கும். தானியங்களைச் சேமித்து வைக்கும்போதுதான் நீள்மூஞ்சி வண்டுகள் உண்டு களித்து பெற்றுப் பெருகும். வான்வகைக்குரிய கோதுமைத் தாவரங்களில் இவற்றின் பாதிப்பு பெருமளவில் இருப்பதில்லை; அதாவது தானியங்களைச் சேமித்து வைக்கும்போதுதான் நீள்மூஞ்சி வண்டுகள் பீடைகளாக மாறுகின்றன. படத்தில் குடம்பிக்கு மேடையாகவிருப்பது கோதுமைத் தானியம். குடம்பி இருந்த தானியத்தை உடைத்து குடம்பியைப் "போஸ்" கொடுக்க வைத்துப் படம் எடுத்துள்ளார்கள். நீள்மூஞ்சி வண்டுகள் தொடர்பான ஒரு சுவையான(?) கதை:- இற்றைக்கு 200 வருடங்களுக்குமுன், கடற்பயணங்களின்போது, மாலுமிகளுக்கு கொடுக்கப்படும் உணவு கப்பல் விசுக்கோத்து (SHIP'S BUISCUITS) எனவழைக்கப்பட்டன. இதன் உணவுப் பெறுமானம் மிகக் குறைவு. ஆயினும் இது நீள்மூஞ்சி வண்டுகள் நிரம்பியதாயிருக்கும். அதனால் மாலுமிகளுக்கு புரத உணவு மறைமுகமாக கிடைத்தது. (அருவருப்பவர்கள் பட்டினி கிடக்கவேண்டியதுதான் - எத்தனை நாளைக்கு?)

**5) நிறைவுடலி ஷிகர் சிற்றுண்ணி :- (ADULT CHIGGER MITE)**

இளசுகள் மனிதக்குருதியை உணவாகக் கொண்டாலும், நிறைவுடலி ஷிகர் சிற்றுண்ணி சுறுசுறுப்பான, பயங்கரமான, இரைகௌவி. இது தனது பலமுள்ள அலகுகளினால் ஏனைய நுண் அங்கிகளைப் பிடித்து நசித்துக் கொன்று உணவாகக் கொள்ளும். சாதாரணமாகப் புல்வெளிகளிடையே காணப்படும். சிலந்தி போன்ற, சிற்றுண்ணிகள் பாதகமற்றவை. கழிவுப் பொருள்களையும் மற்றும் சிறிய விலங்குகளையும் உணவாகக் கொள்ளும். ஆயினும் சில சமயங்களில் இவை பிரச்சினைக்குரியவையாக மாறிவிடுவதுண்டு. உதாரணமாக இளம் ஷிகர் சிற்றுண்ணிகள் அல்லது சிவப்பு மூட்டைப்பூச்சிகள்(YOUNG CHIGGER MITES OR RED BUGS) மனிதரில் தொற்றிக் கொண்டு கடித்து இரத்தத்தை உறிஞ்சுவதுண்டு. இது கடிப்பதனால் பிரச்சினை இல்லை. ஆயினும் சிலருக்கு இதன் உமிழ்நீர் ஒவ்வாத விளைவுகளை (ALLERGIC REACTIONS) ஏற்படுத்துவதுண்டு. பல நாட்களுக்கு நீடிக்கும் நமைச்சலையும் சொறிவையும் ஏற்படுத்துவதுண்டு. சில நாடுகளில், சில தொற்றுநோய்களுக்குரிய காவிகளாகவும் இவை அமைவதுண்டு.

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்


எங்கோ அவசர அலுவல் இவருக்கு!

**6) முறைத்துப்பார்ப்பது வேறுயாருமல்ல நம்ப சிலந்தியார்தான்:-**

சிலந்தியின் முன்பக்கத்தோற்றம். எட்டுக்கண்களும், கொடுக்குக் கொம்புகளும், உணரடிகளும் துலக்கமாகத் தெரிகின்றன. படத்தில் தெரிவது வலை பின்னும் சி
கண்களிலிருந்தும் பார்
பொட்டை. கண்கள் சிறியவை
கள். ஒளிக்கும் இருளுக்குமி
வேறுபாட்டை உணர்த்த உத
நூல் மிகவும் பலமானது; ஒத்
உருக்கு (STEEL) நூலைச்
சிலந்திநூல் பலமானது.

## பாகம் II

**7) ஒரு வட்டப்புழு (NEM
அண்மையில் செல்லும் சிற்
(MEAL MITE) ஆராய்கி**

ஒவ்வொரு சதுர மீற்றர்
வாழும் மில்லியன் கணக்கான
டிக்குரிய விலங்குகளில் இர
மாத்தாகச் சந்திக்கின்றன.
கணக்கில், வளமுள்ள மண்
மிவை இறந்த தாவர, விலங்
களை உணவாகக் கொண்டு
நிகழ உதவும், மண்ணில்
ளுக்கு வேண்டிய போஷாக்
உதவும். சாதாரணமாக,மண்
வேறுபட்ட சிற்றுண்ணிகள்
80,000 வகை வட்டப்புழுக்கள்
இவற்றுள் சில ஒட்டுண்ணிகள
னால் தாவரங்களுக்கும் விலங்
பிரச்சினைகளைத் தருவதுன

**8) வளையில் மண்புழுவின்
தோற்றம்:-**

மண்புழுவின் வாய்முன் (PI
UM); படத்தில் வட்டத்தட்டுப்
வது; உறுதியானது. வளைத
வும். மண்புழு உக்கலை
சேர்த்து உணவாகக் கொ
பொருள் வட்டம் நிகழ்ப் பெரும
வும், கீழுள்ள மண்ணை வாய
கொண்டு, குதம் மூலம் கழித்
மேலேவர உதவும். மண
உதவும். மண்புழுவின்
கொண்டு மண்ணின் வளத்
கொள்ளமுடியும். மண்புழுக்க
குக் கீழே வளை தோண்டுவ
கள் புதைந்து போக வாய்ப்
னால், மண்புழுக்கள் போதி
உள்ள இடங்களில், மண்
கற்கள் அற்றதாயிருக்
கமக்காரனுக்குச் செய்யும்
இதுவுமொன்று)

**9) மான் உண்ணியின்
முகப்புத்தோற்றம்:-**

இந்த உண்ணியின்
மூஞ்சி மானின் தோலி
கொண்டு, துடைத் தெறி
நிலையில், பல நாள்கள
குருதியைக் குடிக்க மு
ணிகள் குருதியை உறுஞ்
ணிகள். பல தரப்பட்ட வி
ளுக்குமென்று உண்ணிக
இவை இனவிருத்தி
குருதி யுணவு பெறுவது
ஒரு பெண் உண்ணி சா
ஏழு வருடங்கள் வ
ஏதாவது வி
உரசிச்செல்லும்வரை நில
பூண்டுகளின் மேலோ கா
ஏதாவது விலங்கு உர சி
கொள்ளும், அதன்
வசதியான இடத்தில்
கடித்து முள் செறிந்த
புகுத்திப் பற்றிக் கொண
தொடர்ந்து குருதி
கொள்ளும். அதன் உ
பலூன் மாதிரிப் புடைக்
நாய் போன்றவற்றில் இ
உண்ணிகளை நீங்கள்
லாம்.) மேலும் குருதியை
முடியாதநிலை வரும்போது
விழுந்து, முட்டைகளை இடவா
உண்ணிகள் சாதாரணமாக
படுவதிலிருந்து இந்த ஏற்பாடு
வசதியானது என்பது புலப்பட

**என்ன வாசகர்களே! ஒவ்வொ
துக்குமுரிய தகவல்களை
கொண்டு படத்தைப் புரிந்து**

# ணுக்குக்காட்டியின் கீழ்

வலை பின்னும் சிலந்தி. எட்டுக்
லிருந்தும் பார்வை ஏதோ
கண்கள் சிறியவை. தனிக் கண்
க்கும் இருளுக்குமிடையேயுள்ள
டை உணர்த்த உதவும். சிலந்தி
வும் பலமானது; ஒத்த அளவுள்ள
(STEEL) நூலைக் காட்டிலும்
ல் பலமானது.

## பாகம் III

**வட்டப்புழு (NEMATODE)**
**யில் செல்லும் சிற்றுண்ணியை**
**MITE) ஆராய்கின்றது:-**

ரு சதுர மீற்றர் மண்ணிலும்
ல்லியன் கணக்கான நுணுக்காட்
விலங்குகளில் இரண்டு அகஸ்
ச் சந்திக்கின்றன. மில்லியன்
, வளமுள்ள மண்ணில் வாழு
றந்த தாவர, விலங்குப் பொருள்
ணவாகக் கொண்டு பிரிந்தழிதல்
தவும், மண்ணில் தாவரங்க
வண்டிய போஷாக்கு கிடைக்க
சாதாரணமாக,மண்ணில், 30,000
சிற்றுண்ணிகள் காணப்படும்;
கை வட்டப்புழுக்கள் காணப்படும்.
சில ஒட்டுண்ணிகளாகவிருப்பத
வரங்களுக்கும் விலங்குகளுக்கும்
ரகளைத் தருவதுண்டு.


**ளயில் மண்புழுவின் முகப்புத்**
**:-**

வின் வாய்முன் (PROSTOMI-
த்தில் வட்டத்தட்டுப் போலத்தெரி
குதியானது, வளைதோண்ட உத
ண்புழு உக்கல்ல மண்ணுடன்
உணவாகக் கொண்டு கனிப்,
வட்டம் நிகழ்ப் பெருமளவில் உத
ள்ள மண்ணை வாய்மூலம் உட்
குதம் மூலம் கழித்து, கீழ் மண்
உதவும். மண் வளம்படுத்த
மண்புழுவின் தொகையைக்
மண்ணின் வளத்தை அறிந்து
டியும். மண்புழுக்கள் கற்களுக்
வளை தோண்டுவதனால், கற்
ந்து போக வாய்ப்புண்டு. அத
ண்புழுக்கள் போதிய அளவில்
டங்களில், மண் மேற்பரப்பில்
ள் அற்றதாயிருக்கும்(மண்புழு
காரனுக்குச் செய்யும் உதவியில்
மொன்று)


**மான் உண்ணியின் (TICK)**
**யுத்தோற்றம்:-**

உண்ணியின் முள்செறிந்த
மானின் தோலில் ஒட்டிக்
ண்டு, துடைத் தெறிய முடியாத
யில், பல நாள்களாக மானின்
யைக் குடிக்க முடியும். உண்
குருதியை உறுஞ்சும் ஒட்டுண்
. பல தரப்பட்ட விலங்கினங்க
மென்று உண்ணிகள் உண்டு.
இனவிருத்தி செய்யுமுன்
யுணவு பெறுவது அவசியம்.
பெண் உண்ணி சாதாரணமாக
வருடங்கள் வரை வாழும்.
து விலங்குகள்
செல்லும்வரை நிலத்திலோ புல்
களின் மேலோ காவலிருக்கும்.
விலங்கு உர சியதும் பற்றிக்
ளும். அதன் மேல் ஏறி,
ான இடத்தில் தோலைக்
முள் செறிந்த மூஞ்சியைப்
பற்றிக் கொண்டி ருக்கும்.
ர்ந்து குருதியை உட்
ளும். அதன் உடல் ஊதிய
மாதிரிப் புடைக்கும் (மாடு,
போன்றவற்றில் இந்நிலையில்
ிகளை நீங்கள் கண்டிருக்க
மேலும் குருதியை உறிஞ்ச
நிலை வரும்போது, உதிர்ந்து
ட்டைகளை இடவாரம்பிக் கும்.
ர் சாதாரணமாகக் காணப்
ந்து இந்த ஏற்பாடு எவ்வளவு
என்பது புலப்படும்.


**சகர்களே! ஒவ்வொரு படத்**
**தகவல்களை வைத்துக்**
**டத்தைப் புரிந்து கொள்ள**




நமக்கு நன்கு பரிச்சையமானவர். எட்டுக் கண்களினால் முளித்துப்பார்க்கின்றார்!



ஒருவரை இன்னொருவர் ஆராய்கின்றார்!



குகைப்பாதையா அல்லது அடுக்கு மாடிக் கட்டடங்களுக்குரிய வளைய மாடிப் படியா?



யாரின் வரவையோ எதிர்பார்த்துத் தவமி ருக்கின்றார்!

# இதுவும் காதலா?......

## கு.வி.நிஷாந்தன்

காலையில் எழுந்து காபிக்கு தண்ணீர் வைப்பதில் இருந்து கறவை மாட்டில் பால் கறக்கும் வரை எல்லாம் என் தலையில் தான். நிதானமாக வான் வீதியில் பூத்து நடைபயில்கின்ற சூரியனுக்கு இருக்கின்ற பொறுமை எனக்கில்லை. தம்பி, தங்கையின் பென்சில் சண்டை, பாட்டியின் புராணங்கள், எல்லாம் தாண்டி வாசலில் அம்மாவின் பரிதாபப் பார்வைக்குப் பதிலாகச் செலவுக்குப் பணம் கொடுத்து பஸ் ஏறி வேலைக்குப் போவதென்றால் சும்மாவா? எல்லாம் என் தலையெழுத்து. மூத்தபிள்ளையாகப் பிறந்து பாரத்தைச் சுமக்கிறன் ம்....இனி அங்க மனேஜர் நேரத்தைப் பார்த்து என்ன சொல்லுறாரோ?

மனப்போக்கைப் போலநடையை வேகப்படுத்தி பஸ்நிலையத்தில் நுழைந்திருப்பேன். கண்ணில் தெளிவாகப் பட்டான் அவன். 'ச்சா இண்டைக்கும் வந்திட்டான்'.

'உதுகளுக்கு வேற வேலையில்லை. ஒருநாள்... ஒரேஒருநாள்.... போனகிழமை.... அவள் என்ரை பிரண்ட் மாலதியின் கல்யாண வீட்டில் கதைச்சதுதான். அண்டையில் இருந்து ஒரு கிழமையாய் உதுல வந்து நிக்கிறதும் ஒருவழியல் சிரிப்பு சிரிப்பதுமாயக் காலம் போகுது. என்னத்தைச் செய்யம்...?'

என மனதில் வார்த்தைகளை அமிழ்த்திக் கொண்டு வேறுபக்கம் திரும்ப முயன்றேன்.

"என்ன கல்யாணி உந்த பஸ்ஸைக் காணேல்ல?" எனப் பேச்சுக் கொடுத்தபடி என் பஸ் நண்பி சுதா அருகில் வந்தாள்.

என் மனப்பரபரப்பு புரிந்துதான் என்னவோ நக்கலாக அவனை ஒரு முறை பார்த்துவிட்டு "என்னடி உன்ர மன்மதன் இண்டைக்கும் வந்திட்டார் போல" எனக் கிசுகிசுப்பாகக் காதருகே கேட்டாள்.

"சும்மா.. சும்மா.. உந்த விசர்க் கதை கதைக்காதை. நானே கோபத்தில நிக்கிறன். இன்னும் ஏத்தாதை". எனக் கோவிப்பதாய் பாவனை செய்தேன்.

"என்னடி என்னத்திற்கு இப்ப கோபிக்கிறாய்? அவனைப்பார்த்தா நல்லவனா இருக்கு. கொஞ்சம் பல்லு இரண்டு தள்ளியிருந்தாலும் வடிவான வாய். வாக்குக் கண்ணென்றாலும் வடிவான இமை. நல்ல பேர்சனாலிட்டி; கொஞ்சம் வழியல் லுக்.... அவ்வளவுதான்." எனச் சீண்டிப்பார்க்க முற்பட்டாள் சுதா.

"சுதா சும்மா உந்தப் பகிடியை விடு. நீஎட்பவும் உப்பிடித்தான். எனக்கு இப்படியெல்லாம் எண்ணமில்லை". என ஒரே தலையடியில் அவள் வார்த்தைகளை அமுங்கவைத்தேன்.

புழுதிக்காடாய் வந்து நின்ற பஸ்ஸில் ஏறிக்கொண்டேன். ஒருமுறை அவனைப் பார்த்தேன். சுதா சொன்னது சரியாகத்தான் இருந்தது. இருந்தும் அவனின் பரிதாபமான பார்வை ஏதோ ஒன்றைத் தொலைத்துவிட்டுத் தேடுபவன்போல இருந்தது.

அலுவலக வேலைகள், மனேஜரின் ஜொள்ளுகள், அவ்வப்போது காற்றாய் வந்து போகின்ற • கிசுகிசு சமாச்சாரங்களுடன் வேலைநேரம் ஓடியது. மாலையில் ஓய்வாகக் கதிரையில் அமர்ந்தபோதுதான் அவன் ஞாபக முட்கள் குத்தத் தொடங்கின.

'என்ன இது எனக்கும் மற்றவை போல, அந்தப் படங்களில் வருவது போல ஏதாவது ஆச்சோ சீ... என்ன இது'. என என்னையே நொந்து கொண்டேன்.

குரங்கு வைத்தியம் செய்தது போல எதை மறக்க நினைக்கிறோமோ அதுவே மூஞ்சையை நீட்டிக் கொண்டு நின்றது. இந்த ஒரு கிழமையாக அவன் முகத்தைப் பார்த்துப் பழகி அவன் அறிமுகம் நன்றாகவே மனதில் பதிந்திருந்தது. அவன் அப்பாவித்தனத்தில் ஒரு பிடிப்புக்கூட வந்ததெனலாம். இருந்தும்.....

'நான் என்ன செய்யமுடியும் இதுக்கு?' என மனம் ஏதேதோ கற்பனையில் உழைந்தது. விடை காண முடியாத பந்தாய் மனம் மோதி மோதித் திரும்பியது.

"அக்கா துரதர்சன்ல படம் போகுது. பாக்கேல்லையே?" எனத் தம்பி உலுக்கியபோதுதான் மீண்டும் பூமிக்கு வந்தேன்.

என்ன அதிசயம் என் மனநிலைக்கேற்பதான் படமும் இருந்தது! ஒரு கிராமத்துப் பெண்ணை ஒரு நல்லவன் பல போராட்டங்கள் மத்தியில் வாழவைப்பதாகப் படம் முடிந்திருந்தது. அதிலும் இப்படித்தான் அவர்கள் கண்களால் பார்த்தே காதல் செய்வதாக இருந்தது.

தூங்கப் போனேன். தூக்கத்தை எட்டிப்பிடிக்கப் படாதபாடு படவேண்டியதாகி விட்டது. இன்பக் கனவுகள் சினிமாவைப் போன்றே நம்பமுடியாதவையாக இருந்தன.

காலையில் சீக்கிரமே எழுந்து அளவுக்கதிகமாகவே அலங்கரித்துக் கொண்டேன். சிநேகிதியின் பேச்சு, நேற்றைய சினிமாப் படம் ஞாபகத்தில் ஓடியது. வேகமாக நடந்தேன். பஸ் தரிப்பு நிலையத்தை அடையும் போதே அவனுடைய உருவம் தெரியத் தொடங் கியது. கால்கள் பின்னின; மனம் படபடத்தது. ஆயிரம் பட்டாம் பூச்சிகள் சிறகடித்தன. அவனைப் பார்த்து ஒருமுறை - ஒரேஒருமுறை - சிரிப்பதாக முடிவெடுத்தேன். என்னையறியாமல் செயற்படுத்தியும் விட்டேன். அவ்வளவுதான் அவன் அருகில் வந்துவிட்டான். நான் எதிர்பார்த்ததுதான். எனினும் தயக்கமாக இருந்தது.

"உங்களிட்டை... ஒண்டு கேட்டால் கோபிக்க மாட்டீங்களோ?" என அசடு வழியக் கேட்டான்.

"ம் சொல்லுங்கோ"

"இல்ல நீங்க அற்பத்தனமாக நினைப்பீங்களோ தெரியாது" என என் மனத்துடிப்பை மேலும் அதிகரித்தான்.

"என்னாலையும் உங்கட பிரச்சினையைப் புரிந்துகொள்ளமுடியுது" என வசனத்தை முடிக்காமல் நிறுத்தினேன்.

"தெரிஞ்சுமா இவ்வளவு நாளும் பேசாம இருந்தீங்க" என ஓர் அசட்டுத்தனமாகச் சிரித்தான்.

"எதுக்கும் ஒரு நேரம் வரவேணும் இல்லையா?" என நானும் ஏதோ பேசினேன்.

"இந்த ஒரு கிழமையாய் நான் சரியாய்த் தவிச்சுப் போயிட்டன். ஒண்டுமே எழுதக்கூட முடியவில்லை. ஒபிஸ் வேலைகளைச் சரியாகச் செய்யேல்ல. நெடுகவும் அதன் நினைப்புத் தான்...." என என் உள்ளத்தைச் செதுக்கும் காதல் வார்த்தைகளை வீசினான். இதையெல்லாம் சினிமாவில் கண்ட எனக்கு நிஜமாக நிகழ்வது அதிசயமாக இருந்தது.

நானும் விடவில்லை பதிலுக்குக் காதல் வார்த்தைகளை வீசத்தொடங்கினேன்.

"உங்கட ஏக்கமும் தவிப்பும் நேற்றுத்தான் எனக்குப் புரிந்தது" என்றேன். அவன் ஊடலாகப் பார்த்தது போல இருந்தது.

"ஏன் முதல்லையே புரிந்திருக்கக் கூடாதா?" எனப் புன்னகை செய்தான்.எம் காதலைப் பிரிக்க வந்த விதி போல் புழுதிக்கூடலாய் வந்து நின்ற பஸ்ஸைக் காணவும்.....


"நாளைக்கு.. நாளைக்கு.. சந்திப்பம்" எனப்புறப்பட ஆயத்தமான என்னை அவன் இறுகிய பார்வை வழிமறித்தது.

"மிஸ், கல்யாணி! என்னால இதுக்கு மிஞ்சியும் பொறுக்க முடியாது" என உறுதியாகக் கூறிய பதில் என்னைச் சற்றுத் தடுமாற வைத்தது.

"எ..ன்..ன.. இப்ப என்ன செய்யிறது?" என வார்த்தை தடுமாறிய என் வார்த்தைகளை வழிமறித்து...

"இஞ்ச பாருங்கோ மிஸ். எனக்கு அந்தப் பேனையென்றால் உசிர். என் வைவ் எனக்கு அனிவேசறிக்கு வாங்கித் தந்தது. நீங்க அண்டைக்கு மாலதியின் கல்யாண வீட்டில் பிரசண்டுக்குப் பெயர் எழுத அவதிப்பட்டபோது தந்தது. இன்னும் என்னட்ட திருப்பித் தரேல்ல. திருப்பியும் சொல்லுறன் உங்களுக்கு இது அற்பத்தனமாக இருந்தாலும் எனக்கு அதென்றால் உசிர். ப்ளீஸ்... திருப்பித்தந்திடுங்க. என்னால இனியும் அலைய முடியாது!"எனச் சற்றுக் கோபமாகவே பொரிந்து தள்ளினான். என் கனவுக் கோட்டைகள், சிநேகிதியின் வார்த்தைகள், நேற்றைய சினிமாப்படம் அனைத்தும் உடைந்து சுக்குநூறாக ஒரு நிமிடம் பிரமை பிடித்து நின்றேன். கைகளைக் கைப்பையில் விட்டுத் தடவியபோது அந்த ஒருகிழமை ஒருகிழமை தொடர் கதையின் நாயகன் - "ஹீரோ" பென் வெளிப்பட்டான்.

அப்பேனையைப் பார்த்ததும் "தாங்ஸ்... தாங்ஸ்" என ஒரே பிடுங்கலாய்ப் பிடுங்கிக் கொண்டு ஓடினான் அந்தக் கற்பனைக் காதலன். *





## உங்கள் கவிதைகள்



நிரந்தர உன் இருப்பை
நீ இந்த மண்ணில்
நிறுவும் வரை
நீ நீயென்று இனங்காட்ட
அடையாள அட்டைகள்
தினம் சுமக்கும்
நடைப்பிணந்தான் நீ

- கவரி -

நில்!
கவனி!
முன்னையதிலும்...
பின்னையதிலும்...
முகங்களில்
முரண்பாடு காணப்படுவதால்
நீ! பயங்கரவாதி...?!

- ப.பிறேமலதா -

தடைமுகாமில் தரித்திடு
இல்லையேல்
ஆக்கிரமிப்பாளன் முன்
உன் அடையாளம் கூட
செல்லுபடியற்றதாகும்!

- அருணா -

உரிமைகளைப் பறித்துக் கொண்டு
அடையாள அட்டையும்
குடும்ப அட்டையும்
தந்தார்கள்!
கூப்பன் 'காட்'டை வாழ்க்கையாக்கி
குடும்பம் நடத்திப் பார்த்தேன்
முடியவில்லை...
அட்டைகளைப் பறித்துவிட்டு
என்னை
ஆழ்குளிக்குள் போட்டனர்!
அதனால்
அழிந்து போனது
என் குடும்பம்!

- தமிழ்த்தாடி -
ஈச்சமோட்டை

உயிர் இல்லா
உருவ அட்டை
சிங்கள அரசால்
வழங்கப்பட்ட
தமிழனின் உறுதி!

- சிவராசா -
மத்தொனி

இந்நாட்டில்
எனக்கு....
வெவ்வேறு
அடையாள அட்டைகள்
வைத்திருப்பதற்கு
சுதந்திரம் உண்டு!

- ந.அர்ச்சனா -
சங்கத்தானை

# மௌனமொழி

இறைவன்
பாவிகளின்
பாவங்களுக்காக
சிலுவையைச்
சுமந்தார்!
இவன் -
உடலில் உயிரைச்
சுமந்திருப்பதற்காக
அடையாள அட்டைகளைச்
சுமக்கின்றான்!

- க. இந்திரகுமார் -
கொடிகாமம்

காக்க வேண்டும்,
'I.C'யை.
நோக்க வேண்டும்.
'STOP'பை.
நடக்க வேண்டும்
சாவடியில் - இல்லையெனில்
சுமக்க வேண்டும்,
'காவடி'யை!

- எஸ்.வீ.மாலா -
சங்கத்தானை

தடைகள்.....
தகர்த்தெறியப்படும் போது - இத்
'தகடு'களுக்கு இங்கென்ன வேலை?
காலம் பதில் சொல்லும்,
காத்திருப்போம்...
அதுவரை!

- எஸ்.வி.எம் -

நிறுத்து!
ஐ.சி இருக்கா?
இல்லையா?
டேய்!
பயங்கரவாதி..!

- கி.அ. தில்லைதாசன் -

அடையாள அட்டை சுமப்பவன்
இருந்து எழும்புகிறான்
ஆயுதம் சுமப்பவன்
இருத்தி எழுப்புகிறான்

- கதா -
யாழ்.பல்கலைக்கழகம்

மனிதனே நில்!
மரணித்துப் போவதற்காய்
மறியலுக்குள் தடம் பதிக்கிறாய்
அடையாள அட்டைகள் பல என்று
அலட்சியம் செய்யாதே!
அடையாளம் தெரியாமல்
அடிபட்டுப் போய்விடுவாய்!

- ஜெயக்குமார் -
நெடுந்தீவு - 2

இளைஞனே!
தடைகள் தாண்டும் போது
தடவிப்பார்த்திடு அடையாள அட்டையை!
தவறினால் தவிடு பொடி உன்
தன்மான வாழ்க்கை!
தயங்காதே, தானைத் தமிழன்
தருவான் தமிழ்த்தேசம்!

- வெ.ஜெனி -
யாழ் பல்கலைக்கழகம்.

நாங்கள்
உடைகளைத் துறந்தும்
பயணம் செய்வோம்!
இடையில்.........
அடையாள அட்டை
இருக்கும் என்றால்!

- கு.வி.நிஷாந்தன் -

ஏ வாலிபனே......
அடையாளஅட்டை
தமிழன் வாழ்வை அடிபணியவைத்த
அறிமுக அட்டை - அதிலும்
தேசிய, விசேட அடையாளஅட்டை
தமிழனை ஆண்ட மண்ணில்
அடிக்கடி நிற்க (STOP) வைத்த அட்டை -
முட்கம்பிகளுக்குள் முடங்க வைத்த அட்டை

- நிஷங்கன் -
கண்டுக்குளி

தேசியத்தைக் காட்ட ஓர்அட்டை
சாதியத்தைத் தெரிந்து கொள்ள விசேடஅட்டை
செய்தொழில் விளம்ப வேறோர் அட்டை
இத்தனையும் சுமந்து
காவலரண் முன்சென்றபோது
'நில்' என்ற குரல் கேட்டு
நிலைகுலைந்து உடல் நடுங்கி
என்னை நானே அடையாளப்படுத்தினேன்
தமிழன் என்று!

- கவிதா ஜெயப்பிரகாசம் -

புலிக்கு மட்டுமா மீசை இருக்கின்றது
பூனைக்கும்தான் இருக்கிறது
பயல்களிடம் மட்டுமா இது இருக்கிறது
புயல்களிடம்தான் இருக்கிறது.

- வளாகன் -

வருகிற விளக்கீட்டோடு
விசேட அட்டைக்கு தேவையிராது
அடுத்த ஐந்தாவது விளக்கீட்டோடு
அடுத்த நாட்டு அட்டைக்குத் தேவையிராது

- மண்ணின் மைந்தன் -

புதுமையின் படியில்
புரட்சி மனிதனின் கண்டுபிடிப்பு!
இன்றுநெற், கணனி
ஈமெயில், இயந்திரமனிதன்.
இதோ இங்கு
இன்னோர் அதிசயம்
மனிதனை மனிதன் கண்டுபிடிக்க
வெறும் அடையாள அட்டை!

- மானிப்பூர் ரட்ணேஸ் -

அப்பாவித்தமிழ்மகனே - இது
உனக்குமட்டும் தனியான வேதனைஇல்லை
மனிதனை மனிதன்
அடையாளங்கண்டுகொள்ள
ஆவணங்கள் வேண்டப்படும்
'மனிதாபிமானம்' என்பது
மரணித்துவிட்டபூமியில்
அச்சக்காற்றைச் சுவாசிக்கும்
எங்களுக்கெல்லாம்
பொதுவான வேதனை!
இந்த மண்ணில் நீ உனது
இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ள
'அடையாளங்கள் அவசியம்'
என்பதைக் கனவிற்கூட
மறந்துவிடாதே!

- இளம்பரிதி -

நான் குழந்தை
எனக்கு இப்போ
அடையாள அட்டை
தேவையில்லையாம்..
எனது அம்மாவுக்கும்
அப்பாவுக்கும்
அடையாள அட்டை உண்டு.
இருப்பினும் அவர்கள்
கொல்லப்படலாம்.
அப்போ நான்
பனை ஊரில் பிழைத்த
பாலகன் போல....

- ர.அபிக்குட்டி -
கச்சேரியடி

## மௌனமொழி — 83



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது. இதனை வரைந்தவர் மானிப்பூர் ரட்ணேஸ்

தன்மானத் தமிழனின்
தற்போதைய வாழ்வைத்
தத்ருபமாக எடுத்தியம்பும்
தரமான ஓவியமிது....

- தி. மஞ்சு -
கோப்பாய்

தமிழா......
தேசிய அட்டை தேவையில்லை...
விசேட அட்டை வீணிங்கே...
அராஜகத்திற்கெதிராய் நீ...
ஆயுதம் ஏந்தும் வரை....
சந்தியில் நீ தொங்குவது
சத்தியமாய் உண்மையடா!

- சிலோ -

அடையாள அட்டைகளின்றி
அடியெடுத்து வைத்தால்...
சோதனையின் போது - நீ
வேதனையில் மடிவாய்
உயிரினு மினிய அட்டைகளே!
உங்களைக் காப்பதே யெம்பணி.

- இனுவை றொட்றிக் -

பெப்சி கோலாவுக்கும்
படையப்பாவுக்குமாக
முந்தை நிலை மறந்து
இந்நிலையேற்ற தமிழனே!
மீண்டும் உணர்வு பெற
பொங்குகின்ற அலைகளுக்குள்
புகுந்து மூழ்கி விடு!

- பிரசன்னன் -




# என் பிரிய பூமிக்காக....

ச.குமுதினி

செந்நிறச் சுழல் விளக்குக ளால் எல்லையிடப்பட்ட நாசகாரிக ளின் பிரதேசத்தைக் கண்டுபிடித்ததி லிருந்து நிகழ்வுகள் மிகத் துரிதமாக நடந்தேறிவிட்டன! அந்த இளம் விஞ் ஞானிகள் குழுவே எதிர்பாராதளவு விரைவாக அவர்களால் அந்த மர்ம மான காட்டுச் சூழலில் இரகசியங் கள் இலகுவாகக் கண்டுபிடிக்கப் பட்டு விட்டன.

அன்று, அவர்கள் முகாமிட்டுத் தங்கியிருந்த ஏழாவதுநாளின் சாயங் காலம்... தற்காலிக முகாமாக உரு வாகியிருந்த ஊர்தி நிற்கிற இடத் திற்கு இருள் கவியமுன்னரே திரும்பி விடவேண்டுமென்று நிக்கலஸ் சொல் லியிருந்தான். அன்று அவர்கள் தம் முடைய பழைய இருப்பிடத்திற்குத் திரும்ப வேண்டுமெனவும் அவன் சொல்லியிருந்தான். தலைமையகத் திற்கு இதுவரை பெற்ற தகவல்கள் அனுப்பவேண்டும். அங்கிருந்து கிடைக்கும் அறிவுறுத்தல்களின் படியே தொடர்ந்து செயற்பட முடி யும்.

சிசிலியாவும் இவானும் வந்து விட்டிருந்தார்கள். இவானின் முகத் தில் உற்சாகமான மகிழ்ச்சி நிறைந் திருந்தது.

"ஏறத்தாழ எம்பணியில் மிக அனேகமானவற்றை நிறைவு செய்து விட்டோம் இல்லையா சிசிலியா?"

"நாசகாரிகளின் பூமியிலான இருப் பிடம், அவர்களின் செயற்பாடுகள், அவர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிய தகவல்கள் எல்லாம் பெற்று விட்டோம் என்பது மகிழ்ச்சிக்குரியது தான். ஆனாலும்..."

"என்ன சிசிலியா சொல்ல வருகி றாய்?"

"ஆனாலும் நிரந்தரமாய் அவர்க ளின் இந்த இருப்பிடத்தை அழித்து, நாசகாரிகளின் பூமிக்கான வரு கையை நிறுத்திய பின்புதானே எமது பணி பூரணமாகும்....."

"உண்மைதான். ஆனாலும் தலை மையகம் இதுவரை எமக்கிட்ட கட்ட ளைகளின்படி எமது பணி ஓரளவு நிறைவேறிவிட்டது. நாசகாரிகளின் நேரடியான எதிர்ப்பில் ஈடுபட வேண் டாம் என எமக்கு அறிவுறுத்தப்பட் டிருக்கிறது"

"400 மீற்றர் தூரத்தில்எழும் எம் முடைய எண்ண அலைகளை வைத்து அவர்கள் எம்மை இனங் கண்டு விடும்போது எப்படி நாம் அவர்களை நெருங்கவோ எதிர்க் கவோ முடியும்? நாம் இதுவரை தக வல்களைச் சேகரித்து கூட 400 மீற் றர் தூரத்திற்கு இப்பாலே இருந்து தானே..."

"ஒன்றைக் கவனித்தாயா சிசி லியா? செந்நிறச் சுழல் விளக்குக ளால் சூழப்பட்ட அந்த 1.5 சதுரக் கிலோமீற்றர் வரையான அவர்களின் இருப்பிடத்தில் அவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவெனச் செய் துள்ள ஏற்பாடுகள் மிகக் குறைவு..."

"ஆம் அவர்கள் எண்ண அலைக ளைக் கண்டறிந்து மனிதர்களை ஒழிக்கவல்ல தமது ஆற்றலையே தம்முடைய மிகப்பெரிய ஆயுதமாய்க் கருதுகிறார்கள் தம்முடைய அந்த ஆற்றலை மீறி மனிதர்களால் எந்த ஆபத்தையும் தமக்கு விளைக்க முடியாது எனக் கருதுவதாலேயே ஏனைய பாதுகாப்பு ஏற்பாடுகளைக் குறைவாகச் செய்கின்றார்களோ தெரியவில்லை..."

"அவ்வாறெனின்.... நாங்கள் எப் படி அவர்களை நெருங்கவோ எதிர்க் கவோ முடியும்......?"

"எனக்கும் புரியவில்லை.... ஆனா லும் சாதாரண மனிதனுடைய எண் ணங்களின் அதிர்வெண்ணை மட்டும் தான் அவர்களால் உணரமுடியும். அதை விட அதிகமாயோ குறை வாயோ உள்ள அதிர்வெண்ணில் சிந் திப்பதற்கு எம்மால் முடியுமானால் அவர்களை எதிர்ப்பது மிகப் பெரிய காரியமே அல்ல.."

"இது சாத்தியமா என்பது எனக் குத் தோன்றவில்லை.."

"இதைவிட வேறு எந்த விதத்தி லும் அவர்களின் இருப்பிடத்தை நெருங்க முடியுமென்றும் எனக்குத் தெரியவில்லை...." சிசிலியா சொல் லிக்கொண்டிருக்கும் போதே நிக்க லஸ் வந்து சேர்ந்தான்.

"ஏதாவது தகவல் உண்டா நிக் கலஸ்.....?"

"இல்லை இவான்... இதுவரை பெற்ற தகவல்களைவிட எதுவும் புதி தாய் இல்லை...."

அவர்கள் ஆயத்தமான சில நிமி டங்களில் ஊர்தி புறப்படத் தொடங் கியது.

"தலைமையகத்திலிருந்து அடுத்த உத்தரவு வந்த பிறகே நாம் மீண்டும் இங்கு வர முடியும்..." நிக்கலஸ் யோசனையில் ஆழ்ந்தபடி சொன் னான்.

"நாம் எதிர்பார்த்தபடி அந்த மர்ம மான ஊர்தியில் வந்தவர்கள் பற் றிய... தகவல் ஏதும் மேலதிகமாகக் கிடைக்கவில்லை...."

"ஆம்!... அவர்கள் யாராயிருக்கும் என்பதனையும் ஊகிக்க முடிய வில்லை"

முன்னிரவுப் பொழுதில் ஊர்தி அவர்களின் இருப்பிடத்தை அடைந் தது.

இரவு உணவின் பின் அவர்கள் மூவரும் தாம் தனித்தனியே பெற்ற தகவல்களை இணைத்து முழுத் தகவற் குறிப்பாக்கியபின் நிக்கலஸ் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டான். வழமைக்கு மாறாக அன்று தலைவரின் நேரடித் தொடர்பு கிடைத்தது அவர்களை மகிழ்வான ஆச்சரியத்துக்கு உள்ளாக்கியது.

"நிக்கலஸ்... அவர்களின் இருப்பி டம் பற்றிய தகவல்கள் இப்போது சொல்ல முடியுமா.....?"

"அவர்களின் பிரதான இருப்பிடத் திலிருந்து ஏறத்தாழ 400 மீற்றர் அப் பால் இருந்து பகலும் இரவுமாக ஏழு நாள்கள் அவதானித்ததன்படி.... அங்கே நிரந்தரமாய் ஏறத்தாழ இரு பது பேர்வரை நாசகாரிகள் தங்கியி ருப்பதாகத் தெரிகிறது. வெண்க லத்தை ஒத்த தோற்றமுள்ள உலோ கத்தினால் அவர்கள் இருப்பிடம் அமைந்துள்ளதாய்த்தெரிகிறது. மேலும் ஏதோ ஒரு கட்டளைக்குக் கீழ்ப் படிந்து நடப்பது போல அவர்கள் ஒரு நேர ஒழுங்கில் ஒரேமாதிரியான கட்டளைகளைத் தினமும் செய்து வருவதாகத் தெரிகிறது...."

"அவர்களின் இந்த இருப்பிடம் அமைந்திருப்பதன் நோக்கம் என் னவாக இருக்கும் என நினைக்கி றாய் நிக்கலஸ்?"

"அவர்களின் பூமியிலான செயற் பாட்டை ஒழுங்குபடுத்தும் ஒரு நிலையமாகவே அது தொழிற்படுகி றது. வில்லை அமைப்பு உயிரிக ளைப் புதைக்கின்ற காட்டுப் பகுதி கள் பற்றிய குறிப்புகள், அவற்றின் வளர்ச்சிக் காலங்கள், அவை பூரண வளர்ச்சியுற்றுள்ளபோது அவற்றைச் சேகரித்தல் முதலிய கால ஒழுங்கு களை இவர்கள் நிரற்படுத்தித் தமது கிரகத்துக்கு அறிவிக்கின்றார்கள். இத் தகவல்களுக்கேற்பவே நாசகாரிக ளின் ஊர்தி பூமிக்கு வருவதாகத் தோன்றுகிறது...."

நிக்கலஸ் அவர்களின் இருப்பிடம் பற்றிய தகவல்களை விவரித்தான். எந்த எந்த இடங்களில் நாசகாரிக ளின் நடமாட்டம் அதிகமாக உண்டு என்பதை விவரமாகக் கூறினான். சில மணி நேரங்கள் உரையாடிய பின் விடைபெறும் நேரத்தில் நிக்கலஸ் மேற்கொண்டு தங்களது பணி என்ன வெனக் கேட்டான்.

"உங்களுக்கு இடப்பட்ட கட்ட ளைகளைச் செவ்வனே நிறைவேற்றி யிருக்கிறீர்கள். பூமி காக்கும் நிலை யத்தின் மனமார்ந்த பாராட்டுக்கள் உங்களுக்கு.... இனி தலைமையகத் தின் அடுத்த கட்டளை கிடைக்கும் வரை நீங்கள் அங்கு நடைபெறும் நிகழ்வுகளினை அவதானித்து இங்கு அனுப்புவது தவிர எந்தச் செயலி லும் ஈடுபடக்கூடாது. தற்காப்பு நட வடிக்கைகளைத் தவிர....."

"..........."

"இனி "மேய்குப்" பிரதேசத்தில் வெறும் பார்வையாளர்களாக மட் டுமே நீங்கள் இருக்க முடியும்.... எனது அடுத்த கட்டளை கிடைக்கும் வரை....." குரலில் அசாதாரணமாக கண்டிப்புத் தெரிந்தது.

"அப்படியே செய்கிறோம்...."

"விடை பெறுகின்றேன் நிக்கலஸ். என் இந்த அறிவுறுத்தலை உன் நண்பர்களுக்கும் தெரியப்படுத்து...."

நிக்கலஸ் விடைபெற்று வெளியே வந்தபோது சிசிலியாவும் இவானும் அவனுக்காய் காத்திருந்தார்கள்... நிக்கலஸ் உரையாடல் பற்றிய தக வல்களைச் சொன்னான்.

"ஏன் நிக்கிலஸ்.... அடுத்து என்ன நிகழப்போகிறது என எதிர்பார்க்கி றாய்?"

"........."

"நாம் வெறும் பார்வையாளர்க ளாய் மட்டும் இருப்பதெனின் அடுத்து என்ன நிகழப் போகிறது....?" இவா னின் கேள்விக்கு நிக்கலஸ் ஒரு கணம் மௌனமாய்இருந்தான். பிறகு யோசனையில் ஆழ்ந்த குரலில் சொன்னான்......

"அடுத்து என்ன நிகழப் போகி றது....?" மூவருக்கும் பதில் தெரியாத அந்தக் கேள்வி காற்றில் தவழ்ந்து கரைந்து போனது.

* * *

யூலியனுக்குக் களைப்பாய் இருந் தது. மிகச் சோர்வாய் விழிகளை மூடிப் படுத்திருக்க வேண்டும் போலி ருந்தது. ஆனால் அது முடியாது. அந்த மனிதன் இன்னும் சிறிது நேரத்தில்வந்து விடுவான். "விரை வாய்ப் புறப்படு" என்று துரிதப்படுத் துவான்.

அவன் பொல்லாதவன் என்று சொல்வதற்குமில்லை. யூலியனுக்கு விருப்பமான உணவுப்பண்டங்களை கொண்டு வருவான். சித்திரப் படங் கள் கொண்டு வந்து தருவான். சில வேளைகளில் யூலியனோடு சேர்ந்து விளையாட வருவதுமுண்டு. எல்லாம் சில வேளைகளுக்கு மட்டும்தான். அப்போதெல்லாம் சின்னப் புன்னகை யோடு யூலியனோடு பேசுவான்.

மற்ற வேளைகளிலோ அவன் முகம் அசாதாரணமான இறுக்கமு டையதாய், புன்னகை மறந்ததாய் இருக்கும். நட்புணர்வு காணாமற் போயிருக்கும். அந்த வேளைகளில் யூலியன், அவன் சொல்வதைச் செய்தே ஆகவேண்டும்.

கடந்த சில நாள்களாய் ஓய்வு என்பதே இல்லை. விடியற் பொழுதி லேயே ஊர்தியுடன் வந்துவிடுவான்... பிறகு தொடர்ந்து பயணம்தான்.... மனிதர்கள் இல்லாத வெறும். வெற் றுப் பாதைகளூடு ஊர்தி சென்று அடர் வனாந்தரத்துள் நுழையும்... மரங்கள்... மரங்கள்... பச்சையாய் பழுப்பாய்... எங்கு நோக்கினும்.

யூலியன் எதுவும் கேட்பதில்லை. தன் கேள்விகளுக்கு அந்த மனிதன் பதில் சொல்லமாட்டான் என்பது அவ னுக்குத் தெரியும். 'என்ன? எதற்காக? ஏன் செய்கிறேன் இவற்றையெல் லாம்?' என்று அவனுள் அடிக்கடி கேள்வி எழுகிறது. ஆனாலும் தன் செயல்களை தன்னால் மீறமுடியாத வாறு தான் ஒரு கட்டளைக்குள் பணிந்திருப்பது ஏன் என்பது அவ னுக்குப் புரியவில்லை.

வாசலில் ஊர்தி வந்து நிற்கும் ஓசை கேட்டது. யூலியன் எழுந்து வாசலருகே சென்றான்.

"போவதற்குத் தயாராகி விட் டாயா யூலியன்....?"

"........." மௌனமாய் ஊர்தியை நோக்கி வந்தான் யூலியன். எதுவும் பேசாமல் உள்ளே ஏறி அமர்ந்து கொண்டான். எதுவும் பேசவிரும்பாத வன் போல கைகளுள் முகத்தைப் புதைத்துக் கண்களை மூடினான். அவனும் எதுவும் சொல்லாமல் ஏறி உட்கார ஊர்தி புறப்பட்டது. நீண்ட நெடுந்தூரப் பயணம். சில மணித்தி யாலங்கள் கழிந்திருந்தன. யூலியன் களைத்துச் சோர்ந்திருந்தான்.

"யூலியன்.... ஏதாவது சாப்பிடப் போகிறாயா?"

"இல்லை...." குரல் நலிந்திருந் தது. நீலவிழிகளைச் சோர்வாய் இமைகள் மூடியிருந்தன.

"இன்னும் கொஞ்ச நேரத்தில் சென்றுவிடலாம் யூலியன்..." அவன் சொல்லிச் சிறிது நேரத்தில் ஊர்தி வேகங் குறைத்து ஓய்வடைந்தது.

"யூலியன் இறங்கி வா...." அவன் சொல்ல யூலியன் இறங்கினான். சூழ லில் கண் பதித்தபோது காட்டின் நடுவேயிருந்த, மரங்கள் குறைந்த அந்தப்பகுதி ஆச்சரியம் தந்தது.

இன்னும் சற்றுத் தூரே... வெண் ணிற ஒளி தெரிகின்றதாய் நிமிர்ந்து நின்ற, பளபளப்பான உலோகம் போன்றதான தோற்றமுள்ள சின்னச் சின்னக் கூம்பு வடிவான இருப்பிடங் கள் தெரிந்தன. யூலியனுள் ஆச்சரி யம் பிறந்தது. அந்த மனிதனை நிமிர்ந்து பார்த்தான்.

"இன்னும் சில நிமிடங்களில் உனக்குக் கட்டளைகள் கிடைக் கும்... அதன்படி நீ செய்யவேண்டும் யூலியன்..."

"................"

அவன் சொல்லிச் சில நிமிடங் கள் கழிந்திருக்கும்... யூலியனுக்குத் தூக்க மயக்கம் தன்னைத் தழுவுவ தாய்த் தோன்றிற்று..... கால்கள் தளர்ந்து மடிய மெல்ல மண்ணிற் சரிந்தான். அவன் விழிகளுள் நீல ஒளி பரவத் தொடங்கிற்று.....

(தொடரும்)

# ஆசை வெட்கமறியும்

சி.பிரணவன்
(மீசாலை)

அந்தச் சிரிப்பு ஹெட்மாஸ்டர் அம்பலவாணரின் இதயத்தைக் கசக்கி, உயிர்க்குருத்தை முறித் தது. கிண்கிணி போன்ற அந்தச் சிரிப்புக்காக அவர் உள்ளம் ஏங்கித் தவிக்காத நிமிடங்கள் மிகக்குறைவு. அவள் தன் மெல்லுதடுகளைத் திறந்து வெண்பற்கள் பளீ ரிட மென்மையாகச் சிரிக்கும் போது கன்னத்தில் ஓடிச் சுழிக்கும் அந்தக் குழிவு...

ஆகா... என்ன சிரிப்பு!

பார்த்துக் கொண்டே மணிக்கணக்கில் இருக்க லாம் போலத் தோன்றும் - அவள் சிரிக்கும்போது மட் டும். அவள் சிரிக்கும் போது அந்தத் தாளத்திற்கேற்றாற் போலவேஅசையும் - இல்லை இல்லை நடனமிடும் - அந் தக் காது ஜிமிக்கிகள்; நெற் றியில் விழும் கூந்தல் கற் றைகள் - தெவிட்டாத காட் சிதான். மனிதன் ஒவ்வொரு வினாடியும் இரசிகனாக இருந்து சாகவேண்டும் என் பது அவர் கருத்து. ஆரம் பத்தில் இயற்கையை இர சித்தவர் இப்போது இளம் பெண் ஒருத்தியின் அங்க அசைவுகளுக்கும், லாவண் யத்திற்கும்... இரசிகனாகிப் போனது என்னமோ உண்மைதான்.

அந்தச் சிரிப்பு அவர் உள்ளத் தில் அழகொளிரும் மோகனக் கோலங்கள் பல தீட்டி, அவர் மனத் திரையில் நிழலாக, தவிர்க்க இய லாது வந்து விழுவது அவர் மனை வியின் உருவந்தான். அவரின்



மனைவிக்கும் சிரிக்கும்போது கன் னத்தில் அப்படி ஒருகுழிவு.

அவள் ஒருதடவை சிரித்துவிட் டால் மறுதடவையும் சிரிக்கமாட் டாளா என்று அவர் இதயம் ஏங்கும். யார் யாரோடெல்லாம் பேசி குலுங் கக் குலுங்கச் சிரிக்கும் அவள் தன் னைப் பார்த்துச் சிரிக்கமாட்டாளா என்று அவர் இதயம் ஏங்கும். இன்று என்றுமில்லாத புதுமையாக அவ ரைப் பார்த்து அவள் வீசிய அந்தச் சிரிப்பு...

பொங்கியெழுந்த அவர் கோபா வேசம் அந்தச் சிரிப்பிலேயே அடங்கி, நிமிர்ந்து நின்றஉடல் கூனிக்குறுகி, மூர்க்கமாக நிமிர்ந்து நின்ற பிரம்பு நடுங்கிச் சரிந்தது.

* * *

அழுது கண்ணீர் விட்டுக் கொண்டு நின்ற மாணவியைப் பார்த் துத் திரும்பவும் விசாரணையைத் தொடங்கினார்.

"என்ன பிள்ளை நடந்தது?"

அவர் குரல் நைந்துபோய் கீன மாக, அவருக்கே அன்னியோன்னி யம் இன்றிப்பட்டது.

"இவன் சேர்... என்னைப் பகிடி பண்ணிச் சேட்டை விடுறான்"

"எண்ணண்டு பகிடி பண்ணு றான்.."

"..........."

"ம், சொல்லு....."

"........."

"பேசாமல் நிண்டால் எனக்கென் னண்டு தெரியும்? சொல்லு கெதி யாய்"

தலைமை வாத்தியாரின் மேசைக் கருகே இருப்பது ஐந்தாம் வகுப்பு. அந்த வகுப்பில் இருந்து எல்லாவற் றையும் அவதானித்தபடி படிப்பித்துக் கொண்டிருந்தாள் ஆசிரியை அகிலா எனப்படுகின்ற அகிலாதேவி. ஆரம் பக்கல்வி ஆசிரியையாக அண்மையில் நியமனம் பெற்றவள். மிகவும் அழ கானவளும், திருமணம் ஆகாதவளும் கூட.

அம்பலத்தாரோ பாவம் நாற்பது வயதிலேயே தாரம் இழந்தவர். ஆனால் அவர் நடத்தையில் எவரும் குற்றம் காண முடியாது. வெற்றிலை போடுவதைக் கூட ஒழுக்கக் குறை வாகக் கருதும் அதிஉத்தமர். ஆனால் அவருடைய ஒழுக்கச் சிறப் பைப் பற்றி அகிலாவின் முன்னால் யாராவது புகழ்ந்தால் அவள் மௌனம்தான் சாதிப்பாள். ஏனெனில் அவரின் கள்ளப்பார்வைகளை அடிக் கடி கண்டவள் அவள்.

அவள் தமிழ்ப்புத்தகத்தை முகத் திற்கெதிரே பிடித்து உரத்து வாசிக் கப் பிள்ளைகள் ஏககாலத்தில் பிற் பாட்டு பாடிக்கொண்டிருந்தார்கள்.

"அகரமுதல எழுத்தெல்லாம்
ஆதிபகவன் முதற்றேயுலகு"

தான் வாசித்த வசனத்தை பிள் ளைகள் திரும்பவும் சொல்ல எடுக் கும் அந்தக் குறுகிய இடைவெளி யில் அவளது கண்கள் தலைமை வாத்தியாரை மேய்ந்து திரும்பியது.

அவரது விசாரணையை அவள் கவனிப்பதைக் கடைக்கண்ணால்

(XV ஆம் பக்கம் பார்க்க)

# சிறு புண் என்றாலும்....

"வளரும்குழந்தைகள் நாளைய சமுதாயத்தின் சிற்பிகள்" சுவர்ணா சொல்லக் கேட்டபடியே வந்த மனோ அக்கா "என்ன சுவர்ணா ஏதேனும் பேச்சுப்போட்டிக்கு ஆயத்தம் செய்கிறாயோ?"என வம்புக்கிழுத்தபடியே பக்கத்துக் கதிரையில் அமர்ந்தாள்.

அன்ரியோ "வளரும் குழந்தைகள் என்று சொல்லுறது பிழை. அதை விட ஆரோக்கியமான குழந்தைகளால்தான் எதிர்காலத்தை



எழுச்சியோடு வளமாகக் கட்டியெழுப்ப முடியும். அதுக்கு உடல், உள, ஆரோக்கியத்தோடு வளரும் குழந்தைகள்தான் எதிர்காலத்தைச் செப்பமாய்க் கட்டியெழுப்பக்கூடிய சிற்பிகள் என்று மாற்றிச் சொல்ல வேணும்." என்றார்.

யதார்த்த பூர்வமாய் அன்ரி கூறியதைக் காதில் வாங்கியபடி வந்தமர்ந்த ஆதி சொன்னாள். "ஆனால் அன்ரி.....! வளர்ந்த பெற்றோர்களின் அறியாமையால் குழந்தைகளில் நிறையப்பேரை அநாவசியமாக இழக்கவேண்டியோ, இல்லாவிட்டால் ஆரோக்கியமில்லாத நிரந்தர நோயாளியாக ஆக்கவேண்டியோ வருகுது... என்ன நான் சொல்றது சரிதானே?" என்றாள் மூவரையும் பார்த்து.

"ஓம் ஆதி, என்ர தூரத்துச் சொந்தத்தில ஒரு பிள்ளை, இப்பதான் ஆண்டு ஒன்றில் படிக்கிறவன். உடம்பெல்லாம் வீங்கிக்கொண்டு வந்து சலமும் இரத்த நிறத்தில போயிருக்கு. இது இரண்டு,மூன்று தரம் முந்தியும் வந்து தானாகவே வந்து மாறினதால ஆஸ்பத்திரியில காட்டாமல் விட்டிட்டினம் தாய் தகப்பன். ஆனால் இந்தத் தடவை கடுமையாக்கி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக, டொக்டர்மார் ஏலுமான அளவு முயற்சி செய்து பாத்திட்டு, கொழும்புக்குக் கொண்டு போகச் சொல்லிட்டினம் இங்க ஏலாதெண்டு" அன்ரி கதையாய் நிகழ்ந்த சம்பவத்தைக் கூறினார்.

"என்ன அன்ரி ஆண்டு ஒன்றில் படிக்கிற பெடியனுக்கு கொழும்புக்குக் கொண்டு போகிற அளவுக்கு இதென்ன வருத்தம்.... பொல்லாதது போல இருக்கே!" என்று ஆச்சரியமானாள் சுவர்ணா.

ஆதி மெதுவாய் "இதுதான் சுவர்ணா சிறுநீரக அழற்சி (Acute Glomerulonephritis) என்று மருத்துவப்பெயரால் கூறப்படுகின்ற நோய். அவயள் நோய் வந்தவுடனேயே ஆஸ்பத்திரியில காட்டாமல் விட்டது பெரியபிழை. அதோட நீ நினைக்கிற அளவுக்குக் குழந்தைகளின் உயிரைப் பறிக்கிற பயங்கரமான நோயும் இல்லை" என்று கூறியதில் பயம் நீங்கி "ஆ... அப்பாடா, இப்பதான் எனக்கு நிம்மதியாய் இருக்கு. ஆனால் பிறகு ஏன் கொழும்புக்குக் கொண்டுபோக வேணும்?" சுவர்ணா குறுக்கு விசாரணையில் இறங்கினாள்.

"அன்ரி சொன்னாவே ரண்டு மூண்டு தடவையும் சலம் ரத்த நிறத்தில் போனதெண்டு. அப்பவே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்திருந்தால், குணமாக்கியிருக்கலாம. நோயின் தீவிரமடையுற தன்மையைக் கட்டுப்படுத்தியிருக்கலாம்; ஏன் வராமல் கூட பெரும்பாலான குழந்தைகளில தடுத்தும் விடலாம்" ஆதி விளக்கினாள்.

அதைக்கேட்டு ஆச்சரியப்பட்ட அன்ரி "நோய் வராமலே தடுத்து விடலாமோ? அது எப்படி?" என்றார் அவசரமாக.

"அன்ரி நீங்கள் சொன்னீங்களே உங்கட தூரத்துச் சொந்தக்காரப் பெடியனெண்டு அவனுக்குக் கால்கள் கைகளில் புண்கள், சிரங்கு இல்லாவிட்டால் தலை அவியல் என்று முந்தி வந்திருந்ததே?" வினாத் தொடுத்த ஆதியை இடைமறித்த சுவர்ணா "வெளியில தோலில வாற புண்ணுக்கும், மனுஷன்ர உடலுக்குள் இருக்கிற சிறுநீரகத்திற்கும் என்ன சம்பந்தம்...? நீ முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போடப்போறாயோ...?" என்று சிரித்தாள்.

"இல்லை சுவர்ணா, நீ நினைக்கிறது பிழை, சின்னப்பிள்ளைகளில வாற சிறுநீரக அழற்சிக்கு மூல விதையே தோலில ஏற்படுகின்ற சிரங்குப் புண்கள், எறும்பு, நுளம்பு கடிச்சு வாற புண்கள், தலையில் அவிஞ்சு வாற புண்கள் போன்ற வற்றிலதான் போடப்படுகிறது"

ஆதி சொல்ல மனோ அக்கா ஆர்வத்துடன் "அது எப்படி ஆதி...?" என்று விவரம் கேட்டார்.

"புண்களினூடாக பக்ரீரியா என்கிற நோய் ஏற்படுத்துகின்ற கிருமிகள் தோல்பாதுகாப்புக் கவசத்தைப் புண்கள் போன்ற துளைகள் ஊடாகத் தாண்டி குருதிக்குள் சென்று பெருகத் தொடங்கிவிடும்"

ஆதி முடிக்க முன்னமேயே சுவர்ணா தனக்கும் தெரியும் என்ற மேதாவித்தனத்துடன் "அன்ரி நாட்டுக்குள்ளே எதிரியொருவன் வந்தால் ஆயுதங்களால சுட்டுப் பொசுக்கிறது போல, உடம்புக்குள்ளேயும் கிருமிகளான எதிரிகளைச் சாக்காட்ட ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படுகுதுதானே... பிறகெப்படி நோய் வருகுது?" என்றாள்.

"சில நோய்கள் வாறதுக்கான காரணத்தை ஆராய்ந்தால் சில சுவாரசியமான சம்பவங்கள் உடலுக்குள்ள நடக்கிறதைத் தெரிந்து கொள்ளலாம். இங்கும் கூட பக்ரீரியா என்ற எதிரிக்கு எதிராக எங்களின்ர உடலுக்குள்ள இயங்குகின்ற ஆயுதத் தொழிற்சாலைகளான நிணநீர்த்தொகுதி ஆயுதங்களை - பிறபொருளெதிரிகளை உற்பத்தி செய்கிறது. எதிரியோட பிணைஞ்சு தானும் செத்து எதிரியையும் சாக்காட்டி விடுகுது..."

"அப்ப ஒருவகையான தற்கொலைத் தாக்குதல்...என்ன மனோ அக்கா?" சுவர்ணா இடை மறித்தாள்.

அதை ஆமோதித்தபடியே ஆதி "பிணைஞ்சு செத்த எதிரியும் ஆயுதமும் சிறுநீரக மயிர்துளைக் குழாய்களின் நுண்ணிய அலகுகளில படிமங்களாகப் படிகிறதால மெதுமெதுவாக சிறுநீரக அழற்சி என்ற நோய் ஆரம்பிக்கிறது" என்றாள்.

"நோய் வெளியில தெரியும் போது பிள்ளைகள் செங்கல் மங்கலான சலத்தையோ முகம், கால், பாதம், வயிறு வீங்கியோ பாதிக்கப்பட்டிருப்பினம். அதோட குருதி அமுக்கமும் கூடுதலாக இருக்கலாம்."

"என்ன நான் சொல்றது சரிதானே ஆதி" அன்ரி ஆர்வமாய்க் கேட்டாள்.

"ஓம், ஆரம்ப நிலையில சலம் வெள்ளைக் கூழ்த்தன்மையாக இருக்கும். இதுக்கு வழமைக்கு மாறாகப் புரதங்கள் வெளியேற்றப் படுவதுதான் காரணம். ஒரு பரிசோதனைக் குழாயில் முக்கால்பங்கு சலத்தை எடுத்து அதன் அடிப்பாகத்தை சுவாலையில பிடித்து வெப்பமாக்கினால் புகை மாதிரி நல்ல தெளிவாகப் புரதம் (Albumin) இருக்கிறது தெரியும். இதை வீட்டிலேயே அம்மாமார் செய்து பார்க்கலாம். மேலும் புரதம் வெளியேறுதலால் பிள்ளையின்ர உடம்பு வீங்கினாலும், நிறை சற்றுக் குறைவாய் இருக்கும். இவ்வளவோடையும் சலம் போற அளவும் குறைவாய் இருக்கும். இதுக்கும் பெற்றோர் குடிக்கிற எல்லாப் பானங்களின்ர அளவையும், வெளியேறுகிற சலத்தின்ர அளவையும் எவ்வளவென்று பார்த்து வைத்தியரிட்ட சொல்லுறது நல்லது."

"அப்படியெண்டால் இலகுவாகப் பிள்ளைகளுக்கு வருகிற சிரங்கு, தலை அவியல், புண்களை வராமல் தடுக்கிறதால இந்த நோயையே இல்லாமல் ஒழிக்கலாம் இல்லையா?" என்று ஆதியிடம் சிரத்தையாகக் கேட்டாள் சுவர்ணா.

"ஓம் ஆகக் கூடிய சதவீதமான சிறுநீரக அழற்சிக்கு இதுதான் பிரதான காரணம். மிகக் குறைந்தளவிலான குழந்தைகள் இப்பிடியான சிரங்கு, புண்கள் எதுவுமில்லாமலேயே இந்த வகைக்கு ஆளாகினம்" என்றாள் ஆதி.

"அதுக்கு பரம்பரை அலகுகள் காரணமாயிருக்கும்" என்று அன்ரி கூற "அன்ரி ஆதியோட இருந்து நிறையத் தெரிஞ்சு வச்சிருக்கிறீங்கள். பிற்காலத்தில் உங்கட வீட்டுக்கு முன்னாலையும் ஒரு 'போட்' தொங்காவிட்டால் சரி" சுவர்ணாவின் சுவாரசியமான பேச்சுக்குக் கண்ணீர் வரும்படி சிரித்தவாறே அன்ரி "ஆதி...சிரிப்பை விட்டுட்டு சிரங்கு வராமல் தடுக்கிறது எப்படி என்று சொல்" என்றாள்.


"சிரங்கும்கூட ஒரு நுண்ணிய பூச்சியால உண்டாகிறது. இது இலகுவாக ஒருவரிடமிருந்து மற்றவருக்குத் தொற்றிவிடும். அதானால சிரங்கு ஒரு பிள்ளைக்கு வந்தால் வீட்டில் உள்ள அத்தனை பேரும்

# ஆபத்து மிக அதிகம்...!

ஒரே நேரத்தில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேணும்"

ஆதியை உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டிருந்த மனோ அக்கா "சின்னச் சின்ன கொப்பளங்களாக கூடுதலாகக் கால், கைவிரல் இடுக்குகளில் போட்டு இரவில் நித்திரை குளப்பி சொறிஞ்சு கொண்டிருக்கிறமே அதுதானே சிரங்கு என்பது" எனத் தன் சந்தேகத்தை வினாவாக்கினார்.

"ஓம் அக்கா சிரங்கை ஏற்படுத்தும் பூச்சி உடம்பில மென்மையான இடங்கள், அதாவது தொடை, மார்பு, வயிற்றுப் பகுதிகளிலயும் தோல் மடிப்புள்ள பகுதிகளிலயும் தான் கூட விரும்பி வசிக்கிறது. அது இரவில் தோலிற்குக் கீழாக முட்டைகளை இடுவதற்காக ஊர்ந்து திரிவதால் எமக்குச் சொறிய வேணும் போலிருக்கிறது." என்ற ஆதியைக் குறுக்கிட்ட அன்ரி "அட அதுதான் வைத்தியர் கைவிரல் இடுக்கில புண்கள் இல்லாவிட்டாலும், உடம்பின்ர



மற்றப் பகுதிகளில இரவு சொறிஞ்ச அடையாளம் இருக்குதோ எண்டு பார்க்கிறவர்" என்றார்.

"அன்ரி நீங்கள் சொல்லுறது சரி. இந்தச் சிரங்கு சின்னப் பிள்ளைகளில இலகுவாகத் தொற்றிக் கொள்ளும். பள்ளிக் கூடத்தில அல்லது விளையாடுற இடத்தில இது ஒரு பிள்ளையிலிருந்து மற்றப் பிள்ளைக்குத் தொற்றுகிறது."

சுவர்ணாவின் குறும்பாய் "அப்ப சிரங்கு வராமல் தடுக்க வேணுமெண்டால் பிள்ளைகளை விளையாடவோ பள்ளிக்கூடமோ விடக்கூடாது என்கிறாயோ ஆதி" என்று கேட்டுச் சிரித்தாள்.



அன்ரி கொஞ்சம் கோபத்துடன் சுவர்ணாவை அதட்டிவிட்டு ஆதியை மேலே சொல்லத் தூண்டினாள். "சிரங்குக்குச் சிறந்த ஒரு மருந்து BB Cream என்று செல்லமாக அழைக்கப்படுகின்ற Benzyl Benzoate Cream.

"ஓ...இந்தக் கிறீம் எல்லா ஆஸ்பத்திரியிலயும கிடைக்கும். ஆனால் இந்த மருந்தால ஒருவருக்கும் சிரங்கு மாறினதாகச் சரித்திரமே இல்லை" என்றார் அன்ரி.

"அது பூசுற உங்களின்ர பிழையாயிருக்கும். நீங்கள் அந்த மருந்தைப் பூசியிற்று கொஞ்ச நேரத்தில குளிச்சிருப்பீங்களே? அப்பிடித்தானே அன்ரி" ஆதி வினவ...

"ஓம் ஆதி முந்தி என்ர தங்கச்சியின்ர பிள்ளையளுக்கு சிரங்கு வந்தது. நான் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்க் காட்ட டாக்குத்தர் சொன்னார் நல்லா தேய்ச்சுக் குளிச்சிட்டு மருந்தை முகத்துக்குக் கீழ் எல்லா இடமும் பூசச் சொல்லி..."

"அப்ப நீங்கள் என்ன செய்தனீங்கள் அன்ரி...?" மனோ அக்கா குறுக்கிட்டாள். "அன்ரி நான் டாக்குத்தர் வாய்தவறிப் பூசிப் போட்டு குளிக்கிறது என்று சொல்ல வேண்டியதைக் குளிச்சுப் போட்டு பூசு என்று சொல்லிவிட்டார் எண்டு நினைச்சு பிள்ளையளுக்குப் பூசிப் போட்டு கொஞ்ச நேரத்தில குளிக்க வச்சனான். என்ன ஆதி நான் செய்தது தானே சரி?" என்றார். ஆதி சிரிப்பை அடக்கியபடியே BB Cream பூசுவதை விவரமாகச் சொன்னாள்.

"ஒரு குடும்பத்தில ஓர் ஆளுக்குத்தான் சிரங்கு வந்தாலும் குடும்பத்தில் உள்ள எல்லோரும் சிகிச்சை எடுக்க வேணும். பூசுவதற்கு முதல் நன்றாகக் குளிக்க வேணும். குளிச்ச பிறகு நன்றாகத் துடைத்து ஈரம் போக்கிய பிறகு முகம் தவிர்த்து உடம்பு முழுக்கப் பூசவேணும். கிறீம் காய்ந்து உடலோடு ஒட்டின பிறகு உடுப்பைப் போடவேணும். இரண்டு நாளிற்கும் மேல கிறீம் உடலில தொடர்ச்சியாக இருக்க வேணும். சாப்பிட, மலம் கழிக்க போயிட்டு, கை கழுவிவிட்டு திரும்பவும் கழுவப்பட்ட இடங்களிற்குப் பூச வேணும். மூன்றாம் நாள் பாவனைக்குள்ளான எல்லா உடுப்புகள், பெட்சீற்றுகள், சுடுநீரில் அவித்துத் தோய்த்துக் குளிக்க வேணும் இதே மாதிரி ஒரு வாரம் கழிச்சு செய்தால் சிரங்கு இருந்த இடம் தெரியாமல் போய்விடும்" களைப்பாய் ஆதி நிறுத்த..."சின்னப்பிள்ளைகள் வாய்க்குள்ள விரல் வைத்துவிடாமலிருக்க கிறீம் பூசியபின் கைகளிற்கு சொக்ஸ் (Socks) போட்டு விடலாம்" எனத் தொடர்ந்தாள் சுவர்ணா.

சிரங்கு தவிர சில பிள்ளைகளுக்கு எறும்பு, நுளம்பு கடித்தாலும் கால் கைகளில புண்கள் வருகுதே அதை எப்படி வராமல் தடுக்கிறது" என்று கேள்வி எழுப்பினார் அன்ரி.

"இப்படியான பிள்ளைகளை எறும்புள்ள இடங்களில விளையாடவிடக்கூடாது. விளையாடின பிறகு சவர்க்காரமிட்டுக் கைகால்களைக் கழுவவேணும்".

இரவில உடம்பு நீளத்திற்கும் உடுப்புப்போட்டு, கை, கால்களுக்கு சொக்ஸ் போட்டும் படுக்கலாம். வெக்கைக் காலத்தில் இப்பிடி உடுப்புப் போட்டுப் படுக்கேலாது எண்டதால் நுளம்புவலை, நுளம்புத்திரி, இல்லாவிட்டால் சிலமரப்பட்டைகள் எரிந்துவாற புகை மூலமாக நுளம்புகள் கடிப்பதிலயிருந்து தடுக்க வேணும். இப்படியிருந்தும் புண்கள் வந்தால், ஒரு முறையான வைத்தியரை அணுகி சிகிச்சை எடுக்க வேணும்." ஆதி பெரிய குரலில் வலியுறுத்த மௌனமாயிருந்த மனோ அக்கா "சிறுபிள்ளைகளுக்கு தலை அவிஞ்சு புண்கள் வாறதாலையும் சிறுநீரக அழற்சி வருமெண்டாயே அதுக்கு எப்பிடிச் சிகிச்சை அளிக்கிறது?" என்று கேட்டார்.

சுவர்ணா பெரிய பாட்டி போல "மருத்தெண்ணை என்று அம்மாமார் வாங்கி வைக்கினமே அதால குணப்படுத்தலாம்" என்றாள்.

ஆதியோ "இல்லை சுவர்ணா தலை அவிந்து புண்கள் வாறதால, கிருமிகள் இலகுவாக நேரடியாக அல்லது காதுத் துவாரங்களூடாக உள்ளுக்குள் சென்று மூளைக்கும் கூட கிருமித் தொற்று ஏற்படுத்திப் பயங்கரமான விளைவுகள் வரலாம்"

ஆதி முடிக்க முன்னமே "நாங்கள் இலகுவாக, நல்ல சுத்தமாக தலையைக் கழுவி வந்தால் புண்களே வராமல் தடுத்து விடலாம் பிறகேன் வீணாகப் பயப்படுவான்?" என்றார்.

"ஓம் அன்ரி ஒவ்வொரு மனிதனும் தான் தன் சுத்தம் பேணி வந்தால் நிறைய வியாதிகளை வராமலேயே தடுத்துவிடலாம்" என்று அன்ரியை ஆமோதித்தாள் மனோ அக்கா.

"குழந்தைப் பருவம் சுலபமாகவே நோய்களை வாங்கிக் கொள்கிற பருவம். ஏனென்றால் அவர்களுக்கு எதிர்ப்புச் சக்தி குறைந்தளவில் தான் இருக்கும். அதற்கேத்தபடி ஒவ்வொரு பெற்றோரும் தங்கட குழந்தைகளுக்கு நல்ல சத்துள்ள உணவைக் கொடுக்கோணும்" என்ற ஆதியை மறித்த சுவர்ணா "நல்ல சத்துள்ள உணவோடு, பிள்ளைகளைச்சுத்தமாகப் பேணி வளர்க்கோணும். சின்னப் புண்கள் வந்தாலும் அதற்குரிய சிகிச்சையை உடனடியாக நாட வேணும்... இப்படிச் செய்யிறதால எதிர்காலத்தை வளமாகக் கட்டியெழுப்புகிறதுக்கு ஆரோக்கியமான சிற்பிகளைப் பெற்றுக்கொடுத்த பெயரை எல்லாப் பெற்றோர்களும் பெற்றுக் கொள்ளலாம்." என்றபடி அன்றைய விவாதத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தாள்.

*

இ.நளாயினி,
சி.செல்வகௌரி
(யாழ். மருத்துவபீடம்)

# 'வாராது வந்த மாமணி' யாழ். கல்வியியற் கல்லூரி

மட்டக்களப்பு, வவுனியா நகரங்களிலே இயங்கிவரும் கல்வியியற் கல்லூரிகளின் மாதிரியில் யாழ்ப்பாணத்திலும் ஒரு கல்வியியற் கல்லூரி தோற்றுவிக்கப்படல் வேண்டும் என்ற எண்ணமும் அதன் பயனாய் மிக்கெழுந்த வேணவாவும் நீண்ட காலமாய்க் கிடப்புள் போடப்பட்டிருந்தன.

'அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா'

என்ற முதுமொழி எம்மவருக்குப் பட்டறிவாயிற்று.

இந்நிலையிலே, எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரி தற்காலிகமாய் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வளாகத்தில் இயங்கத் தொடங்குகின்றது. எம்மவரின் கல்வி வளர்ச்சியிலே, திரிகரண சுத்தியோடு பணியாற்ற விழைபவர்களுக்கு இச் செய்தி மிகுந்த மகிழ்ச்சியை வழங்கும் என்பதற்கு ஐயம் இல்லை.

பாரத நாட்டின் சுதந்திரத்தை, *'ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர், வாராது வந்த மாமணி'* என்று வருணித்தான் மகாகவி பாரதி. அவன் கூற்றினை, அதன் தொனிச் சிறப்பினை மட்டுப்படுத்தி, யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரி

'சில்லாண்டு ஒய்ந்து தவங்கிடந்து
வாராது வந்த மாமணி'

எனக் கூற மனம் அவாவுகின்றது.

## கல்வியியற் கல்லூரிகளின் தோற்ற நோக்கம்

"ஆசிரிய தேவைகளை நிறைவேற்றுவதற்காக இதுவரை காலமும் பின்பற்றப்பட்ட விதிமுறைகள் யாவும் தகுதியானவர்களைச் சேவைக்குச் சேர்த்துக் கொண்ட பின்னர், அவர்களைக் காலா காலத்தில் குழுக்களாகப் பயிற்சி அளிப்பதாகவே இருந்தது. பட்டதாரிகள் அல்லாதோர் தொழில்சார் பயிற்சியைப் பெறுவதற்கு ஆசிரிய கல்லூரிகளும் தொலைக்கல்வி நிறுவனங்களும் உண்டு. ஆசிரியத் தொழிலுக்குச் சேர்த்துக் கொள்வதற்கு முன்னரே முன்சேவைப் பயிற்சி பெற வேண்டிய அவசியத்தைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் இத்தகைய பயிற்சிகளை முழுநேர விடுதியுடன் பூரணத்துவமான ஒன்றாக மாற்றித் திறம்பட இயக்கும் ஆசிரிய பரம்பரையைத் தோற்றுவிக்கும் நோக்கத்துடன்தான் இப்புதிய பயிற்சி முறை உருவாக்கப்பட்டது."

(– ஈ.எல்.விஜேமான, கல்விச் செயலாளர், பூர்வீகம் கல்விக் கல்லூரி(க்) கைந்நூல், திருத்தத்திற்குரியது பக்.3)

மேற்கூறிய கூற்றிலே கையாளப்பட்டிருக்கும் வாக்கியங்களின் 'சில சொற்றொடர்கள்' கல்வியியற் கல்லூரி தோற்றுவிக்கப்பட்ட நோக்கத்தைத் தெளிவாக்குகின்றன. இவை பற்றி மேலும் தெளிவு பெறுதற்குச் சில விளக்கங்கள் வேண்டப்படுகின்றன. அவையாவன:-

### (1) முன்சேவைப் பயிற்சி

பொறுப்புமிக்க தொழில்களிலே ஆளணியைச் சேர்க்க முன்னர், அந்த ஆளணிக்கு அவ்வத் தொழில் சார்ந்த பயிற்சியும் பயிற்சி முடிந்த பின் அத்தொழிலுக்குத் தகுதி பெற்றதன் அறிகுறியாகச் சான்றிதழ்களும் உரிமமும் (License) வழங்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக வைத்தியர், பொறியியலாளர், மருந்தாளர் முதலாகப் பல்வேறு தொழில்களிலும் பதவிகளிலும் உள்ளோரைக் காட்டலாம். ஆனால் ஆசிரியர் பயிற்சி பெறாத, க.பொ.த. உயர்தரச் சான்றிதழ் பெற்றவர்களை ஆசிரியப் பயிலுநர் என்ற முத்திரையுடன் ஆசிரிய சேவையில் நியமித்த பின்னரே பயிற்சி வழங்கப்படும் முறைமை நன்மைக்குப் பதில் தீமையே வழங்கியது கண்கூடு. ஆசிரியத் தொழில் *'கல்லாமற் பாகம் படும்'* ஒன்றன்று. எனவே எதிர்காலத்திலே பயிற்சி பெறாத எவரும் ஆசிரியராய் நியமிக்கப்படாதிருக்க முன்சேவைப் பயிற்சியும் அதற்கென்த் திட்டமிடும் உலக வங்கியும் - கல்வியியற் கல்லூரிகளும் - உதவப் போகின்றன. இன்னும் சில ஆண்டுகளில் பயிற்சி பெறாத ஆசிரியர் நியமனம் என்பது பொய்யாய்க் கனவாய்ப் பழங்கதையாய்ப் போய்விடும். இந்நிலை மிகுதியும் வரவேற்கப்பட வேண்டியதே.

### (2) முழுநேர விடுதி

ஆசிரியப் பயிலுநர்கள் முழுநேரமும் விடுதியில் வதிந்து பயிற்சி பெறுதல் என்பது புதிய ஒன்றன்று. பாடசாலைகள் அரசு உடைமை ஆனதற்கு முன்பும், சமயஞ்சார்சபைகளின் முகாமையில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் இயங்கிய காலத்தும் (அரசுடைமைகளான கோப்பாய், பலாலி ஆசிரியர் கலாசாலைகளும் இருந்தன) பயிலுநர்கள் முழுநேர விடுதியில் வதிந்தே பயிற்சிபெற்றனர். இந்த வதிவிடப் பயிற்சியால் கிடைத்த நற்பயன்கள் மிகப்பல. அவை:-

(I) பயிற்சிக் கலாசாலை அதிபர், விரிவுரையாளர்கள், விடுதிக்காப்பாளர் ஆகியோரின் கூடிய மேற்பார்வையும் அதனால் பயிலுநரிடையே கூடிய ஒழுங்கும் கட்டுபாடும் நிலவின.

(II) வெளிவிடயங்களில் அதிகம் ஈடுபடாது நாளின் பெரும் பகுதியைக் கற்றல், விளையாட்டு, கலாசார நிகழ்வுகள் என்பவற்றிற் செலவிட வாய்ப்பு இருந்தது.

(III) விடுதி நிருவாகம் முதலியவற்றில் பயிலுநர் பங்கேற்றுப் பட்டறிவு பெற முடிந்தது.

(IV) கூடிவாழ்வதனால் கிடைக்கக்கூடிய சமூக உணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, ஆரோக்கியமான போட்டிகளால் தமது திறமைகளை வளர்த்தல் முதலியவற்றிற்குப் போதிய சந்தர்ப்பங்கள் கிடைத்தன; பொறுப்புணர்வு வளர்ந்தது.

மீண்டும் இந்த வாய்ப்புகள் பயிலுநர்களுக்கே கிடைப்பதற்குக் கல்விக் கல்லூரிகள் பெரிதும் உதவும்.

### (3) பூரணத்துவ ஆசிரியம்

*'ஆசிரியம் மகத்தான தொழில்'* என்ற உண்மையை (நெருக்கடிகளும், சமூகப் பெறுமானங்களில் புதியனவாய்க் கிளர்கின்ற நோக்குகளும் பெருமளவு பாதித்துவரும் இன்றைய காலகட்டத்திலும்) மறுத்தல் கடினமே. சமூகத்தை நெறிப்படுத்தும், வழிகாட்டும் சட்டத்தின் கட்டுப்பாட்டில் இருந்தும் தொழில்களுக்கென்று தனித் தனி சீருடைகள் இருந்து வருகின்றன. இவற்றிற்குப் போலவே ஆசிரிய சமூகத்திற்கும் சீருடை இருந்ததொரு காலம் மிக்க தொலைவானதன்று. இன்று பத்தோடு பதினொன்றாய் ஆசிரியர்கள், சமூகத்திலே தம்மை இணைத்துக் கொண்டு தமக்குரிய அடையாளங்களை இழந்து வருகின்றனரோ என்று ஐயுற வேண்டியுள்ளது. ஆண்டு தோறும் ஆசிரியர் தினத்தின் மூலம் ஆசிரியர்களுக்கு அவர்கள் ஆசிரியர்கள்தாம் என்று நினைவூட்ட வேண்டிய நிலை தொடரத்தான் வேண்டுமா? இந்தக் கேள்விக்குக் கல்வியியற் கல்லூரி எதிர்மறையான பதிலைத் தரும் என்று எதிர்பார்க்கலாம்.

### (4) புதிய பயிற்சி முறை

கற்றலிலும் கற்பித்தலிலும் சிறப்புத் தெரிவுகள் இன்று தவிர்க்க முடியாதவையாய் ஆகிவிட்டன. ஒரு காலத்தில் ஆங்கில ஆசிரியர்ப் பயிற்சி, சுயபாஷை ஆசிரியர்ப் பயிற்சி (Vernacular Teachers Training) என்ற இரு பயிற்சிகளே நிலவின. ஆங்கிலம் ஆட்சி மொழியாக் கோலோச்சிய காலம் அதுவாதலால், சுயபாஷா ஆசிரியர்கள் சம்பளம், சமூக மதிப்பு என்பவற்றால் தாழ்த்தப்பட்ட ஓர் இனமாகவே கருதப்பட்டனர். ஆனால் ஆங்கிலம் ஒன்றைத் தவிரப் பிறபாடங்களிலே இந்த ஆசிரியர்கள் சமதிறமையும் தரமும் வாய்ந்தே விளங்கினர். அக்காலத்தில் சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ் (Senior School Certificate S.S.C.) பரீட்சைக்கான பாடங்களைத் தமிழ்மூலம் கற்பித்த தரம் வாய்ந்த ஆசிரியர்கள் பலரும் தமிழ் ஆசிரியர் கலாசாலையிற் பயின்றவர்களே.

ஆனால் நாற்பதுகளின் கடைக்கூறிலே தமிழ் ஆசிரியரின் பயிற்சித் தரம் குறைக்கப்பட்டு கனிட்ட (Junior and Primary Training) ஆரம்பப் பயிற்சி ஆயிற்று. முன்னைப்போலவே ஆங்கில-சுயபாஷை ஆசிரியர்களின் சம்பள விகிதத்திலே பாரிய வேறுபாடும் காணப்பட்டது.

ஆனால் புதிய பயிற்சி முறையில், தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சமூகக்கல்வி, ஆரம்பக் கல்வி, நடனம், இசை, சித்திரம் என ஒவ்வொரு பாடத்திற்கும் சிறப்புப் பயிற்சி வழங்கப்படுகின்றது. கல்வியியல், உளவியல், மதிப்பீடு என்பன இவர்களுக்குப் பொதுவாகவும், அவரவர்களின் பாடங்கள் சிறப்பாகவும் பயிற்றுவிக்கப்படுகின்றது. சம்பள விகிதத்திலும் மாற்றம் எப்பொழுதோ அகற்றப்பட்டு விட்டது. தமிழ்மொழி கற்றலூடகமானதன் நற்பயனே இது.

ஆனால் இவற்றுக்கெல்லாம் அடித்தளமான, தாய்மொழி (ஊடகம்) யாகிய தமிழ் ஆரம்பக்கல்வி பயிலுநருக்கும் தமிழ்மொழிப் பயிலுநருக்கும் மட்டுமே சிறப்பாக வழங்கப்படுமா என்பது தெரியவில்லை. அவ்வாறாயின் ஆசிரியரின் இன்றைய தமிழறிவுப் போதாமை எதிர்காலப் பரம்பரையினரைப் பெரிதும் பாதிக்கும் என்றே சொல்லத் தோன்றுகின்றது.

ஆசிரிய பயிற்சிக் கல்லூரி (Teachers' Training College), ஆசிரியர் கல்லூரி (Teachers' College), பயிற்சிக் கல்லூரி (Training College) என்றெல்லாம் காலத்துக்குக் காலம் அழைக்கப்பட்டு வந்த ஒரு நிறுவனம், கல்விக்கல்லூரி என அழைக்கப்பட்டு இன்று கல்வியியற் கல்லூரி எனப் பெயர் கொண்டு முன்னைய மூன்றினதும் முடிவில் (விரைவில் ஆசிரியர் கல்லூரிகள் மூடப்பட்டு விடும்) தனது வாழ்வைத் தொடங்கியுள்ளது. பட்டபடிப்பின் கல்வியியல் டிப்ளோமா (Post Graduate Diploma in Education) என்பதற்கொப்பக் கல்வியியல் (Education) சார்ந்த பயிற்சிக் கல்லூரியைக் கல்வியியற் கல்லூரி என மாற்றம் செய்திருப்பது பொருத்தமே.

**க.சொக்கலிங்கம் (சொக்கன்)**

கல்வியியல் நோக்கிலே கல்வியின் எதிர்பார்ப்புக்களும், அடிப்படைகளும் கல்வியாளரினால் காலத்துக்குக் காலம் புதிய புதிய வரைவிலக்கணங்களைப் பெற்று வருகின்றன. எமது தமிழ்க் கல்வி மரபிலும் கல்விக்கான வரைவிலக்கணங்கள் பரந்துபட்டேயுள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டினரான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் *'கல்வியாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றல்'* என்றார். அவருக்கும் பல நூற்றாண்டுகள் முன் வாழ்ந்த திருவள்ளுவர் *"கற்க வேண்டியவற்றைக் கசடறக் கற்றுக் கற்றவண்ணம் ஒழுகுக"* என்றார். *"நல்லம்யாம் என்னும் நடுவுநிலைமையைத் தருவதால் எல்லா அழகிலும் உயர்ந்த அழகு கல்வி அழகே"* என்றார் நாலடியார் ஆசிரியர் (ஆசிரியருள் ஒருவர்).

யாழ்ப்பாணக் கல்வியற் கல்லூரி கற்றற்குரிய நூல்களைக் கற்று யதார்த்த வாழ்வோடு இணைந்து மாணவரை மேலெடுத்துச் செல்கின்ற, நடுவுநிலை தவறாத நல்லாசிரியர்களை உருவாக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறாகாது.

### முதற்பீடாதிபதி

நாயன்மார்கட்டு மண்ணிலே தவழ்ந்து யாழ். இந்துக் கல்லூரியிலே நடை பயின்று, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நிதானமாய்க் கால் பதித்து, பண்டாரவளை, கல்முனை, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய நகரங்களிலே ஆடியும் ஓடியும் திரிந்து தமது காற்சுவடுகளை மட்டுமன்றிக் கல்விச் சுவடுகளையும் ஆழப் பதித்து மீண்டும் யாழ்ப்பாணம் வந்திருக்கும், திரு. திருநாவுக்கரசு கமலநாதன் எம்.ஏ., டிப்.இன்.எட். (விரைவிற் கலாநிதியாவார்) யாழ்ப்பாணக் கல்வியற் கல்லூரியின் பீடாதிபதிப் பதவிக்கு நியமனமாகியுள்ளமை தனிப்பட்ட முறையிலும், யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவன் என்ற வகையிலும் எனக்குப் பெருமகிழ்ச்சி தருகின்றது.

இந்தப் பெருமகிழ்ச்சி, பெரும் பாராட்டாக மலரும் காலத்தினை அவர் தமது அயரா உழைப்பினாலும் ஆற்றல்களினாலும் உருவாக்குவார் என்று நம்புவோமாக!

நம்பினோர் கெடுவதில்லை"

*

---

# மடவீர் நும்வாய்ப் பொய்யும் உளவோ?

**தேன்கூடு**

இன்று தொகைநூல் எட்டினுள், ஏழாவதாக விளங்கும் அகநானூறில் எமது சிந்தையைச் செலுத்துவோம். அகநானூறு அகத்தினை பற்றியது; நானூறு பாடல்களான் இயன்றது. நெடுந்தொகை எனவும் வழங்கும். பாடல்களை களிற்றியானை நிரை (1–120), மணிமிடைபவளம்(127–300), நித்திலக்கோவை(301–400) எனப் பகுத்துள்ளனர்.

இந்நூல், தமிழ் மக்களின் இயல்பு, வழக்கு, நாகரிகம், மணமுறை முதலியவற்றை விளக்குவதுடன், மன்னவர் கொடை, வீரம், நீதி, இயற்கை எழில் முதலியவற்றையும் இனிது எடுத்து இயம்பும். இனி விடயத்துக்கு வருவோம்.

களிற்றியான்னை நிரையுள் குறிஞ்சித்திணை தொடர்பான ஒரு செய்யுள். அது 'அன்னாய்..........வல்லோர்க்கே'(48அகம்) என்பது.

'மலைச்சாரலில், மலிபூஞ்சோலையில், இளைஞன் ஒருவன்; ஊசி நூல் கொண்டு கோத்தமைந்த செங்கழுநீர் மலர் மாலையை அணிந்துள்ளான். பக்கம் சேர்த்திய வெட்சியாலாய கண்ணியன்; ஆகம் முழுதும் செஞ்சாந்து பூசியுள்ளான். அவனிடத்து வரிந்து கட்டப்பட்ட வில் காணப்படுகின்றது. பகழி ஒன்றைக் கையில் பிடித்துள்ளான்.

'புலி,புலி' என்று எழுந்த சத்தம், அவன் காதில் விழுகின்றது. சத்தம் வருகின்ற திசையை நோக்கி நடக்கின்றான். ஆம் வந்து விட்டான். அங்கு புலியைக் காணவில்லை. சிறுமியர், ஒருவர் பின் ஒருவர் ஓடி மறைகின்றார்கள். தாரகை நடுவண் தண்மதி போல் விளங்கும் நங்கை ஒருத்தி நாணிக் குனிந்து நிற்கின்றாள். உரையாடல் தொடங்குகின்றது.

'ஐவகை முடித்த கூந்தலினையும், அழகிய நெற்றியினையும், உடையீர் எங்கே புலி, அது சென்ற தன்மை ஏது?' என வினவுகின்றான். விடை கிடைக்கவில்லை. அவன் துணிச்சலுடன் 'நும்வாயிடத்துப் பொய்யும் உளவோ?' என்கின்றான். மையுண்ட கண்மாதொருத்தியை நோக்குகின்றான். அவ்விடத்தை விட்டுச் சற்று அகல்கின்றான். தேரில் ஏறுகிறான். தேர் மந்த கதியில் செல்கின்றது. தண்மதி என நின்ற தையல் தனது உயிர்த்தோழியை நோக்குகின்றாள். 'இவன் மகன்தானே?' என்று கூறி அமைகின்றாள். காதல் அரும்பி மலர்ந்துவிட்டது. காலம் உருண்டு சென்றது.

தலைவி, வீட்டினுள் முடங்கிக்கிடக்கிறாள் பாலும் உண்ணாள்; பழங்கண்(துன்பம்) உற்று நிறமும் மாறிக் காட்சியளிக்கின்றாள். அவள் நிலையை வளர்ப்புத்தாய் காணுகின்றாள். அருமைத்தோழியைக் கண்டு தன்மகளின் மாற்றத்துக்கு காரணம் கேட்கின்றாள். தோழி முன்பு நடந்த செய்தியைக் கூறுகின்றாள். (மாலை, கண்ணி என்பன மாலை விசேடங்கள்)

.................................................................மேல்நாள்,
மலிபூஞ் சாரல்என் தோழி மாரோடு
ஒலிசினை வேங்கை கொய்குவம் சென்றுழி
புலிபுலி என்னும் பூசல் தோன்ற
ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்
ஊசிபோகிய சூழ்செய் மாலையன்
பக்கஞ் சேர்த்திய செச்சைக் கண்ணியன்
குயம்மண்டு ஆகம் செஞ்சாந்து நீவி
வரிபுனை வில்லன் ஒரு கணை தெரிந்துகொண்டு
யாதோ மற்றுஅம் மாதிறம் படரென
வினவி நிற்றந்தோனே அவற்கண்டு
எம்முள் எம்முள் மெய்மறைபு ஒடுங்கி
நாணி நின்றனம் ஆக, பேணி
ஐவகை வகுத்த கூந்தல் ஆய்நுதல்
மையீரோதி மடவீர் நும்வாய்ப்
பொய்யும் உளவோ என்றனன்.
.......................................................
அவன் மறைதேஎம் நோக்கிமற்றுஇவன்
'மகனே தோழி' என்றனள்..........
அதன் அளவு உண்டுகோள் மதிவல்லோர்க்கே'

–தங்கால்முடக் கொற்றனர்.

இது செவிலித்தாய்க்குத் தோழி அறத்தொடு நின்றது என்னும் துறையின் பாலதாம்.

அறத்தொடு நிற்றல் என்பது களவொழுக்கத்தை, முறையே வெளிப்படுத்தி நிற்றல் என்னும் பொருளதாம். தலைவி தோழிக்கும், தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தந்தை, அண்ணன்மார் முதலாயவர்களுக்கும் வெளிப்படுத்தி நிற்பர்.

**சிந்திப்போம் செயற்படுவோம்**

பண்டைத்தமிழர் தம்புதல்வியர் பேதைப் பருவம் நீங்கிய பின்னர் அவர்களை 'மேதையங்குறு மகள்' என அழைத்தனர். அதாவது அறிவு சான்ற சிறுமியராகவே கண்டனர். ஆசிரியர் தொல்காப்பியர் அம் மகளிர் பால்

'செறிவும், நிறைவும், செம்மையும் செப்பும்
அறிவும்அருமையும்.....................'

அமைந்து கிடந்தன என்பர்(தொல்1155)

(செறிவு – அடக்கம்; நிறைவு – மன அமைதி; செம்மை – நேர்மை; செப்பு – தகுவன கூறுதல்; அறிவு – இயற்கை அறிவு; அருமை – அருமைப்பாடு)

இத்தகைய உயர் பண்பினர் இடம் பொய்கூறுவதற்கு வேண்டாவாம். வேங்கைப் பூவினைப் பறிக்கும் வழி, 'புலி புலி' என்று கூறின் கிளைகள் சரிந்து கொடுக்கும் என்பது பண்டையோர் சம்பிரதாயம். இவ்வளவு சீர்மையுடையாரிடத்தே பொய் வரமாட்டாதன்றோ?

'இவன் மகனே' என்பதை நோக்குவோம். மகன் என்றது ஆடவனை. பண்டையோர் ஆடவர்களுக்கு அருங்குணங்களாக, அறிவு நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்பவற்றைக் கூறுவர். குன்றநாடன், ஆடவர் திலகன் ஆனமையால், தன் நெஞ்சுள் புகுந்த அவன் தன்னைக் கைவிட மாட்டான் என்பதனால் 'மகனே' எனத் தேற்றேகாரம் கொடுத்துக் கூறினள் என்று கொள்ளவும் இடமுண்டு. நாம் உயரிய பெண்மைக்குணங்களையும் ஆண்மைக்குணங்களையும் பேணி இன்பம் காண்போம்.

தொடரும்

- *சிகண்டியார்.*

# உயிர்ப்பு ஞாயிறு உணர்த்தும் நெறி

கடந்த நாற்பது நாள்களுக்கு மேலாக உயிர்ப்பு விழாவிற்கு எம்மைத் தயார்படுத்திய நாம் நாளை இறைமகன் கிறிஸ்து சாவைவென்று சத்திய வீரனாக உயிர்பெற்ற விழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடுகின்றோம்.

கிறிஸ்து பிறப்பின் மாபெரும் ஜூபிலி ஆண்டில் உயிர்ப்பு விழா எமக்குத் தருகின்ற செய்தி என்ன?



இறைமகன் கிறிஸ்து இந்த உலகில் வாழ்ந்தபோது தனது சிலுவை மரணத்தைப்பற்றி மூன்று முறை முன்னறிவிக்கின்றார். "இந்த ஆலயத்தை இடித்து விடுங்கள்; மூன்று நாளில் கட்டியெழுப்புவேன்" என்று கூறியதோடு மட்டும் நின்றுவிடாது அதைச் செயற்படுத்திக் காட்டுகின்றார். பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து அலகையினால் கட்டுண்டிருந்த தம் அன்பு மக்களைத் தன் உத்தானத்தினூடாக உரிமை வாழ்வுக்கு அழைத்துச் செல்கிறார். மரணத்தோடு வாழ்வு முடிந்து விடுகிறது என்று கருதிய மக்களுக்கு, மரணம் வாழ்வின் முடிவல்ல; மாறாக நித்திய வாழ்வின் வாயிற் கதவுகள் என்பதை தெளிவுபடுத்துகின்றார். அடிமை விலங்குடைத்து அலகையைத் தோற்கடித்து இயேசு கல்லறையில் நின்று வெற்றி வீரனாக உயிர்த்தார். இருளின் ஆட்சி ஒழிய ஒளிமிக்க அருள்வாக்கு எமக்குக் கிடைக்கின்றது; ஆண்டவரின் உயிர்ப்பு எமது மறுவாழ்வின் நம்பிக்கையின அச்சாரமாகிறது.



இயேசு உயிர்த்ததால் இன்று நமக்கோர் அற்புதமான - ஆனந்தமான - உறுதியான - நம்பிக்கையான - பதில் கிடைக்கின்றது. பவுல் குறிப்பிடுவது போல் வான் நோக்கி எமது கண்களை உயர்த்தி நிச்சயமான, நிரந்தரமான மறுவாழ்வை நோக்கி கிறிஸ்துவோடு நாமும் உயிர் பெறுவோம் என்ற நம்பிக்கையோடு அதற்குரிய உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ முயற்சிப்போம்.

இன்று எமது மண்ணில் நாம் அனுபவிக்கும் முடிவில்லாத துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் சிலுவைகளுக்கும் ஒரு முடிவு உண்டு. அதற்குரிய பரிசும் வெற்றி வாகையும் மறுமையில் எமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு வாழ்வோம். கிறிஸ்து தமது துன்பக் கலத்தை ஏற்று இறுதிமட்டும் தன் தந்தையின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்தது போல் நாமும் எமக்கு வரும் துன்பங்களை ஏற்றுக் கொள்வோம்.

**அமலரட்ணம்**
**யாழ்ப்பாணம்.**

அன்பு புறக்கணிக்கப்படும் சந்தர்ப்பங்கள், உறவுகள் உருக்குலையும் தன்மைகள், பழிவாங்கும் நடவடிக்கைகள், இருட்டடிப்புக்கள், கைதுகள், கொலைகள், கொள்ளைகள், வன்முறைகள் என்பனவற்றைப் புதைத்து, உன்னதமான, உயரிய, ஆரோக்கியமான நல்ல விதைகளை விதைத்து, பலன் பெறுவோம். இயேசு உயிர்க்கவில்லையேல் எமது விசுவாசம் வீணானது. எமது திருச்சபை கட்டப்பட்டது கிறிஸ்துவின் உயிர்ப்பில் என்பதை உணர்ந்தவர்களாக - உயிர்ப்பின் உன்னதத் தன்மைகளை உணர்ந்தவர்களாக - செயற்படுவோம்.

வெளி ஆடம்பரங்களுடன் எம்மை நிலைநிறுத்தி விடாது எமது உள்ளங்களையும் புதுப்பித்துக் கொள்ளுவோம். உழுத்துப்போன மரபுகளைக் களைந்து, புத்துணர்வும் புதுத்தெம்பும் பெற்றவர்களாய் கிறிஸ்துவின் உயிர்ப்பின் மகிழ்வை எல்லோருக்கும் பகிர்ந்து, நாமும் அந்த மகிழ்ச்சியில் இணைந்து கொள்வோம். இதுவே நாளைய நன்னாளின் சிறப்பாயிசாகும்.

## மூல வாயில் விடுதலை நீரே!

உலகை வென்ற உத்தமர் நீரே
உண்மை விடுதலை தந்திடுவீரே
கலகம் கொண்ட உலகதை நீரே
காத்திட எம் முன் எழுந்தருள்வீரே!

எம்மை மீட்க உயிர்த்தெழுந்தீரே
எமது பாவம் போக்கிடுவீரே
தம்மை தாரை வார்த்தவர் நீரே
தரணியில் எம்மைக் காத்திடுவீரே!

மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தீரே
மூல வாயில் விடுதலை நீரே
சான்றாய் எம்மைப் படைத்தவர் நீரே
சாந்தியை எங்கும் ஊற்றிடுவீரே!

உயிர்த்து எம்முள் நிறைந்தவர் நீரே
உரிமை தந்து காத்திடுவீரே
பயிராய் எம்மில் பலன் தருவீரே
பனையின் மக்களைக் காத்திடுவீரே!

புனித வாழ்வின் சிகரமும் நீரே
புரியார் எம்மை மாற்றிடுவீரே
இனிதாய் இதயம் நிறைந்தவர் நீரே
இழிநிலை வாழ்வை அகற்றிடுவீரே!

கிறிஸ்தவ வாழ்வின் சிகரமும் நீரே
கிழிந்த எம்மை உடுத்திடுவீரே
பரிசுத்த உலகக் காவலர் நீரே
பாசமாய் எம்மில் நிறைந்திடுவீரே!

- *புதுமை* -
*ஈச்சமோட்டை*

# நமது துன்பங்களுக்கு எல்லாம் நிச்சயம் உயிர்த்தெழுதல் உண்டு

கத்தோலிக்க - கிறிஸ்தவ மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய திருவழிபாட்டு ஆண்டானது பல காலங்களைக் கொண்டது. உதாரணமாக திருவருகைக் காலம், பொதுக்காலம், தவக்காலம், பாஸ்காக்காலம் என்பன. இன்றைய நாள்களில் அவர்கள் தவக்காலத்தை அனுஷ்டிக்கின்றார்கள். இன்னும் சிறப்பாகத் தவக்காலத்தின் கொடுமுடியாக விளங்கும் யேசுவின் உயிர்த்தெழுதலையும் கொண்டாடுகின்றார்கள்.

தவக்காலத்தில் சிறப்பாக யேசுவின்பாடுகள் - மரணம் - உயிர்ப்பைப் பற்றிச் சிந்திக்க நாம் அழைக்கப்படுகின்றோம். துன்பம் என்பது மனித வாழ்க்கையோடு மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுவிட்டது. எங்கு பார்க்கினும் துன்பமடா என்று எல்லோருடைய நாவுகளும் உச்சரிக்கின்றன. முற்றுப்புள்ளி இடப்படாத போர் பிரசவித்த துன்பங்களை எம் மக்கள் அனுபவிக்காதவர்கள் அல்லர். அந்த வகையில் யேசுவின் பனுவுடலேற்கைதான் அவரது துன்பத்துக்கும், மரணத்துக்கும் காரணமாகியது. யேசுவின் மனுவுடலேற்கையைப் பற்றி வேதாகமும் இவ்வாறு விளக்கம் கூறுகின்றது:-

*"கடவுள் வடிவில் விளங்கிய அவர்,*
*கடவுளுக்கு இணையாயிருக்கும்*
*நிலையை வலிந்து பற்றிக்*
*கொண்டிருக்க*
*வேண்டிய தொன்றாகக் கருத*
*வில்லை,*
*ஆனால் தம்மையே வெறுமை*
*யாக்கி*

*அடிமையின் வடிவை ஏற்று*
*மனிதருக்கு ஒப்பானார்.*
*மனித உருவில் தோன்றி...*
*(பிலிப் 2:6,7)*

யேசு, எதற்காகக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டுக் கொலைக் களத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார் என்ற கேள்வியை எழுப்புவோமானால் அதற்கு விடைகளாக அமைபவை என்ன? உரோமையர்களும், இஸ்ரயேலின் மேல் குடியினரும் ஏழைகளையும், பாவிகளையும் அடக்கி ஒடுக்கி அவர்கள் மீது புரிந்த அட்டுழியங்களை ஒழிக்கவேண்டும் என்று குரலெழுப்பியதற்காய் - ஏழை எளிய மக்களுக்காகப் பரிந்து பேசியதற்காய் - ஒட்டுமொத்தத்தில், மனித நேயத்திற்காய் - மனிதம் வாழப்பட வேண்டும் என முயற்சித்ததற்காய் - அவர் கொல்லப்பட்டார்.

யேசு போதித்தது வெறும் அரசியல் விடுதலை மட்டுமல்ல. மாறாக முழுமனிதவிடுதலை. "யேசு கொண்ட விரும்பிய புரட்சி ஆழ்ந்த வேரோட்டமான புரட்சி. தீவிரவாதிகளோ வேறு எவரோ கனவு கண்டிராத புரட்சியைத்தான் யேசு நிலை நாட்ட எண்ணினார். மனித வாழ்க்கையின் அனைத்துத் துறைகளையும் அடிப்படையாகவே கேள்விக்கு உட்படுத்தி, நிலைமையைத் தலைகீழாக மாற்றிட யேசு விரும்பினார். அரசியல்,

**உயிர்த்த ஞாயிறு சிறப்பம்சம்**

சமூகம், பொருளாதாரம், கலாச்சாரம், சமயம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் இந்த வேரோட்டமான மாற்றம் தேவை என்று யேசு வலியுறுத்தினார்"

இந்த அடிப்படை மாற்றத்தை விரும்பாத உரோமையரும், இஸ்ரயேலின் மேல் குடியினரும் யேசுவை ஒழிக்கத் திட்டம் தீட்டினர். யேசு ஆரம்பித்த புரட்சி அவரோடு மரணித்து விடும் என நினைத்து யேசுவுக்குக் கொலைத் தீர்ப்பளித்தனர். அதுதான் கொடிய சித்திரவதையும் சிலுவைச்சாவும். யேசு தான் சந்தித்த துன்பத்திற்குப் புதிய பரிமாணம் கொடுக்கின்றார். அதாவது துன்பத்தின் வழிதான் மீட்பு என்று பறைசாற்றுகின்றார். அவமானத்தின் சின்னமாகிய சிலுவையை விடுதலையின் - மகிமையின் - சின்னமாக்கினார்.

யேசுவின் புரட்சி மரணித்து விட்டது என்று கனவு கண்டு கொண்டிருந்தவர்களுக்கு யேசுவின் உயிர்த்தெழுதல் பெரிய சவாலாக அமைந்தது. அவரது புரட்சியும், அவர் போதிக்க முனைந்தவைகளும் அவரது கொள்கைகளும் அவரோடு சேர்ந்து உயிர்த்தெழுந்தன.

ஆம், இன்று எம்மண்ணில் அரங்கேறிக்கொண்டிருக்கும், அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கும் துன்பங்களுக்கும், தடயமே வெளியே தெரியாதவாறு புதைக்கப்பட்டுவிட்ட நீதிக்கும், மரணித்துப்போய்விட்ட மனிதத்திற்கும், அவமதிக்கப்பட்டுவரும் தியாகங்களுக்கும் நிச்சயம் உயிர்த்தெழுதல் உண்டு. இப்போது நாம் அனுபவித்துவரும் துன்பங்களும், தாங்கிவரும் சுமைகளும் எதிர்கால உயிர்த்தெழுதலுக்காகவே.

ஆகவே உயிர்த்தெழுதல் என்ற இலக்கை நோக்கிப் பயணம் செய்பவனுக்கு சாவு, துன்பம் எல்லாம் ஒரு பொருட்டாகத் தோன்றுவதில்லை. உயிர்ப்பை உணர்ந்தவன் மாற்றங்களை, விடுதலையை விரும்புகின்றான். உலகம் ஒதுக்குவதை விரும்பி ஏற்றுக்கொள்கின்றான்.

நீதிவேண்டி யாகம் நடத்தும் எமக்கும், எமக்குள்ளவைகளுக்கும் நிச்சயம் உயிர்த்தெழுதல் உண்டு என்ற நம்பிக்கையில் தொடர்ந்து பயணிப்போம்.

"ஒடுக்கப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், உணவு உறைவிடம் அற்றோர், கல்வியறிவு மறுக்கப்பட்டோர் இன்னபிற எளிய மக்களிடம் யேசுவின் உயிர்ப்பின் ஊற்றுக்கள் மறைந்திருக்கின்றன."

## உயிரோனின் உத்தானம்

உலகுக்காய் உயிர்ந்த உயிரோனின்
உத்தானம் உயிர்ப்பு விழா
இடியோடு மின்னல் பூமி பிளக்க
காத்திருந்த காவலர் கதி கலங்கி வீழ
பகலை ஒளியாக்கும் சுடரோனின் ஒளியாகி
விலையிலா இறை மைந்தன் உயிர்த்தெழுந்தார்
'தாகமாயிருக்கின்றேன்' என மொழி தலை சாய்த்து
இன்னுயிர் துறந்த தேவ மகன்
மேகத்தில் வெண்ணிலவாய் உயிர்த்தெழுந்தார்
மரணத்தை வெல்லல், மனிதனால் இயலுமா?
மரணத்தை வென்ற மாவீரனாய்,
மாபெரும் அதிசயத்தை மண்ணில் காட்டினார்
சரணம் ஐயா சரணம் மாபரனே சரணம்
இரங்கி எம் துன்பம் இதிலிருந்து உயிர்தெழ
அருகலித்தோம் ஐயா! ஆசி நீர் அளித்திடுக!

- *கவிதா ஜெயப்பிரகாசம்* -

## தேவனே என்னைப் பாருமே!

என்னரும் தேவனே என் பிரிய யேசுவே
விண்ணமர் தந்தையின் திருமிகு மைந்தனே
மன்னுயிர் மாண்புற மண்ணுதித்த தெய்வமே
அன்பையே கருவியாய் அகிலத்துக் குரைத்தவா
உன்னைப் போல் அயலவனை அன்பு செய் எனமொழிந்தீர்
கன்னத்தில் அறைந்திடில் காட்டுமறு கன்னமென்றீர்
என்னுடைய கன்னமதில் அறைந்திடில் பலமுறை மறு
கன்னமதைக் காட்டுதற்கு பிரியமுடன் உள்ளேனானால்
என்கண் முன்னிலையில் என்னயலான் உயிர் பிடுங்க
வன் செயல் புரிகுவோர் விசமமாய் வருகையிலே
என் கடன் ஏதென்று வழுத்துவீர் எம்பிரானே
என்னுயிர் ஈந்தேனும் மன்னுயிர் காத்திடவென்
நன்னுளம் நினைப்பது தவறன்று தெய்வமே
மன்குலம் மீட்டிட மரணத்தை ஏற்று நீர்
முண்முடி சூடியோர் சிலுவையைச் சுமந்துமா
விண்ணுயர் மலை மீதில் உம்மாவி நீர் துறந்தீர்
என்னினம் மீட்பு பெற சாவுதனை நானேற்று
நஞ்சினைக்கட்டியோர் தனைக்காவியே
விண்ணதிரும் ஓசையதில் என்னாவி நானிழந்தேன்
நன் முடி வாகிலெந்தன் ஆன்மாவை ஏற்றிடுவீர்
துன்முடி வென்றாலென் பாவந்தனைப் பொறுத்து
உன் கருணை முகத்தாலென் ஆன்மாவைப் பார்த்தருளும்


- *கவரி* -

# தர்மபுத்திரரின் கர்வபங்கம்...

ஒரு சமயம் தர்மபுத்திரருக்கு, தமது ஈகைக் குணத்தையும் விருந்தோம்பும் பண்பையும் குறித்து சிறிது கர்வம் தோன்றியது. இதை பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அறிந்து கொண்டு, தர்மபுத்திரருக்கு உண்மை நிலையை உணர்த்த முடிவு செய்து, அவரை அழைத்துக் கொண்டு மகாபலி அரசாளும் பாதாளலோகத்திற்குச் சென்றார்.

பல இடங்களில் சுற்றி வரும் போது தர்மபுத்திரருக்கு தாகம் ஏற்பட்டது. அங்குள்ள ஒரு வீட்டில் சென்று தண்ணீர் கேட்டார். அந்த வீட்டின் பெண்மணி ஒரு தங்கக் கிண்ணத்தில் தண்ணீர் கொண்டு வந்து தர்மபுத்திரருக்குக் கொடுத்தாள். தண்ணீரைக் குடித்துவிட்டு, கிண்ணத்தைத் திருப்பித்தந்தார் தர்மபுத்திரர்.

"ஐயா ஒருமுறை கொடுத்ததை, அது தங்கக் கிண்ணமானாலும் கூடத் திரும்பப் பெறும் வழக்கம் எங்கள் ராஜ்யத்தில் இல்லை. மேலும் ஒரு முறை உபயோகித்ததை, அது தங்கத்தால் செய்யப்பட்டிருப்பினும் வீசியெறிந்து விடுவோமே தவிர மீண்டும் பயன்படுத்தும் வழக்கமில்லை" என்று அப்



பெண்மணி கூறினாள்.

அவள் சொன்னதைக் கேட்டு தர்மபுத்திரர் வியந்தார். பகவான் சிரித்தார். பிறகு இருவரும் மகாபலியின் அரண்மனைக்குச் சென்றனர். மகாபலியிடம் தர்மபுத்திரரை பகவான் அறிமுகம் செய்து வைத்தார்.

"மகாபலி, இவர் தர்மபுத்திரர். தான தர்மங்கள் செய்வதில் புகழ் பெற்றவர். தினசரி ஐந்நூறு பேருக்கு அன்னதானம் செய்கிறார்."

இதைக்கேட்டதும் மகாபலி தன்னுடைய இரண்டு காதுகளையும் பொத்திக் கொண்டு, "வேண்டாம், வேண்டாம். என்னிடம் சொல்லாதீர்கள்! இங்கு என் ராஜ்யத்தில், என்னிடமிருந்து தானம் பெறுவதற்கு நான் எவ்வளவோ முயற்சி செய்தும் ஒருவர் கூடக் கிடைக்கவில்லை. இங்கே தானம் பெற்று வாழவேண்டும் என்ற நிலையில் ஒருவர் கூட இல்லை. 'கொள்வாரில்லாமையால் கொடுப்பாரில்லை'. நீங்களோ தர்மபுத்திரர் ஒவ்வொருநாளும் ஐந்நூறு பேருக்கு அன்னதானம் செய்கிறார் என்று சொல்கிறீர்கள். அப்படியானால் அவரது ராஜ்யத்தில் ஐந்நூறு ஏழைகள் இருக்கிறார்கள் என்பது நிச்சயமாகிறது. அதிலிருந்தே அவர் எவ்வளவு 'அழகாக' அரசாட்சி செய்கிறார் என்பது தெரிகிறதே! அப்படிப்பட்ட ஒரு பாவியைப்பற்றித் தெரிந்து கொள்ள நான் தயாரில்லை!" என்றார்.

மகாபலி சொன்னதைக் கேட்ட தர்மபுத்திரர் வெட்கத்தால் தலை குனிந்தார்.

## ஆசை வெட்க...........

(XI பக்கத் தொடர்ச்சி)

பார்த்துத் தெரிந்து கொண்ட அவருக்கு வேதனையை தாங்கமுடியவில்லை. வெட்கம் ஒருபுறம் பிடித்து விழுங்கியது.

"என்ன நடந்தது....?"

மாணவியைப் பார்த்துக் கேட்டார்.

"சேர் இவன் கடதாசியைச் சுருட்டி இரகசியமாக எனக்குமேல் சுண்டிக் கண்ணடிக்கிறான் சேர், அசிங்கமாய் கைகாட்டுகிறான் சேர்...... இவன் தொல்லை தாங்க முடியவில்லை சேர்......

"முந்தியும் உப்பிடிச் செய்தவனோ?"

"ஓம் சேர்... அண்டைக்கும் ஓர் நாள் உப்பிடிச் செய்தவன்"

"ஓகோ... வேறையென்ன குரங்குச் சேட்டை விட்டது இந்த தடிமாடு"

அவர் இந்த வார்த்தைகளைச் சொல்லி முடிக்கு முன் "கிளுக்" என்று மறுபடி சிரித்தாள், அகிலாதேவி. அந்தச் சிரிப்பொலி அவர் காதுகளில் ஈட்டியைப் பாய்ச்சின. தலையைத் தூக்கிப் பார்க்க இயலாது நாணத்தில் சாம்பினார்.

மனிதப் பலவீனம் அது. எல்லோருக்கும் உரியது. ஆனால் பலவீனத்துக்கு அடிமையாகி உள்ள ஒரு மனிதனால் நல்லதொரு எதிர்காலச் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியுமா? வேலியே பயிரை மேய்வதா? ஆசிரியன் ஆசிரியனாகத்தான் இருக்க வேண்டும். ஆசிரியனாக - குற்றம் நிறைந்தவனாக - அவனே வாழ்ந்து கொண்டு மாணவர்களைத் திருத்த முயல்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

குற்றமுள்ள மனசு குறுகுறுத்தது. இன்று ஆசிரியை அகிலாவின் ஏளனச் சிரிப்பு அவரை நல்வழிப்படுத்த வழிகோலியது. அவளையோ அவள் சிரிப்பையோ சட்டை செய்யாத புதிய மனிதனாக மாறினார். அந்த மாணவனைப் பார்த்து உறுமினார்.

"டேய் உனக்கு சேட்டை மெத்திப் போச்சு இல்லையா? குனியடா அங்கை" கத்தினார் அம்பலவாணர்.

*"ஆறுவது சினம்"*

*"ஆசை வெட்கமறியாது"*

*"ஊருக்கு உபதேசம். உனக்கல்ல; எனக்கல்ல"*

ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் சொல்லிக் கொடுப்பதை உச்சஸ்தாயியில் திருப்பிக் கூறுவது அம்பலத்தாரின் செவிகளில் விழுந்தது. பாடத்தை விட்டு வெளியே சென்று எடுத்து வீசப்பட்ட பாணம் அது என்பதை உணர அவருக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

மாணவன் குனிந்து கைகளால் நிலத்தை தொடுகிறான். அம்பலத்தாரின் பிரம்பு துள்ளி அவன் முதுகில் விளையாடுகிறது. அவர் ஆவேசம் தீர்ந்து நிமிர்கிறார்.

"போடா வகுப்பிற்கு" அவன் கண்ணீர் விட்டபடி வகுப்பிற்குச் செல்ல, மாணவி கண்ணீரைத் துடைத்தபடி செல்கிறாள்.

அவரோ என்றும் போல கூசிக் குறுகி கள்ளப் பார்வை பார்க்காது, அகிலாதேவியை நிமிர்ந்து நோக்குகிறார். திரும்பவும் அந்த ஏளனச் சிரிப்பு. ஆனாலும் அவள் அறிந்து வைத்திருக்கும் அம்பலவாணர் இறந்துவிட்டார் என்பது அவளுக்குத் தெரிய நியாயமில்லை.

# பகவத்கீதையின் தனிச்சிறப்பு

**மூன்று காரணங்களால் கீதை இணையற்ற நூலாக விளங்குகிறது. முதலாவதாக அது உபதேசிக்கப்பட்ட சந்தர்ப்பம். இரண்டாவதாக, அந்த உபதேசத்தைப் பெற்ற நபரின் தகுதி. மூன்றாவதாக, தனிநபரின் முயற்சிக்குக் கீதை கொடுக்கும் முக்கியத்துவம். இக்காரணங்களினாலேயே கீதை தன்னிகரற்று விளங்குகிறது.**



**தம் விமோசனத்திற்கு வழிதேடிக் கொள்வதில் வெற்றி பெற்ற ஒரு தனி நபர் இருந்தால்கூட, மனித ஜாதி முழுவதன் துன்பங்களும் அகலும்.**

**பகவத்கீதையின் விசேஷம் என்னவென்றால், இதை உபதேசிப்பதற்குப் போர்களத்தைப் பகவான் தேர்ந்தெடுத்ததும் போர் செய்ய மறுத்து, எந்த நிமிடத்திலும் தலை போய் விடக்கூடும் என்ற அபாயத்தில் இருந்த ஒருவனுக்கு இது உபதேசிக்கப்பட்டதும்தான். ஆன்மீக ஞானத்துக்கு மனிதன் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை இது காட்டுகிறது.**

- ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அருளுரை -

# அறிவுக் கண் மறைக்கும் ராஜோ குணம்!

வேட்டையாடச் சென்ற தசரதச் சக்கரவர்த்தி, புதர் மறைவில் ஆற்றில் இருந்து குடத்தில் நீர் முகர்ந்து கொண்டிருந்த சிரவண குமாரனைத் தவறுதலாக அம்பெய்து கொன்ற கதை நமக்குத் தெரியும்.

ஆற்று நீர் குடத்தினுள் நுழையும் போது எழுந்த சத்தத்தை யானை பிளிறும் ஒலி என்று தவறாகக் கணித்து, 'சப்தவேதி' என்ற அம்பை எய்துவிட்டான் தசரதன். இலக்கு கண்ணுக்குப் புலனாகாவிட்டாலும், சப்தம் வருமிடத்தைக் கொண்டே குறிதவறாமல் சென்று தாக்கும் சிறப்பு உள்ள அம்பு சப்தவேதி! குடத்தின் வாயை மறைத்துக் கொண்டு குனிந்து நின்றவாறு சிரவண குமாரன் நீர் முகர்ந்தால் சப்தவேதி முதலில் சிரவண குமாரனின் தலையை ஊடுருவிச் சென்று குடத்தினுள் நுழையவேண்டியதாயிற்று, இல்லாவிட்டால் சிரவணகுமாரன் இறக்க நேர்ந்திருக்காது!

யானைகளை யுத்த காலம் தவிர மற்ற சமயங்களில் கொல்லக்கூடாது என்று நமது சாஸ்திரங்கள் தெளிவாக வரையறுத்திருக்கின்றன. அறநெறி வழுவாத அரசன் தசரதன் இதை அறியாதவன் அல்லன். அப்படியிருந்தும் யானை பிளிறும் ஒலி கேட்டு அம்பு எய்தது ஏன்?

'சிறந்த அறிவாளிகள் கூட ரஜோகுணம் மேலிடும் போது பிழை செய்துவிடுவதுண்டு. வேட்டையில் அதிக பற்று வைத்ததால் புழுதி கண்ணில் விழுந்து பார்வையை மறைப்பது போல் வீரவிளையாட்டு ஆடும் ரஜோகுண வேகம் அவன் அறிவை மறைத்துவிட்டது. அதனால் யானையை வேட்டையாடக் கூடாது என்பதை மறந்து, யானை பிளிறுவதுபோல் ஒலி வந்த திக்கை நோக்கி தசரதன் அம்பு எய்துவிட்டான்!' என்று விளக்கம் தருகிறார் மகாகவி காளிதாசன் - தமது ரகுவம்ச காவியத்தில்.

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.151

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | ■ | 10 | 11 | | | ■ |
| | ■ | 12 | | | | ■ | 13 |
| 14 | 15 | | | ■ | 16 | 17 | |
| 18 | | | ■ | 19 | | | |
| ■ | 20 | | 21 | | ■ | | ■ |
| 22 | | ■ | 23 | | | | |

### சொற்சிலம்பம் இல. 151

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................................................

விலாசம்: ..............................................................................

..............................................................................

..........................இங்கே வெட்டுக..................................

முடிவுத் திகதி:- 28 - 04 - 2000

### இடமிருந்து வலம்

1. இம்மையும் மறுமையும். 5. சந்திரன். 7. தடுமாறவைக்கும் எண்ணப் போக்கு. 8. அமருவது இதில். 9. அருந்து. 10. அதிகமாதல். 12. செல்லுதல். 14. பிரதிக்ஞை. 16. ஒரு பிரிவு. 18. கொண்டாடு. 19.அழுக்கும் தன்மை. 20. காகம் கத்துவதை இப்படிக் கூறுவர். 22. நீர் தேங்கும் இங்கே. 23. நெஞ்சறைக்குப் பாதுகாப்புத் தருவதில் ஒன்று.

### மேலிருந்து கீழ்

1. குழம்பிப் போவதைக் குறிக்கும் சொல். 2. இந்தியாவில் வரவேற்புப் பெற்ற தேசிய விளையாட்டு. 3. பன்மையைக் குறிப்பது. 4. அழகு. 5.சுவர். 6. படுதா. 8. பல சேர்ந்த கூட்டம். 11. சுபாவ. 12. விளக்கக் குறிப்பு; பாட்டுகளுக்கு வழங்கப்படும். 13. விடை. 15. சாளரம். 17.இளைஞன்; முருகன். 19. இஸ்லாமியரின் கடவுள். 21. அந்தரப்படு.

### சொற்சிலம்பம் 149 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1. ஆசீர்வாதம். 6. சாவி. 7. சனி. 8. தூரு. 9. பாதகம். 11. மரம். 12.சம்பா. 13. அலம்பு. 14. லகரம். 16. அம்மன். 17. கல். 18. தர. 19.அரு. 20. கண்டும் காணாதது.

### மேலிருந்து கீழ்

1. அசாபாசம். 2. சீவிதம். 3. வாசம். 4. தனி. 5. விரும்புதல் 8. தூரம். 10. கபாலம். 11. மலம். 13. அரன். 15. கமலம். 16. அரண். 17. கருத. 18. தக. 19. அணா.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு:-** உஷா வெல்ஸி,
40, சென் பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**இரண்டாம் பரிசு:-** க.செல்வராசா,
சரஸ்வதி வித்திலாயல வீதி,
கரவெட்டி வடக்கு.

**மூன்றாம் பரிசு:-** வி.செல்வநாயகம்,
'சத்திரை'
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

முதற் பரிசு: ரூபா 150.00
இரண்டாம் பரிசு: ரூபா 100.00
மூன்றாம் பரிசு: ரூபா 50.00

புதிர்ப்போட்டி இலக்கம் 150 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.

# கல்கியும் கதம்பனும்

ஓர் ஊரில் கல்கியும் கதம்பனும் இருந்தார்கள். அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் நண்பர்களாகவும் இருந்து வந்தனர்.

கல்கி இரக்ககுணமுடையவன். தெய்வபக்தியும் உள்ளவன். ஆனால் அவன் ஏழையாக இருந்தான். அன்றாடம் ஏதோ ஒரு தொழில் செய்து அதில் வரும் பணத்தில் கால் பங்கைச் சேமித்து வைப்பான்.

கதம்பனோ இரக்கமற்றவன். கொஞ்சம் பண வசதி உள்ளவன். ஒருநாள் கல்கியின் தாய்க்கு சுகவீனம் ஏற்பட்டது. அந்நோய்க்கான வைத்தி



யத்திற்கு அதிக பணம் தேவைப்பட்டது. கல்கியோ ஏழை. அவன் பணத்துக்கு என்னசெய்வான்? தன்நண்பனிடம் சென்று கேட்கலாம் என்று எண்ணினான்.

அவன் நண்பனிடம் சென்று பண உதவி கேட்டான். கதம்பனோ பணம் தர மறுத்துவிட்டான். கவலையடைந்த கல்கி இறைவனைப் பிரார்த்தித்தான். கடவுள் அருளால் தனவான் ஒருவரது உதவி அவனுக்குக் கிடைத்தது. தாயாருக்கு வைத்தியம் செய்து குணப்படுத்தினான். பல நாள்கள் சென்றன. கதம்பனுடைய பிள்ளை ஒரு நாள் வீதி விபத்தில் சிக்கியதால் வைத்தியசாலையில் அனுமதித்தார்கள். அக்குழந்தைக்கு இரத்தம் தேவைப்பட்டது. ஆனால் வைத்தியசாலை இரத்த வங்கியில் அப்போது இரத்தம் இல்லை. குழந்தையோ உயிருக்குப் போராடியது. கதம்பன் எங்கும் இரத்தம் தேடினான். கிடைக்கவில்லை. சோர்ந்து போய் வைத்தியசாலையை வந்தடைந்தான். அப்பொழுதான் அவன் முதன் முதலாக தெய்வத்தை நினைத்தான்.

தன் நண்பனுடைய குழந்தைக்கு இரத்தம் தேவைப்பட்டதை யாரோ ஒருவர் மூலம் கல்கி அறிந்தான். உடனே அவன் தன் நண்பனுடைய குழந்தையின் துன்பத்தை தன்குழந்தையின் துன்பமாகக்கருதி ஓடோடி வைத்தியசாலையை அடைந்து தன்னுடைய இரத்தத்தை வழங்கினான். குழந்தையும் உயிர் தப்பியது.

கதம்பனும் தன் நண்பன் வந்து இரத்தம் வழங்கியதை அறிந்தான். அன்று அவன் தன் தாய்க்காக பண உதவி கேட்டதையும் தான் கொடுக்காததையும் நினைத்து வருந்தினான். இன்று தன் குழந்தையை நண்பன் காப்பாற்றியதை எண்ணி மகிழ்ந்தான். தன் நண்பனைக் காண ஓடிச் சென்றான். நண்பனைக் கட்டி அணைத்து அழுதான். கல்கியும் கதம்பனுக்கு ஆறுதல் வார்த்தை கூறி கடவுள் என்றும் எவரையும் கைவிடுவதில்லை எனச் சொன்னான். தன்நண்பனின் மனமாற்றம் கண்டு கல்கி கடவுளுக்கு நன்றி சொன்னான்.

*கி.கல்கிராஜ்.*
*தரம் 9.மானிப்பாய் இந்துக்கல்லூரி.*




*அம்மா அம்மா வாருங்கள்*
*அருமை அம்மா வாருங்கள்*
*பாடம் சொல்லித் தாருங்கள்*
*பசிக்கு உணவு தாருங்கள்*

*'அ' னா சொல்லித் தந்த*
*அருமை அம்மா வாருங்கள்*
*ஆசை மகள் எனக்கு நீங்கள்*
*அருமை முத்தம் தாருங்கள்*

*பள்ளி செல்லப் போகிறேன்*
*பசிக்கு உணவு தாருங்கள்*
*சிட்டாய்ப் பறந்து படித்திடுவேன்*
*பெருமை தேடித் தந்திடுவேன்!*

*சி.கலாராணி*
*தரம்10, பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.*




தொகுப்பு:- நம்பி




கார்ல் மாக்ஸ் ஓர் அரசியல் சிந்தனையாளரும் சமூகவியலாளரும் பொருளியலாளருமாவார். இவரது சிந்தனைகளின் அடிப்படையில் மலர்ந்ததுதான் 'மாக்சிசம்' எனப்படும் பொதுவுடமைக் கொள்கை ஆகும்.

இவர் ஜேர்மனியில் றைன் மாகாணத்திலுள்ள றையெட் என்னுமிடத்தில் ஒரு யூதக் குடும்பத்தில் 1818 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி பிறந்தார். பொன் (BONN) மற்றும் பேர்லின் ஆகிய பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்று பட்டம் பெற்றார்.

இவரது பரந்த அரசியல் சிந்தனைப் போக்கு இவரைப் பத்திரிகைத் துறையில் ஈடுபாடு கொள்ளச் செய்தது. 1842 ஆம் ஆண்டில் கொலோன் நகரிலிருந்து வெளிவரும் 'றெயினிச்சி செய்துங்' (Rheinische Zeitung) என்னும் பத்திரிகையின் ஆசிரியரானார். 1844இல் 'தி எக்கனோமிக் அன்ட் பிலோசொபிக்கல் மனுஸ்கிறிப்ற்' (The Economic and Philosophical Manuscript) அதாவது 'பொருளாதார மற்றும் தத்துவம் பற்றிய கையேடுகள்' என்ற நூலை எழுதி வெளியிட்டார். இதில் தனிமனித சுதந்திரத்தைப் பற்றியும், மனிதனுடைய மதிப்பைப் பாதிக்கும் சக்திகளைப் பற்றியும் விளக்கியுள்ளார். இந்நிலையில் அரசாங்கம் இவரது பத்திரிகைக்குத் தடைவிதித்தது. அரசாங்கம் இவரது பத்திரிகைக்குத் தடைவிதித்தபின் இவர் ஜேர்மனியை விட்டுப் பரீஸ் நகருக்குச் சென்றார். அப்பொழுது அங்கு வாழ்ந்த பிரெஞ்சு சோசலிஸ எழுத்தாளர்களுடன் நட்புக் கொண்டார். பிறெட்றிக் எங்கல்ஸ் என்பவருடன் ஏற்படுத்திக் கொண்ட நட்பு இவரது வாழ்நாள் முழுவதும் நீடித்தது.


*(மிகுதி அடுத்த வாரம்)*

* * * * * * * * * * * * * * * * * *

# பற்கள் பலவிதம்

மனிதனுக்குப் பற்களால் உண்டாகும் பயன்கள் பொதுவாக நாம் அறிந்த ஒன்று. சில விலங்குகளின் பற்களின் விசித்திரத் தன்மைகள் பற்றிப் பார்ப்போம்.


✷ எலிக்குஞ்சு பிறந்து 8 அல்லது 10 நாள்களுக்குள் பற்கள் முளைக்கத் தொடங்கி விடுகின்றன. ஒரு மாதத்திற்கு 3 செ.மீ.வீதத்தில் இப்பற்கள் வளர்கின்றன. எலி எதனையும் கொறிக்காமல் பற்களுக்கு வேலை கொடுக்காமல் இருந்தால் ஒவ்வொரு பல்லும் நாளடைவில் 70 செ.மீ. முதல் 100 செ.மீ. நீளம் வரை கூட வளர்ந்துவிடும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.



✷ யானைக்கு - அதன் ஆயுட்காலத்தில் குறைந்தது நான்கு தடவைகளாவது பற்கள் விழுந்து முளைக்கின்றன.



✷ உலகிலேயே மிகப்பெரிய பாலூட்டி நீலத்திமிங்கிலம்தான். இதன் எடை சுமார் 150 தொன். இதற்குப் பற்களே கிடையாது! ஆனால், இது தாயின் வயிற்றில் கருவாகி வளர்ச்சியடையும் போது பற்கள் இருக்கும். குட்டியாக வெளியே வந்ததும் பற்கள் மறைந்து விடுகின்றன.






பறவை ஒன்றின் உருவத்தை வரைவதற்கான படிமுறைகள் மேலே தரப்பட்டுள்ளன. இவ்வொழுங்கை பின்பற்றுவதன் மூலம் நீங்களும் சுலபமாக பறவை உருவம் ஒன்றை வரைந்து கொள்ளலாம்.




சிந்தனைச் சிதறல்களை
    சிந்துது இந்த மனம் - உடன்
சந்தனத் தேரினிலே
    சுற்றிச் சுழலவே
இந்த வயதினிலே
    கற்ற கல்வியே - எமக்கு
வந்து உதவிடும்
    வாழ்க்கை முழுதுமே.

பிச்சை எடுப்பினும்
    கற்றல் சிறந்தது - உன்
இச்சை இசைவுக்கு
    ஈட்டிடு கல்வியை
பச்சை மரத்தினில்
    ஆணி பதிவது
போலப் பதியுமே
    உந்தன் படிப்புமே.

ஆரம்பக் கல்வியை
    ஆரத் தழுவியே - கல்வி
பாரம் சுமக்கவே
    பழகிட வேண்டுமே
இடை நிலைக் கல்வியை
    ஈட்டும் பொழுதிலே - வாழ்வின்
தடைகள் தகர்த்திட
    தெரிந்திட வேண்டுமே.

உயர்தரக் கல்வியை
    உந்தன் மனமுமே
பயன்படுத்தித் தொழிலதை
    தொடங்கிட வேண்டுமே
அறிவு ஆறதை
    பெற்ற மானுடா - உன்
ஆயுள் முழுவதுமே
    கல்வி தேடடா!

*- எம்.சுயர்சன் -*
*கோண்டாவில்*

# உங்களுக்குத் தெரியுமா?

* கடையேழுவள்ளல்கள் என்று ஏழு பேர்களைக் குறிப்பிடுகிறார்கள். அப்படியானால் முதலேழு, இடையேழு வள்ளல்கள் இருந்திருக்கிறார்களா?

✦ இருந்திருக்கிறார்கள்.

குமணன், சகரன், சகாரன், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி ஆகியோர் முதலேழு வள்ளல்கள்.

அக்ரூபன், அந்திமான், சிசுபாலன், தந்தவக்கிரன், அரிச்சந்திரன், கர்ணன், சந்திமான் ஆகியோர் இடையேழு வள்ளல்கள்.

* தபால் தலைகளை(முத்திரைகளை) நாக்கில் தடவி ஒட்டுவது கெடுதலானதா?

✦ நிச்சயமாகக் கெடுதலானதுதான்!

தபால் தலைகளில் பூசப்படும் ஒட்டும் பதார்த்தங்கள் பழுதாகாமல் இருக்க இரசாயனப் பொருளொன்றையும் அதனுடன் சேர்த்திருக்கிறார்கள். இது உடலுக்குத் தீங்கை விளைவிக்கக் கூடியது. அதுமட்டுமல்ல, தபால் தலைகளை நாக்கில் தடவி ஒட்டுவது எவ்வளவு அநாகரிகமான செயல் என்று சிந்தித்துப்பாருங்கள்.

ஆனால் இவற்றைப்பற்றி யாருமே சிந்திப்பதாகத் தெரியவில்லை. அமெரிக்காவில் ஜான் கென்மையர் என்பவர் நான்கு நிமிடங்களில் 393 தபால் தலைகளை நாக்கில் தடவி ஒட்டி உலக சாதனை நிகழ்த்தி கின்னஸ் புத்தகத்திலும் இடம்பெற்றுவிட்டார் என்றால் பாருங்களேன்!

* ஐ.க்யூ (I.Q) என்கிறார்களே, இதன் பொருள் என்ன?

✦ இதைப்பற்றி ஒருபுத்தகமே எழுதிவிடலாம்! Intelligence Quotient என்பது இதன் விரிவாக்கம். அறிவு - செயலாற்றும் திறமையின் அளவு என்று இதனைத் தமிழில் கூறலாம்.

உடல் வளர்ச்சிக்கு ஏற்ற அறிவு வளர்ச்சியோ - வயதுக்கு ஏற்ற அறிவு வளர்ச்சியோ சிலருக்கு இருப்பதில்லை. வயதுக்கு ஏற்ற அறிவுத்திறனானது ஒருவருக்கு எந்த அளவிற்கு இருக்கவேண்டும் என்பதற்கு ஒரு அளவை ஆராச்சியாளர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். இதையே ஐ.க்யூ(I.Q) என்று பொதுவாக கூறுகின்றனர்.

வெளிச்சத்துக்கு மூலம் நெருப்பு என்பது போல அறிவுக்கு மூலம் அன்புதான்.

*- சான்றோர் வாக்கு*